பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 மாசி 04 திங்கட்கிழமை (16.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:082

பொதுசன நூலகம்
மாநகர சபை
யாழ்ப்பாணம்.

# வன்னியில் அரசியல் நடவடிக்கை; தமிழ்க் கட்சிகளை ஜனாதிபதி சந்திப்பார்

## கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுக்கப்படுமாம்

கொழும்பு, பெப்ரவரி 16

வன்னியில்-விடுவிக்கப்பட்ட பகுதிகளில், ஜனநாயக - அரசியல் - நடவடிக்கைகளை மேற் கொள்வது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழ்க் கட்சிகளுடன் விரைவில் ஆராயவுள்ளார்.

சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்படும் போது எவ்வித பாரபட்சமும் காட்டப்பட மாட்டாது. கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளுடன் கொண்டிருந்த தொடர்புகளைக் கருத்தில் கொள்ளாமல் அரசியல் நீரோட்டத்தில் உள்ள சகல தமிழ்க்கட்சிகளும் அழைக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியுள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், பெப்.16

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பணிகள் கப்பல் சேவை இன்று இடம்பெறமாட்டாது. அச் சேவை தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

மீண்டும் கப்பல் சேவை எப்போது எனத் தெரிவிக்க முடியாதுள்ளதாகவும் அந்த அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

சேவை ஆரம்பிக்கப் படும் போது அது குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் மேலும் கூறினார். (அ-1)

## முல்லைக் கடலில் விமானத் தாக்குதல்

கொழும்பு, பெப்.16

முல்லைத்தீவு கடல் நீரேரிக்கு வடக்கே உள்ள பகுதி மீது நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் விமானப் படையினரின் ஜெற் விமானங்கள் தாக்குதல்களை நடத்தின.

விடுதலைப் புலிகளின் இரு தாக்குதல் படகுகள் இத்தாக்குதலுக்கு இலக்காகின என்று விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார தெரிவித்தார். (சி)

## விமான, பீரங்கி, ஷெல் தாக்குதல்களில் 2 நாள்களில் 134 பொதுமக்கள் பலி! 208 பேர் காயம்!!

கொழும்பு, பெப்.16

முல்லைத்தீவு மாவட்டத்தில் நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் மற்றும் ஷெல், பீரங்கித் தாக்குதல்களில் மொத்தம் 79 அப்பாவிப் பொதுமக்கள் பலி எடுக்கப்பட்டனர். 99 பேர் காயமுற்றனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடத்தப்பட்ட ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் 55 பேர் உயிரிழந்ததுடன் 109 பேர் படுகாயமுற்றனர்.

இரண்டு நாள்களிலும் மொத்தம் 134 மக்கள் கொலையுண்டதுடன் 208 பேர் காய மடைந்ததாக இணைத்தளங்கள் தகவல் வெளியிட்டன.

இணையத்தளங்கள் வெளியிட்ட விவரங்கள் வருமாறு:-

புதுமாத்தளன் பகுதி மீது நேற்று ஞாயிற்றுக்கிழமை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பழை முன்னரங்க நிலைகளை மாற்றுவதற்கு பதிலாக புதிய நடைமுறைகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.16

தெல்லிப்பழை பாதுகாப்பு வலய முன்னரங்குகளை பின்னகர்த்தும் நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளமுடியாத காரணத்தால், மாற்று ஏற்பாடுகள் செய்வது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலய மீள்குடியமர்வு தொடர்பாக ஆராய்ந்துவரும் உயர் மட்டக் குழுவின் கூட்டம் நேற்றுமுன்தினம் பலாலியில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன், மகாஜனக் கல்லூரி அதிபர் திருமதி சிவமலர் ஆனந்தசயனன், தெல்லிப்பழை வைத்தியசாலை அதிகாரி திருமதி சிவசோதி சிவராணி, யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சை நிபுணர் எஸ். ஜெயக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில், தெல்லிப்பழை முன்னரங்க நிலைகளை பின்நகர்த்தி பாடசாலைகளையும் தெல்லிப்பழை வைத்தியசாலையும் இயங்குவது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

தெல்லிப்பழை முன்னரங்க நிலையை உடனடியாகப் பின்நகர்த்த முடியாத நிலை காணப்படுவதாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கீழ்வரும் புதிய

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மத்திய மாகாணத்தில் அரசுத்தரப்பு வெற்றி; வடமேல் மாகாணசபையின் இறுதி முடிவு ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 16

மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு பெரு வெற்றி பெற்றிருக்கிறது. மத்திய மாகாணத்தில் ஐ.ம.சு.கூட்டணி 36 ஆசனங்களையும் ஐ.தே.கட்சி 22 ஆசனங்களையும் பெற்றிருக்கின்றன.

வடமேல் மாகாணசபைக்கு உட்பட்ட புத் தளம் மாவட்டத்தில் புத்தளம் தேர்தல்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## காயமுற்றோரில் சிகிச்சை பூர்த்தியான 175 பேர் திருமலையில் இருந்து வவுனியாவுக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்

திருகோணமலை, பெப்.16

வன்னியில் இருந்து கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டவர்களில் சிகிச்சை பூர்த்தியடைந்த 175 பேர் நேற்று மூன்று பஸ்களில் வவுனியா நலன்புரி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர். வன்னியிலிருந்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஏற்பாட்டில் இரு தடவைகள் 778 பேர் திருகோணமலைக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர்.

காயமடைந்தோர், நோய்வாய்ப்பட்டோர், அவர்களின் பாதுகாவலர்கள் என் போர் அழைத்து வரப்பட்டிருந்தனர். இவர்கள் திருகோணமலை, கந்தளாய் ஆஸ்பத்திரிகளில்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் நேற்று திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை

### நூற்றுக்கணக்கானோர் கைதாகித் தடுத்து வைப்பு

கொழும்பு, பெப்.16

கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து நேற்று அதிகாலை முதல் மாலை வரையில் திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலொன்றை மேற்கொண்டுள்ளனர்.

இதில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கைதாகி பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டு தீவிர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருவதுடன், 300க்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பத்துக்கும் அதிகமான விடுதலைப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பூதுவில் நடைபெற்ற மோதலில் கொலையுண்ட இரண்டு இளைஞர்களின் சடலங்கள் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், பெப்.16

ஆவரங்காலுக்கு கிழக்கே கப்பூது பகுதியில் நேற்று முன்தினம் இரவு9.45 மணியளவில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் உயிரிழந்ததாக தெரிவித்து இரு இளைஞர்களின் சடலங்கள் நேற்று மாலை யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள மின்மாற்றிக்கு

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

### மஹிந்த அரசுடன் அணி சேர்ந்தமைக்காக

# இ.தொ.காவுக்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் மலையகத் தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டினர்

கொழும்பு, பெப். 16

''இலங்கைத் தீவு முழுவதிலும் தமிழ் மக்களை சொல்லொணா துன்ப துயரத்துக்குள் ஆழ்த்தி வரும் மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் கூட்டுச் சேர்ந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் மலையகத் தமிழ் மக்கள் நல்ல பாடம் புகட்டியிருக்கின்றனர்.

ஐக்கியதேசியக் கட்சியின் மரியாதையைக்காப்பாற்றிய அந்த மக்களுக்கு நான் தலை தாழ்த்தி வணங்கி நன்றி தெரிவிக்கிறேன்.''

- இவ்வாறு கூறியிருக்கின்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மத்திய மற்றும் வடமேல் மாகாண சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் குறித்துப் பத்திரிகைகளுக்குக் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்தத் தேர்தலில் நுவரெலியா - மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் ஐ.தே.கவின் பிரச்சாரப் பணிகளைமுன்னெடுக்கும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்தத் தேர்தலில் கண்டித் தொகுதிக்கு அப்பால் இத்தொகுதியில் தான்ஐ.தே.கட்சி வென்றுள்ளது.

இந்த நுவரெலியா - மஸ்கெலிய தொகுதி மலையகத் தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களைப் பெரும்பான்மையாகக் கொண்டது.

ஐ.தே.கட்சியின் மரியாதையைக் காப்பாற்றிய இத்தொகுதி மக்களுக்கு, பொதுவாக ஐக்கிய தேசியக் கட்சிக்கு தமது ஏகோபித்த ஆதரவை இத்தேர்தலில் வழங்கிய மலையக மக்களுக்கு நான் தலைதாழ்த்தி வணங்குகின்றேன்.

இலங்கை முழுவதும் வாழும் தமிழர்கள் வடக்கு என்றாலும், கிழக்கு என்றாலும், தெற்கு என்றாலும், மேற்கு என்றாலும், மலையகம் என்றாலும் ஐ.தே. கட்சியுடனேயே உள்ளனர்.

**அரசுத் தலைமை மீது தமிழர்கள் வெறுப்பு**

இலங்கை முழுவதும் வாழும் தமிழர்களை இம்சைக்கு உள்ளாக்கி வரும் இந்த அரசுத் தலைமை குறித்துத் தமிழ் மக்கள் மிகவும் கடுப்புடன் - வெறுப்புடன் - உள்ளனர். அதனை இத்தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டுகின்றன.

உயர்விலும், தாழ்விலும் ஐ.தே.கட்சியுடன் ஒன்றிணைந்து நிற்கும் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு மலையக மக்கள் திரண்டு வாக்களித்தமை மூலம் இந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்து நிற்கும் இ.தொ. காவுக்கும் மலையக மக்கள் முன்னணிக்கும் நல்ல பாடம் புகட்டியுள்ளனர்.

நுவரெலியா - மஸ்கெலியா தொகுதியில் அரசுத் தரப்புக் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வி இந்த இரண்டு மலையகக் கட்சிகளுக்கும் கிடைத்த பேரிடி - பேரடி - அன்றி வேறில்லை.

மலையக மக்கள் இப்போது நன்கு கற்றறிந்து விட்டார்கள். இனியும் அரசியல் தலைவர்களின் பொம்மலாட்டத்திற்கு ஆடும் கைப்பிள்ளைகளாக அவர்கள் இருக்க மாட்டார்கள். அரசியல் சுயலாபங்களுக்காக அணிசேரும் அரசியல் தலைவர்களால் அந்த மக்களை இனிமேலும் முட்டாளாக்க முடியாது - என்றார் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா எம்.பி. (சி)

## அம்பாறை கஞ்சிகுடிச்சாறில் கண்ணியில் சிக்கிய அதிரடிப்படை

கொழும்பு, பெப். 16

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை விசேட அதிரடிப்படையினர் கண்ணிவெடியில் சிக்கியதில் சிறிய சேதம் ஏற்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் விகாரை ஒன்றுக்கு அடிக்கல் நாட்டும் விழாவிற்கு சென்றுகொண்டிருந்த விசேட அதிரடிப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதலில் சிக்கி விசேட அதிரடிப்படைத் தரப்பைச் சேர்ந்த உயர் அதிகாரி உட்பட 12 பேர் உயிரிழந்தனர் என்றும் பலர் காயமடைந்துள்ளனர் என்றும் புலிகள் சார்பு இணையத்தளங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

இச்சம்பவத்தை அடுத்து அப்பகுதியில் விசேட அதிரடிப்படையினரும் இராணுவத்தினரும் இணைந்து தேடுதல் நடத்தினர் என்று அந்த இணையத்தளத்தில் கூறப்பட்டிருக்கிறது. (சி)

# மாகாணசபைத் தேர்தலில் ஐ.தே.க. தோல்வியடைய அரசின் யுத்தப் பிரசாரமே காரணம் என்கிறார் எஸ்.பி.

கொழும்பு, பெப். 16

அரசின் யுத்த பிரசாரமே ஐக்கிய தேசியக் கட்சி மாகாணசபைத் தேர்தலில் தோல்வியடையக் காரணம் என்று மத்திய மாகாண சபையில் அக்கட்சியின் சார்பில் முதன்மை வேட்பாளராகப் போட்டியிட்ட எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறு சம்பவங்கள் நீங்கலாக, மத்திய மாகாணத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு மக்கள் பெற்றுக்கொடுத்த வெற்றியை எவ்வித சந்தேகமும் இன்றித் தாம் ஏற்றுக்கொள்கின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் கண்டி ஜானகி ஹோட்டலில் நேற்று ஏற்பாடு செய்திருந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசும் போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மத்திய மாகாணத்தில் இத் தேர்தலில் சிங்கள வாக்காளர்கள் யுத்தத்தை ஆதரித்தே தமது விருப்பத்தைத் தெரிவிக்கின்றனர். இதன்மூலம் ஜனாதிபதி அபார வெற்றியைப் பெற்றிருக்கிறார். மக்கள் இப் பகுதியில் அமைதியாக இருந்து அரசை ஆதரித்திருக்கின்றனர். ஐ.தே.கட்சி தமது முழுப் பலத்தையும் இதற்காகப் பிரயோகித்தது. ஐ.தே.கட்சி மத்திய மாகாணத்தில் படுதோல்வியைத் தழுவாமல் இருக்கவே நாங்களும் உஷாராகச் செயற்பட்டோம்.

எமக்கு ஏற்பட்ட தோல்வி குறித்து நாம் ஐ.தே.கட்சி ஆதரவாளர்களைக் குறைகூற விரும்பவில்லை. யுத்தத்துக்கு எமது கட்சி எதிராக இருக்கவில்லை.

இத் தேர்தல் முடிவின் பின்னர் நாம் மாகாணசபை முதலமைச்சரோடு இணைந்து அபிவிருத்திப் பணிகளுக்கு உதவத் தயாராகவே இருக்கிறோம். தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோருடனும் எவ்வித பேதமும் இன்றி இதன் பின்னரும் எமது பணியைத் தொடருவோம். தொண்டமான், சந்திரசேகரன் ஆகியோரைவிடவும் அவர்கள் தரப்பில் இருந்து வந்து எம்மோடு இத் தேர்தலில் இணைந்துகொண்டவர்களை நான் பெரிதாக மதிக்கின்றேன்.

யுத்தம் என்ற போர்வையில் அரச சொத்துகள் நாசமாக்கப்பட்டமையையும் சொத்துகள் சூறையாடப்பட்டமையையும் நாம் இன்றும் கண்டிக்கின்றோம்.

மத்தியமாகாணசபைத் தேர்தல் முடிவுகள் எனது எதிர்கால வேலைத்திட்டங்களுக்கு எவ்வித தடையாகவும் இருக்கா.

ஐ.ம.சு.முன்னணியின் வெற்றியின் மத்தியில் எமது கட்சியின் வேலைத் திட்டங்களை முன்னெடுக்கவும் கட்சியை மேலும் உயிரூட்டவும் எமக்குக் கிடைத்த வெற்றி துணையாக இருக்கும் என்றார். (அ-சி)

# மரண அறிவித்தல்

# வேலுப்பிள்ளை நடராசா

## (ஆசாரியார் -வேலணை, ஸ்தாபகர்: மாரிமுத்து கட்டட ஒப்பந்த நிறுவனம்)

வேலணை, வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் இல.51, துரைராஜா வீதி, வண்ணார் பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராசா நேற்று (15.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சொர்ணலட்சுமி (ராசாத்தி), செல்வநாயகம் (தங்கராசா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நேசகுமார் (மாரிமுத்து கட்டட ஒப்பந்த நிறுவனம்), ராமகுமார் (கனடா), குகனேஸ்வரி, வரதகுமார்(கனடா), தேவகுமார்(கொக்குவில்), புவனேஸ்வரி (புஸ்பா), நடனகுமார் (பிரான்ஸ்), தயாளகுமார் (கனடா), சுரேந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜமலர் (கருணா), பிரேமகுமாரி(கனடா), விக்கினேஸ்வரநாதன், வித்தியா(கனடா), தில்லைநாயகி (ஆசிரியை, ஒஸ்மானியாக் கல்லூரி), சுதாநிதி (பிரான்ஸ்), சுகிதா(கனடா), ரஜனி (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனும் செல்லத்துரை, நாகேஸ்வரி, ராஜேஸ்வரி, காலஞ்சென்ற சரவணமுத்து மற்றும் நாகரத்தினம்(சின்னராசா), பரமேஸ்வரி, காலஞ்சென்ற கணேஷ் மற்றும் தேவநாயகி, நித்தியானந்தன், புஸ்பராணி, மங்கையர்திலகம், நந்தகுமார், விஜயகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் நிவேதிகா, நிருத்திகா(யா/ இந்து மகளிர் கல்லூரி), குருபரன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), சரவணன்(யா/இந்துக் கல்லூரி), கௌரீசன், மாதுரி, கனிரதன், தனுரதன்(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), அபிராமி, ஆரபி, நாகரட்சன், ஆரணி, தாட்சாயினி, அபிஷேக், அக்சன், ஆர்த்தி, சௌமியா, சந்தோஷ், எனோஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.02.2009)திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இல.51,துரைராஜா வீதி, வண்ணார் பண்ணையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நிரந்தர முகவரி:*
*'வேலகம்',*
*வங்களாவடி,*
*6 ஆம் வட்டாரம், வேலணை.*

*தற்காலிக முகவரி:*
*51, துரைராஜா வீதி,*
*வண்ணார்பண்ணை.*
*[illegible] 021 222[illegible]*

*(82776)*

**தகவல்:**
**ந.நேசகுமார் (மகன்),**
**ந.தேவகுமார்(மகன்).**

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராணுவ மேலாதிக்கப் போக்குக்கு கிடைத்ததே இத்தேர்தல் வெற்றி

எதிர்பார்க்கப்பட்டபடி மத்திய, வடமேல் மாகாண சபைத் தேர்தல்களில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரு வெற்றியீட்டியிருக்கின்றது. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கவும் மற்றும் ஜே.வி.பியும் கூட எதிர்பார்க்கப்பட்டபடியே மண் கவ்வியுள்ளன.

வடக்கு யுத்த வெற்றியின் தொடர்ச்சியாகத் தேர்தல் வெற்றியும் அரசுக்குக் கிட்டியிருக்கின்றது என்பதில் ஐயமில்லை.

தென்னிலங்கைத் தரப்பின் வசனங்களில் கூறுவதாயின்,'புலிகளின் பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதற்கு ராஜபக்ஷ அரசு எடுத்திருக்கும் கடும் போக்குக்கு இலங்கை மக்கள் வழங்கிய ஏகோபித்த அங்கீகாரம் இது' என்று குறிப்பிடலாம்.

ஆனால், ஈழத் தமிழரின் இனத்துவ ஆன்மாவில் ஆழ ஊறிக் கிடக்கும் தேசம், தேசியம், சுயநிர்ணயம், இனத்துவ உரிமைகள் போன்ற சிந்தனைக் கிடக்கைகளை இராணுவ வல்லாதிக்கப் பலம் மூலம் சிதைத்து, துடைத்து, அடியோடு இல்லாது அழித்தொழிக்கும் தென்னிலங்கை பௌத்த, சிங்கள ஆதிக்கத் திமிருக்கு தெற்கு மக்களின் ஒருசாரார் கொடுத்த அங்கீகாரம்தான் இது என்பது வெள்ளிடைமலை.

ஈழத் தமிழர்களின் ஆயுத பலத்துக்கு எதிரான தெற்கின் யுத்த வெற்றிகளைத் தனது அரசியல் ஆதாயமாக மாற்றும் மஹிந்த அரசின் தந்திரோபாயத்துக்குக் கிடைத்த வெற்றி இது என்று கூறுவதும் முற்றிலும் சரியானதே.

வடக்கு, கிழக்கில் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக முடுக்கிவிட்டு அதில் வெற்றிகளை அறிவித்துக்கொண்டே -

கிழக்கு மாகாணசபை மற்றும் சப்பிரகமுவ மாகாண சபை, வடமத்திய மாகாணசபை , வடமேல் மாகாண சபை, மத்திய மாகாணசபை என ஐந்து மாகாண சபைகளையும் சோடி சோடியாகக் கலைத்து, தேர்தல்களை நடத்தி வெற்றிக்கொடியை நாட்டிவிட்டு அந்தக் களிப்பில் எக்காளமிடுகிறது அரசு.

இந்த வரிசையில் மேல்மாகாணசபையும், ஊவா மாகாணசபையும் கலைக்கப்பட்டுள்ளன. அவற்றிலும் அரசின் 'தேர்தல் வெற்றி நடை' தொடரும் என்பதில் சந்தேகமில்லை. எல்லாம் இராணுவ வெற்றி என்ற அத்திபாரத்தில் கட்டப்படும் பம்மாத்துகள்தாம்.

அவற்றைத் தொடர்ந்து,எஞ்சியுள்ள வடக்கு மாகாண சபைக்கும், தெற்கு மாகாணசபைக்கும் கூடத் தேர்தல்களை நடத்த அரசுத் தலைமை முற்படலாம்.

அது மட்டுமல்ல, மாகாணசபைத் தேர்தல்களைத் தொடர்ந்து நாடாளுமன்றத்துக்கான பொதுத்தேர்தலையும் -

அதன்பின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தற்போதைய பதவிக்காலத்தில் முதல் நான்கு ஆண்டுகள் இந்த நவம்பர் 17 ஆம் திகதி முடிவடைந்த கையோடு அடுத்த பதவிக்காலத்துக்கான (2011 நவம்பர் முதல் 2017 நவம்பர் வரையான காலத்துக்குரிய) ஜனாதிபதித் தேர்தலையும் கூட முற்கூட்டியே -

இந்த வரிசைத் தொடரில் அரசுத் தலைமை அடுத்தடுத்து நடத்த முற்படக்கூடும்.

இராணுவ வெற்றிகளினால் தென்னிலங்கையில் கிளர்ந்துள்ள ஆதரவு எழுச்சியை அரசியல் லாபமாக்கும் அரசுத் தலைமையின் உத்தியில் இத்தகைய திட்டம் ஒன்றே ஆழப் புதைந்து கிடப்பதாக விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் இத்தகைய தேர்தல்களும், முடிவுகளும் ஜனநாயகம் இந்தத் தேசத்தில் எழுச்சி பெற்று, மலர்ச்சியுற்று, பிரவகிக்கின்றது என்பதற்கான அடையாளங்கள் அல்ல என்பதே உண்மையாகும்.

தென்னாசியாவின் மூத்த பத்திரிகையாளர் ஒருவர் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்ட வரைவிலக்கணம் இங்கு ஈண்டு நோக்கற்பாலது.

''ஜனநாயகம் என்பது வெறுமனே வாக்களிப்பு மூலமான தேர்தல்களை நடத்தி முடிப்பது மட்டுமல்ல. 'ஜனநாயகம்' என்ற கருத்து - அல்லது சொற்பதம் - அடக்கும் விடயம் இதற்கும் அப்பால் மிக விசாலமானது. அது, தனிப்பட்டவர்களின் நியாயமான உரிமைகள், மக்களின் அதிகாரங்கள், சட்டத்தின் ஆட்சி, அடிப்படை சிவில் மற்றும் மனித உரிமைகளை மதித்தல், அடக்கப்பட்டவர்கள் மற்றும் சிறுபான்மையினரின் உரிமைகள் ஆகியவற்றோடு நல்லாட்சியுடனும் (ஜனநாயகம்) நேரடியாகத் தொடர்பு பட்டது.'' - என்பதை வெளிப்படையாக அந்தப் பத்திரிகை ஆய்வாளர் சுட்டிக்காட்டுகின்றார்.

அவர் கூறுவது போல வெறுமனே வாக்களிப்பும், வன்செயல்கள் குறைந்த தேர்தலும் சேர்ந்து 'ஜனநாயகம்' என்றாகி விட்டது. அப்படியாகுமெனில், இப்போது இலங்கையிலும் இடம்பெற்றுள்ள தேர்தல்களும் முடிவுகளும் இத்தேசத்தில் ஜனநாயகத்தின் மாண்புகள் பெரும் பிரவாகம் எடுத்து ஓடுகின்றன என்றே கொள்ளத்தக் கதாகிவிடும்.

ஆனால், யதார்த்தத்தில் அத்தகைய நிலைமை இங்கு இல்லை என்பதுதான் வருத்தமளிக்கும் உண்மையாகும்.

சிறுபான்மையினரை அடக்கி, ஒடுக்கும் ஆட்சிப் பீடத்தின் பேரினவாதச் சிந்தனைக்கு, அத்தகைய பேரினவாத மேலாதிக்க எண்ணத்தில் ஊறிக்கிடக்கும் பெரும்பான்மையினர் ஒன்று சேர்ந்து மீண்டும் அங்கீகாரமளிப்பதை ஜனநாயகத்தில் மாண்பாக - பெருமையாக - கருதி மதிக்கவே முடியாது. அப்படி மதிப்பதில் அர்த்தமில்லை.

அந்த வகையில் இங்கு இந்த 'ஜனநாயக வெற்றி' என்பது இராணுவவாத மேலாதிக்கத்துக்குக் கிடைத்த வெற்றியன்றி வேறில்லை.

---

# வன்னியிலுள்ள பொதுமக்களின் பாதுகாப்பு; ஆராய்ந்து வருகிறது ஐ.நா.பாதுகாப்புச் சபை

## செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் தகவல்

நியுயோர்க், பெப்.16

பல்லாயிரக் கணக்கான மக்களின் உயிர்களைப் பாதிக்கும் நெருக்கடியான ஒரு நிலைமை ஏற்படும்போது அது குறித்து செயலில் இறங்க வேண்டிய கடப்பாடு ஐ.நா.செயலாளர் நாயகத்துக்கு இருக்கிறது. அத்துடன், பாதுகாப்புச் சபைக்கு அதுபற்றி அறிவிக்க வேண்டியதும் அவருடைய கடமை. தற்போது அதுபற்றிய ஆய்வு நடைபெற்று வருகின்றது. பொதுமக்களைக் காப்பாற்றுவதற்கு மேற்கொண்டும் என்னென்ன செய்ய முடியும் என்பது பற்றியும் ஆராயப்படுகின்றது.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் சார்பில் பத்திரிகையாளர்களுக்கு வாரம் தோறும் வழங்கப்படுகின்ற செய்தி விளக்கத்தின் போது, இலங்கை தொடர்பான மேற்கண்ட தகவல் செயலாளர் நாயகத்தின் பேச்சாளரினால் தெரிவிக்கப்பட்டது.

செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் மிச்சேல் மொன்டஸ் மற்றும் பொது சபைத்தலைவரின் பேச்சாளர் ஒன்றிக் யெவெஸ் ஆகிய இருவரும் இந்தச் செய்தி விளக்க நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இலங்கையில் மோதல்கள் இடம் பெறும் இடங்களில் தினந்தோறும் 40 பொதுமக்கள் பலியாவதாக இலங்கை அரசாங்கமே ஒப்புக்கொண்டுள்ளது. இந்த விவகாரத்தில் தலையிடும்படியும் ஏன் அமைதி காப்பாளர்களை அனுப்பும்படியும் கூட ஐரோப்பிய யூனியனின் தென்னாசியாவுக்கான பேராளர்களிடமிருந்து கோரிக்கை வந்துள்ளது. மேலும் நலன்புரி முகாம்கள் என்று கூறப்படுபவை வெறும் தடுப்புக்காவல் முகாம்களாக உள்ளனவென்றும் கூட இப்போது தகவல் கிடைத்துள்ளது. மோதல் நடக்கும் இடங்களிலிருந்து வெளியேறும் மக்கள் இந்தத் தடுப்பு முகாம்களில் வைக்கப்படுவார்கள் என்றும் அங்கிருந்து அவர்களால் வெளியேற முடியாது என்றும் கூறப்படுகின்றது. இந்தவேளையில் ஐ.நா.என்ன சிந்தித்துக் கொண்டிருக்கின்றது? முன்னர் போர் நிறுத்தம் ஒன்றுக்கு ஐ.நா. அழைப்பு விடவில்லை என்பது தெரியும். இப்பொழுது அதன் சிந்தனைப் போக்கு எவ்வாறு இருக்கிறது?

இவ்வாறு செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு ஐ.நா.செயலாளர் நாய கத்தின் பேச்சாளர் பதில் அளித்தார். அவர் கூறியதாவது:

**ஐ.நா.பாதகாப்புச் சபையில் இலங்கை பற்றி ஆய்வு நடக்கிறது**

செயலாளர் நாயகம் தமது கவலையை வெளியிட்டிருக்கிறார் என்பது உங்களுக்குத் தெரியும். தமது ஆசியாவுக்கான பயணம் தொடர்பாகப் பாதுகாப்புச் சபை உறுப்பினர்களுக்கு விளக்கியபோது இந்த வாரம் அவர் பாதுகாப்புச் சபையிலேயே இலங்கை தொடர்பாக தமது கவலையை வெளியிட்டார். ஆசியப் பயணத்தின் போது இலங்கை ஜனாதிபதி உட்பட பலரோடு கலந்துரையாடல்கள் நடத்தியிருந்தார். ஆயிரக்க ணக்கான மக்களின் உயிர் சம்பந்தப் படும் போது அதுதொடர்பாகச் செயலில் இறங்கவேண்டிய கடப்பாடு அவருக்கிருக்கின்றது. அப்படியான பிரச்சினையை பாதுகாப்பு சபையின் கவனத்துக்குக் கொண்டுவருவது அவரது கடமையும் ஆகும். அங்கு பொதுமக்களை எந்த அளவுக்குக் காப்பாற்ற முடியும் என்பது பற்றி இப் பொழுது ஆராயப்பட்டு வருகின்றது.

ஐ.நா.வழங்கும் நிதி ஆதாரங்கள் யு.என்.டி.பி.மற்றும் நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் நிதிகள் உயிர் தப்பிச் செல்லும் மக்களை அடைத்து வைப்பதற்கான தடுப்பு முகாம்கள் அமைக்கப்பயன்படுத்தப்படவில்லையென்பது உறுதிப்படுத்தப்படுகின்றதா? என்ற கேள்விக்குப் பேச்சாளர் அளித்த பதில்:

எமக்கு கொஞ்சமாகவே தகவல் கிடைக்கிறது. தடுப்பு முகாம்கள் பற்றிய தகவல்களை நாங்கள் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் எந்த வட்டாரத்திலிருந்தும் எதுவித தகவலும் எமக்குக் கிடைக்கவில்லை. அந்த முகாம்களில் ஐ.நா. பிரசன்னமாய் இருக்கவில்லை. அந்த முகாம்களின் நிலைமை பற்றி எம்மால் நேரில் அறிய முடி யாது. எனவே இன்னும் அதிக தகவல் களைப் பெற்றுக் கொள்ள முயன்று வருகின்றோம்-என்றார் பேச்சாளர். (ப)

# நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,பெப்.16

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஒறேற்றர் சி.சுப்பிரமணியத்தின் 15ஆவது ஆண்டு நினைவுப் பேருரை நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் இளம் விஞ்ஞானியும் யாழ்.பல்கலைக்கழக பௌதிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி பு.ரவிராஜன் ''நவீன விஞ்ஞானக் கற்கைகளில் காலத்தின் தேவை'' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார். (202-9)

# இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்த அமைதிப் படையை அனுப்பவேண்டும்

## தமிழர் நல உரிமைப் பேரவை வேண்டுகோள்

கொழும்பு, பெப்.16

இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்த சர்வதேச அமைதிப் படையை அங்கு அனுப்ப வேண்டும் என இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை உலக நாடுகளுக்கு வேண்டுகோள் மனு ஒன்றை அனுப்பவுள்ளது.

பேரவைத் துணைக்குழுவின் அமைப்பாளர் அமைச்சர் துரைமுருகன் இத்தகவலைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினை தொடர்பாக விரிவாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் தி.மு.க.வின் துணை அமைப்பான இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் 2ஆவது கூட்டம் சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் இலங்கை தமிழர் பிரச்சினை குறித்து விரிவான, ஆக்கபூர்வமான விவாதம் நடத்தப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்ற குடியரசுத் தலைவர் பிரதீபா பட்டில் உரைக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

துணைக்குழுவின் அமைப்பாளர் அமைச்சர் துரைமுருகன் கருத்துத் தெரிவிக்கையில் இலங்கையில் அமைதி நிலவ வேண்டும். அதற்கு இந்திய அரசும் மற்ற நாடுகளும் முன்வர வேண்டும்.

துணைக்குழுவினர் விரைவில் டில்லி சென்று குடியரசுத் தலைவர் பிரதிபா பட்டில், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி மற்றும் வெளிநாட்டுத் தூதர்களைச் சந்தித்து இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி வலியுறுத்தவிருக்கின்றோம்.

சர்வதேச சங்கங்களுக்கு இது தொடர்பாக மத்திய அரசு கடிதங்களை அனுப்ப வேண்டும் என்று வலியுறுத்தவிருக்கின்றோம்.

ஐ.நா.மன்றத்தின் மூலம் இந்தப் பிரச்சியை எப்படி அணுகுவது என்று இன்றைக்கு நாங்கள் முடிவெடுத்திருக்கின்றோம்.

இலஙகையில் உடனடியாக போரை நிறுத்த, இலங்கைக்கு சர்வதேச அமைதிப்படையை அனுப்ப வேண்டுமென உலக நாடுகளுக்கு இலங்கை தமிழர் நல உரிமை பேரவை வேண்டுகோள் மனு அனுப்ப வேண்டும் என்று முடிவெடுத்திருக்கின்றோம்''- என்றார். (202)

# புலம்பெயர் தமிழர்களின் போராட்டங்களினால் இந்தியா, பிரித்தானியாவின் போக்கில் மாற்றம்

கொழும்பு, பெப்.16

இந்தியா, பிரித்தானியா ஆகிய நாடுகளின் போக்கில் தற்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்கு உலகம் எங்கும் வாழும் தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் போராட்டங்களே காரணம் என கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

இலங்கையில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரினை முடிவுக்குக் கொண்டு வருவது தொடர்பான அரசியல் வழிமுறைகளை ஆராய்வதற்கும், அங்கு போரினால் துன்பப்படும் மக்களின் மனிதாபிமான தேவைகளை கண்டறிவதற்கும் என பிரித்தானியா சிறப்புத் தூதுவர் ஒருவரை கடந்த வாரம் நியமித்தது.

இதற்குச் இலங்கை அரசு அதிகப்படியான எதிர்ப்புக்களை காட்டி வருகின்ற போதிலும் பிரித்தானியா தனது போக்கில் இருந்து பின்வாங்குவதாக இல்லை. பிரித்தானியா இலங்கைக்குச் சிறப்புத் தூதுவரை விரைவில் அனுப்பவும் திட்டமிட்டுள்ளது. அதனையும் இலங்கை அரசு எதிர்த்து வருகின்றது.

பிரித்தானியாவின் இந்த மாற்றத்திற்கு பிரித்தானியாவில் வாழும் தமிழ் மக்கள் அந்த அரசுக்குக் கொடுத்து [illegible] அழுத்தமே காரணம் என கொழும்பு அரசு நம்புகின்றது. அங்கு வாழும் தமிழ் மக்களுக்கு ஆதரவாக பிரித்தானியாவின் தொழிற்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெய்த் வாஸ் செயற்பட்டு வருகின்றார். இவருக்குப் பிரித்தானியாவில் வாழும் ஆசிய மக்களின் 16ஆயிரம் பேரின் வாக்குப் பலம் உள்ளது.

இலங்கையில் இடம்பெற்று வரும் போரை நிறுத்தக் கோரி அண்மையில் பிரித்தானியாவில் மிகப்பெரும் பேரணி ஒன்றும் இடம்பெற்றிருந்தது. பிரித்தானியாவின் பிரதமர் கோடன் பிறவுண், இந்திய அரச தலைவர் பிரதீபா பட்டில் ஆகியோர் இலங்கை தொடர்பான விவகாரங்களை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர். போர் நிறுத்தப்பட வேண்டும் எனவும் விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் பேச்சுக்களில் ஈடுபட வேண்டும் எனவும் தெரிவித்த இந்திய அரச தலைவர், விடுதலைப் புலிகள் விரும்பினால் ஆயுதங்களைக் கைவிடலாம் எனத் தெரிவித்தது இந்தியாவின் போக்கில் ஏற்பட்ட மாற்றமாகவே இலங்கை அரசு பார்க்கின்றது- என்றுள்ளது.(202)

### நாளை

| | |
|---|---|
| மாசி 05 | 17.02.2009 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | அட்டமி |
| | மு.இ. 07.29 வரை |
| நட்சத்திரம்: | அனுசம் |
| | பி.இ. 06.31 வரை |
| சுபநேரம்: | 11.02 - 12.32 |
| ராகுகாலம்: | 03.32 - 05.02 |

## அம்புலன்ஸ் சேவையை பெறுபவர்களில் இவர்களுக்குக் கட்டணம் இல்லை

### சுகாதாரப் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

யாழ்.மாவட்டத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள அவசர அம்புலன்ஸ் சேவையில் விசேட தேவையுள்ளவர்களுக்கு கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது என்று யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 11ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள அவசர அம்புலன்ஸ் சேவையில் எரிபொருள் செலவினை ஈடுசெய்வதற்காக நோயாளி ஒரு வரிடமிருந்து 300 ரூபா அறவிடப்படவுள்ளது.

விபத்துக்களின் போது காயமடைந்தவர்கள், நலன்புரி நிலையங்களில் வதியும் மக்கள், வறுமையான நிலையில் உள்ளவர்கள் ஆகியோருக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படும் நோயாளி வழியில் இறக்க நேரிடின் சம்பந்தப்பட்டவர்களிடமும் கட்டணம் அறவிடப்படமாட்டாது என்றும் அவர் அறிவித்துள்ளார். (1-9)

## வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சை

இலங்கை வலைப்பந்தாட்ட சங்கம் வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர்களுக்கான பரீட்சையை இம்மாதம் 28 ஆம் திகதி நடத்த இருக்கின்றது.

பரீட்சைக்கான விண்ணப்பங்களை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டியுள்ளதால் மத்தியஸ்தர் தரம் 1,2,3க்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் நாளைமறுதினம் புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் சந்திக்குமாறு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத் தலைவர் திருமதி ஜே.எவ்.ஏ.ரூபசிங்கம் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் மாவட்டத்தில் உள்ள சகல வலைப்பந்தாட்ட அணிகளும் தமது கழகத்தின் சார்பில் இரண்டு பிரதிநிதிகளையும் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (4-86)

---

## எல்லா வகை இலக்கியங்களும் படைத்த

கலாபூஷணம்

**அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் நூல்கள்**

1) **நவீன இலக்கியங்களைக் கற்பித்தல்**
   புதிய பாடல்நூல்களில் உள்ள பாடங்களுக்காக விளக்கங்களும் விமர்சனங்களும
2) **படிப்பும் நடிப்பும்**
   மாணவர்கள் படிப்பதற்கும் நடிப்பதற்கும் பொருத்தமான 8 நவீன நாடகங்கள்
3) **இலக்கிய ஒப்பியல்**
   வீடற்றவன், நாகம்மாள் நாவல்களின் ஒப்பாய்வு

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு: 10.01.1937 உதிர்வு: 17.01.2009

### திருமதி கனகசபை சிவபாக்கியம்

இன்று (16.02.2009) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிரியையிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அருளையா (மகன்),
லீலாவதி (மருமகள்)
(அதிபர், யா/மயிலிட்டி றோ.க.த.க.பா., ஆனைக்கோட்டை).

*அச்செழு,*
*நீர்வேலி.*

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 | 18 |
| ★ | ★ |
| 02 | 01 |
| ★ | ★ |
| 1988 | 2009 |



### அமரர் மு.திருக்குமரன் (ரமணன்)

**என்றும் எம்முடன் இனிமையாய் வாழ்ந்து விரைவில் விண்ணிற்கு ஏகிய எம்மைந்தா மண் உள்ளவரை உனைமறவோம்**

**கடந்த 18.01.2009 அன்று இறையடி சேர்ந்த எமது குலவிளக்கின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு அவரது பிறந்த நாளான இன்று (16.02.2009) வில்லூன்றி புனித தீர்த்தத்திலும் 18.02.2009 அன்று அந்தியேட்டி அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும் எனவும் அறியத்தருக்கிறோம்.**

*பிளவத்தை,*
*வட்டுக்கோட்டை.*

**குணரட்ணம் குடும்பம்,**
**வஸ்தியான் பேக்கரி,**
**சுண்டிக்குளி.**

---

## கோண்டாவில் சிவமஹாகாளி வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம், பெப்.16

கோண்டாவில் கிழக்கு பொற்பதி வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிவ மஹாகாளி அம்மன் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி முற்பகல் 10மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி தேர்த்திருவிழா உற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன. பெருந்திருவிழாவின் போது தினமும் காலை 8.30மணிக்கு, பி.ப. 2.30மணிக்கும் அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தொடர்ந்து அடுத்த மாதம் 10ஆம் திகதி மாரி அம்மன் அபிஷேகத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி பிராயச்சித்த அபிஷேகம், வாகன பூசையுடன் பெருந்திருவிழா நிறைவுபெறும்.

இம் முறை பங்குனிமாத திருக்குளிர்த்தி விழா ஒவ்வொரு திங்கட்கிழமையும் சிறப்பாக இடம்பெறவுள்ளது. (அ-9)

## கட்டடத்தொகுதியில் தீ; கொச்சிக்கடையில் ஒருவர் பலி!

கொழும்பு, கொச்சிக்கடை றெக்கிளமேசன் பகுதியில் வர்த்தகக் கட்டடத் தொகுதியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற தீவிபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மேலும் நால்வர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அதிக புகையை உட்கொண்டமையால் மூவர் மயக்க நிலையிலேயே இருந்தனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தகவல் தெரிவித்தன.

தீயணைப்புப் படையினரின் தீவிர முயற்சியால் தீ கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீ எவ்வாறு பரவியது என்பதை அறிவதற்குப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## துன்னாலைப் பிரதேசத்தில் மாலை நேர வகுப்பு

கட்டைவேலி, பெப்.16

துன்னாலைப் பகுதியில் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் மாணவர்களுக்கு இலவச மாலை நேர வகுப்பை பருத்தித்துறை - கட்டைவேலி மெதடிஸ்த சேகரப்பிரிவு ஆரம்பித்துள்ளது.

கட்டைவேலி மெதடிஸ்த தேவாலயத்தில் தினமும் மாலையில் இடம்பெற்று வரும் மாலை நேர இலவச வகுப்பில் துன்னாலைக் கிராமத்தைச் சேர்ந்த 70 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (202-275)

## வீதிப் போக்குவரத்து கருத்தரங்கு மானிப்பாயில்

யாழ்ப்பாணம், பெப்.16

மானிப்பாய பரிஷ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் மானிப்பாய் சென்.ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையின் மாணவர்களுக்கு வீதிப்போக்குவரத்துத் தொடர்பான செயலமர்வும் கருத்தரங்கும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறவுள்ளன. (202)

## தென்மராட்சி அதிபர்கள் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், பெப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.

## தொண்டர் ஆசிரியர்கள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.16

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கத்தின் கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை 8.30மணிக்கு யாழ். ஆரியகுளம் சந்தியில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது என சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (202)

---

## மணப்பெண் தேவை

**யாழ்ப்பாணம்இந்துகௌரவகுடும்பம், 49வயது, குறைந்த செவ்வாய் தோஷமுடைய, விவாகரத்துப்பெற்ற (பிள்ளைகள் இல்லை), சிறு நிறுவனம் ஒன்றை நடத்திவரும், சிறந்த குடும்பப் பின்னணியைக் கொண்டவருக்கு 40 வயதிலும் குறைந்த அதே குடும்பப் பின்னணியைச் சேர்ந்த தொழில் பார்க்காத பெண் தேவை. சீதனம் எதிர் பார்க்கப்பட மாட்டாது. விதவைகள், விவாகரத்துப்பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம். குடும்ப விவரங்கள், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல: 3173 மே/பா.உதயன், யாழ்ப்பாணம்.**

---

## கண்ணீர் அஞ்சலி

*எங்கள் அன்பு நண்பன் ந.நேசகுமாரின் பாசமிகு தந்தை*

### வேலுப்பிள்ளை நடராசா

*இயற்கை எய்திய செய்தி அறிந்து மிகுந்த துயரடைகிறோம். அமரரை இழந்து துடிக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்*

*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

சண்.வாமதேவன் (அதிபர்), இரா.செல்வவடிவேல் (ஆசிரியர்),
ஞான.திருக்கேதீஸ்வரன் (ஆசிரியர்).

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாதுகாப்பு
உத்தியோகத்தரும்,
நலன்புரிச்சங்க அங்கத்தவருமான,

### இராமலிங்கம் மகேந்திரன்

அவர்கள் கடந்த 13.02.2009

**அன்று இறைபத மெய்தினார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது நலன்புரிச் சங்கத்தின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

பாதுகாப்புப் பகுதி
யாழ்.பல்கலைக்கழகம்.

பாதுகாப்பு உத்தியோகத்தர்
நலன்புரிச்சங்கம்.

---

## மரண அறிவித்தல்கள்

### *கனகராசா யோகராசா* (முன்னாள் மாநகர ஊழியர்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம, 2A, அம்மன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா யோகராசா 12.02.2009 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2009) திங்கட்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.30 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2 A, அம்மன் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### *செல்லப்பா நடேசு* (இளைப்பாறிய அதிபர்)

கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நடேசு 13.02.2009 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் கனகரத்தினம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மாணிக்கத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் நிர்மலா (லண்டன்), சியாமளா (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும் கெமுனு நாணயக்கார, சண்முகப்பிரபு ஆகியோரின் அன்பு மாமனும் டிலினி, பிரசன்னா, இந்துஜா, சஞ்சயன், விஜேய் ஆகியோரின் அன்புப் பேரனும் அன்னம்மா, வள்ளியம்மை, காலஞ்சென்ற சண்முகம்பிள்ளை, இராசதுரை (சின்னக்கிளி), புவனேஸ்வரி, காலஞ்சென்ற கனகரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2009) திங்கட்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

96, UPPLINGHAM AVE., STANMORE.
MIDDLESEX HA 7 2JX TEL-0044-2089075251

தகவல்: G.நிர்மலா,
S.சியாமளா (பிள்ளைகள்).

### *கந்தையா கோபாலசாமி*

வேதவுடையாள் வளவு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை வீதி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கோபாலசாமி (இலங்கை மின்சார சபை, சுன்னாகம், ஓய்வு பெற்ற ஊழியர்) நேற்று (15.02.2009) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - செல்லம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்ற நாகநாதர் - தில்லைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் நந்தமோகன் (கனடா), நவஜீவன், நவரூபன், நளாயினி (ஜேர்மனி), சிவரூபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் நிறஞ்சனா (கனடா), யசிந்தா (ஆசிரியர், சுழிபுரம்), ஜெயச்சந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனாரும் முகுந்தன், திவாகர், ஜெசிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் நவரத்தினத்தின் (கனடா) அன்புச் சகோதரரும் மல்லிகாதேவி (கனடா), சுப்பிரமணியம், அன்னபூரணம், பரமேஸ்வரி, செல்வராசா, சிந்தாமணி (கொழும்பு), தவராசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆசைப்பிள்ளை, காலஞ்சென்ற நடராசா, காந்திமதி, பவளராணி ஆகியோரின் சகலனும் பிரபாகரன் (ஜேர்மனி), கிருபாகரன் (கனடா), வேகா (கனடா) ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2009) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காங்கேசன்துறை வீதி,*
*மல்லாகம்.*

தகவல்:
மனைவி, நவஜீவன் (மகன்).

# மருந்து விசிறி பழுக்க வைத்த பழங்கள் குடாநாட்டுச் சந்தைகளில் விற்பனை

யாழ்ப்பாணம்,பெப்.16

குடாநாட்டுச் சந்தைகளில் மருந்து விசிறப்பட்டு பழுக்கவைக்கப்பட்ட மாம்பழம், வாழைப்பழம் என்பன விற்பனை செய்ய பட்டு வருகின்றன.

குறிப்பிட்ட பழங்கள் மருந்துகள் விசிறப்பட்டு, பழுக்க வைக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அதனை உறுதிப்படுத்தக் கூடிய ஆய்வு கூட வசதிகள் இன்மையால் சட்டப்படி நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவிக்கின்றார்கள்.

பழவகைகள் குறிப்பிட்ட காலத்தினுள் பழுதடைந்து விடுவதனால் ஏனைய பொருள்கள் போன்று கொழும்புக்கு அனுப்பி ஆய்வு செய்து பெறுபேறுகளைப் பெறமுடியாத நிலைமை காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

மருந்துகள் விசிறப்பட்டு பழுக்க வைக்கப்படும் பழ வகைகள் பக்க விளைவுகளை ஏற்படுத்த முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (202-68)

## கசிப்பு உற்பத்தி செய்த பெண் ஒருவருக்கு அபராதம் விதித்துத் தீர்ப்பு

வலி.வடக்கு,பெப்.16

கசிப்பு உற்பத்தி விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிபதி ரி.ஆர்.பிரபாகரன் ஒரு லட்சத்து 85 ஆயிரம் ரூபா அபராதமாக விதித்துள்ளார்.

அண்மையில் சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வடாலை தலைமயில் சென்ற பொலிஸ் குழுவினர் ஊரெழு மேற்கில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 96 போத்தல் கசிப்பு மற்றும் ஆயிரத்து தொளாயிரம் கிறாம் கோடா என்பவற்றைக் கைப்பற்றினர்.

சந்தேகத்தின் பெயரில் தவராசா சசிகலா என்பவரை கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

குறிப்பிட்ட நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து நீதிபதியினால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (202-86)

## பருத்தித்துறை வைத்தியசாலையில் மூன்று நாள் சிரமதானப் பணி

வடராட்சி,பெப்.16

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை சுற்றாடல், வைத்தியசாலை ஊழியர்களாலும் பருத்தித்துறை- கட்டைவேலி சேகரப் பிரிவைச் சேர்ந்த பெண்களினாலும் சிரமதானம் மூலம் சுத்திகரிப்புச் செய்யப்பட்டது.

வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஒன்றினைந்து இரு நாள்களும் பருத்தித்துறை-கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த பெண்கள் ஒரு நாளுமாக மூன்று தினங்கள் இச்சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது.

(202-236)

## காரைநகர் பிரதேசத்தில் நெற்செய்கை அறுவடை

யாழ்ப்பாணம்,பெப்.16

காரைநகர் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கையின் அறுவடை கடந்த வாரம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேசத்தில் நெற்செய்கை இம்முறை ஓரளவு நல்ல விளைவைத் தந்துள்ளதாகவும் உரிய காலத்தில் காரைநகர் கமநல சேவைகள் நிலையம் ஊடாக போதியளவு பசளை மற்றும் களை கொல்லி என்பன மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்மையால் அதிகளவானோர் நெற்செய்கையில் ஈடுபட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கடந்த நவம்பர் மாதத்தில் பெய்த கடும் மழையினால் ஒரு சில வயல் நிலங்கள் அழிவடைந்தன எனினும் ஏனைய வயல் நிலங்களில் நல்ல விளைச்சல் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல் அறுவடையை மேற்கொள்ள கமநல சேவைகள் நிலையத்தினால் விவசாயிகளுக்கு நெல் அறுவடை இயந்திரம் வாடகைக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

இதனால் நெல் அறுவடை செய்யும் வேலையாளர்களுக்கான தட்டுப்பாடு ஓரளவு நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (202-250)

## சத்திய சங்கமும் ஞானகோட்டமும் அடங்கிய கட்டடத் தொகுதி வேம்பிராயில் அமைப்பு

யாழ்ப்பாணம்,பெப்.16

அருட் பெருஞ்சோதி, வள்ளலார் இராமலிங்கம் சுவாமிகளின் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கமும், சத்ய ஞான கோட்டமும் அடங்கிய பிரமாண்டமான கட்டடத் தொகுதி பல இலட்சம் ரூபா செலவில் சாவகச்சேரி வேம்பிராயில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமரச சன்மார்க்கக் கோட்டம் சுமார் ஓர் ஏக்கர் பரப்பிலான காணியில் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத் தொகுதியில் சத்திய திருமலையும், சத்ய ஞானக் கோட்டமும் ஒன்றாக அமைக்கப்பட்டுள்ளதுடன் ஏழு திரைகள் நீக்கம் செய்து சுவாமி தரிசனம் செய்யத்தக்கவாறு இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத் தொகுதி 2006 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் திறந்து வைக்க ஏற்பாடாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்னர் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் காரணமாகப் பிற்போடப்பட்டது.

(202-131)

குடாநாட்டின்
பிரதேசச் செய்திகள்

## தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

# யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,பெப்.16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில் செயற்படுத்திவரும் 'நாட்டை வெல்ல வைக்கும் திறமைசாலிகள் வேலைத்திட்டத்தின்' கீழ் யாழ். மாவட்டத்தில் இளைஞர் யுவதிகளுக்குப் பல்வேறு பயிற்சி நெறிகளை நடத்தவுள்ளது.

ஆங்கிலம், கணனிதுறைசார் பயிற்சி வகுப்புகள் வார இறுதி நாள்களிலும் பிரயோக செயன்முறைப் பயிற்சிகள் வதிவிட அடிப்படையிலும் நடத்தப்படவுள்ளன.

ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் 6 பாடங்களில் சித்திபெற்ற 18-28 வயதுக்குட்பட்ட இருபாலரும் இப் பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பிக்க விரும்புவோர் இன்றும், நாளையும் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தரிடமோ அல்லது மாவட்ட அலுவலகத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.உதவி இயக்குநர் ரி.சிவதட்சணாமூர்த்தி கேட்டுள்ளார்.

மேலதிக விவரங்களை 021 222 2526 என்றதொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202)

## பண்டத்தரிப்பு கோயிலுக்கு புதிய தேர் இருப்பிடம்

தொல்புரம்,பெப்.16

பண்டத்தரிப்பு காலையடி ஞான வேலாயுத சுவாமி கோயிலுக்கு புதிதாக தேர் இருப்பிடம் பரிபாலன சபையினரால் துரிதகதியில் அமைக்கப்பட்டு வருகின்றது.

மேற்படி கோயில் முதல் முறையாக எதிர்வரும் மே மாதம் கொடியேற்றத் திருவிழா ஆரம்பமாகித் தேர்த்திருவிழா இடம்பெறும்.

வைகாசி அமாவாசைத் திதியில் தீர்த்தோற்சவமும் இடம்பெற உள்ளதாக பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(202-119)

## உதவிப் பணம்பெறும் அட்டைகள் மீளாய்வு

நவாலி,பெப்.16

வலி.தென்மேற்கு, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் பொது சன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களின் பணம் பெறும் அட்டைகள் குறிக்கப்பட்டுள்ள திகதிகளில் மீளாய்வு செய்யப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் 16 ஆம் திகதி ஜே/143 சண்டிலிப்பாய் பிரிவு அலுவலகத்திலும், 24 ஆம் திகதி ஜே/144 மாகியப்பிட்டி பிரிவு அலுவலகத்திலும், ஜே/145 வடலியடைப்பு பிரிவு அலுலகத்திலும், ஜே/146 பண்டத்தரிப்பு பிரிவு அலுவலகத்திலும் மீளாய்வு நடைபெறும்.

சம்பந்தப்பட்டவர்கள் குடும்ப அட்டை, உதவிப் பணம் பெறும் அட்டை, அடையாள அட்டை என்பனவற்றுடன் காலை 9 மணிக்கு வருகை தருமாறு சமூக சேவை உத்தியோகத்தர் அருந்தவராசா கேட்டுள்ளார். (202-100)

# சமூகத்தைப் பாதுகாக்க ஊடகக் கல்வி அவசியம்; மாணவர்களுக்கு இது குறித்து விழிப்புணர்வு தேவை

## யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் கருத்து

வேலணை,பெப்.16

சர்வதேச இலத்திரனியல் ஊடகங்களில் பரம்பலின் ஆதிக்கத்தை எவற்றாலும் தடுக்க முடியாது. எமது சமூகத்தைப் பாதுகாக்க, ஊடகக்கல்வி அறிவு பயன்படும்.

அவற்றால் ஒவ்வொரு பாடசாலை ஆசிரியரும் ஊடகக் கல்வி தொடர்பாகப் பேசவேண்டும். மாணவர்களையும் சமூகத்தையும் ஊடகக்கல்வி தொடர்பான விழிப்புணர்வு பெற வைப்பது அதிபர், ஆசிரியர்களின் பொறுப்பும், கடமையும் ஆகும்.

யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசியர் என்.சண்முகலிங்கன் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊடகங்கள் கற்கை நிலையத்திலே நிலையத்தின் பணிப்பாளர் வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கிலே பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே துணைவேந்தர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தமதுரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகக் கல்வியானது இன்று உலகிலே 40 இற்கு மேற்பட்ட நாடுகளிலே பாடசாலைக் கலைத்திட்டத்திற்காக கற்பிக்கப் படுகிறது. தரம் 6,7 லிருந்தே கற்பிக்கப்படுகிறது.

இந்நிலையில் எமது நாட்டிலே ஊடகக் கல்வி அறிவு மிகத் தாழ்ந்த மட்டத்திலேயே இருக்கிறது. சாதாரண கல்வி அறிவிலே நாம் 90 வீதத்திற்குக் கூடிய அடைவினை உடையதாக நிற்கின்றோம். நவீன கணனி அறிவு, ஊடக அறிவு என்பவற்றில் தாழ்ந்த நிலையிலேயே இருக்கின்றோம். இதனை மாற்றி அமைப்பதற்கு அதிபர், ஆசிரியர்கள் முன்வர வேண்டும்.

இன்றைய பாடசாலைக் கலைத்திட்டத்திலே தரம் 10, 11 அறிமுகம் செய்யப்பட்ட ஊடகக் கல்விப் பாடத்தை மாணவர் தெரிவு செய்ய ஊக்குவிக்க வேண்டும். எதிர்காலத்தில் ஊடகக் கல்வி கட்டாய பாடமாக கொண்டு வரப்பட வேண்டும்.

ஊடகக் கல்வி மூலம் எமக்கென ஓர் ஊடக கலாசாரத்தை வளர்த்துக் கொள்ள முடியும். இதனால் எமது பிள்ளைகள் பிற கலாசாரப் பாதிப்புக்களிலிருந்து தப்பிக் கொள்ளவும் பிள்ளைகளின் உள, உடல் தாக்கங்களைத் தவிர்த்துக் கொள்ளவும் முடியும். எதிர்காலச் சந்ததி எமது பண்பாடு,விழுமியங்களிலிருந்து விலகிச் செல்வதை எமக்கான ஊடகக் கலாசாரம் தடுக்க முடியும்.

ஆகவே அதிபர்களும், ஆசிரியர்களும் ஊடகக் கல்வி தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஊடக வள நிலையம் மூலம் வழங்கப்படும் டிப்ளோமா மற்றும் பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் அறிமுகம் செய்யப்பட்டுள்ள ஊடகக்கல்வி பட்டப்படிப்பு என்பவற்றை மாணவர் தெரிவு செய்து கற்பதற்கு ஊக்குவிக்க வேண் டும்- என்றார்.

இந்நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வரத்தினம், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஷ்ணன், கலைப் பீடாதிபதி சோ.கிருஷ்ணராசா, பொருளியல் பீடாதிபதி சிவநாதன் ஆகியோரும் உரையாற்றினர். (202-267)

யாழ்.மாவட்ட சாரணர் பாசறை விழா யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
சாரணர்களின் அணிவகுப்பை முதலாவது படத்தில் காணலாம்.
குருளைச் சாரணர்கள் தாம் அமைத்த மாந்தை மூலையின் முன் இருப்பதையும் நிகழ்வில் விருந்தினர்களான யாழ்.வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கத் தலைவர் சு.பத்மநாதன், மாவட்ட ஆணையாளர் ஜி.செபஸ்ரியாம்பிள்ளை, சாரணத் தலைவர் எஸ்.முத்துக்குமார், சென்.ஜோன்ஸ் கல்லூரி அதிபர் வண.என்.ஜே.ஞானபொன்ராஜா அடிகளார் ஆகியோர் சாரணர்களுடன் நிற்பதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (325)

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.

### பிரமிளா சீவரத்தினம்

பெறுபேறு: 3ஏ ( யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

நான் சாதாரண தரம் வரை ஒரு சராசரி மாணவியாகத்தான் இருந்தேன். ஆனால் உயர்தரம் சென்றபோது எனக்குள் ஏற்பட்ட எதிர்பார்ப்பும், என்னால் முடியும் என்ற நம்பிக்கையுமே 3ஏ சித்தி பெற வைத்தது என எண்ணும்போது மகிழ்ச்சியாக உள்ளது.

என்னுடைய அப்பா சுருட்டுத் தொழில் செய்பவர். கட்டுவனை சொந்த இடமாகக் கொண்டவர். எனது குடும்பம் இடம்பெயர்ந்து தற்போது உரும்பிராயில் வசிக்கிறோம். என்னுடைய வெற்றிக்கு எனது அம்மாவினதும், குடும்பத்தினரதும் உறுதுணை அளவற்றது. என்னுடைய அம்மாவின் ஆசையினை நிறைவேற்றி விட்டேன் என்பதிலும், எனது இலக்கினை நிறைவேற்றி விட்டேன் என்பதிலும் நான் களிப்படைகிறேன்.

நான் எனது புலமைப்பரிசில் பெறுபேற்றுடன் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் சேர்ந்து கொண்டேன். நான் உயர்தரத்தில் கலைத்துறையைத் தெரிவு செய்து கொண்ட போது விரும்பிய பாடத்தெரிவு பாடசாலையில் காணப்பட்டமையும் எனது அதிஷ்டம் என்றே கூறுவேன். நான் அரசியல் விஞ்ஞானத்தில் அதிக நாட்டம் கொண்டிருந்தேன். அந்த வேளையில் அரசியல் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு தகுதியான ஆசிரியர் வந்தமை எனக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே நான் கூறுவேன். நான் எதிர்காலத்தில் சட்டத்தரணியாக மிளிர வேண்டும் என்பது எனது இலக்கு. என்னுடைய வெற்றிக்கு எனது பாடசாலை அதிபரும் தமிழ், வரலாறு, அரசியல் பாட ஆசிரியர்களும், தனியார் நிறுவன ஆசிரியர்களுமே சிறப்பான வழிகாட்டிகளும், மறக்க முடியாத நன்றிக்குரியவர்களும் ஆவார்கள். முதற் பாடமான தமிழ்ப்பாடத்தில் என்னால் நேரத்திற்கு விடை அளிக்க முடியாது போனமையால் மிகவும் கவலை அடைந்து இருந்தேன். இதனால் மிகுதிப் பாடங்களிலும் என்னால் முழுமையாக திருப்திப்பட முடியாது போய்விட்டது. சோர்வடைந்து இருந்த என்னை எனது அம்மாவும், ஆசிரியர்களும் ஆறுதல் படுத்தினர். இந்தவேளையில் 3 ஏ கிடைத்தது மட்டற்ற மகிழ்ச்சியே....!

### மைதிலி தங்கராஜா

பெறுபேறு: 2ஏ, சி (வட இந்து மகளிர் கல்லூரி)



நான் ஆரம்பக் கல்வியை யா/புற்றளை மகா வித்தியாலயத்தில் கற்றேன். அதன்பின் எனது உயர் கல்வியை யா/வட இந்து மகளிர் கல்லூரியில் தொடர்ந்தேன். அங்கு தமிழ், அளவையியல், பொருளியல் என்ற பாடத்தெரிவுகளை தெரிவு செய்திருந்தேன். என் பாடத் தெரிவுக்கு எனது பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள் உட்பட எனது தனியார் கல்வி ஆசிரியர்களும் பங்களிப்பு செய்து தேவையான புத்திமதிகளையும் தந்திருந்தார்கள்.

நான் சிறுவயதிலேயே என் பெற்றோர்களை இழந்தமை எனக்கு பெரும் இழப்பாகத் தோன்றினாலும் அதுவே என் வாழ்க்கையில் பலவிதமான அனுபவங்களைத் தந்துள்ளது. அனுபவம்தான் ஒரு மனிதனுக்கு பல விதமான வெற்றிகளைத் தரும் என்பது என் வாழ்க்கையில் நான் கண்ட உண்மை. எனக்கு இரண்டு மாமாக்கள் வெளிநாட்டில் உள்ளனர். அவர்கள்தான் எனக்கு கண்கண்ட தெய்வங்கள். அதேபோல இங்கு எனக்கு பாது காவலராக அன்ரியும், சித்தப்பாவும் இருக்கிறார்கள். எனக்கு ஒரு அக்காவும் உண்டு. இவர்களின் ஒத்துழைப்பு இருந்தமையால்தான் என்னால் பரீட்சையில் தோற்ற முடிந்துள்ளது.

மேலும் எனது விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும், படித்து என் காலில் நிற்க வேண்டும் என்ற ஆர்வமும்தான் எனது வெற்றிக்கு காரணம்.

### சுபாஸ்கரன் சாலவன்

பெறுபேறு: 3ஏ (கொக்குவில் இந்துக் கல்லூரி)

தரம் 1 முதல் 5 வரை இணுவில் மத்திய கல்லூரியிலும் தொடர்ந்து கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றேன். உயர்தரத்தில் கணிதத் துறையினைத் தேர்ந்தெடுத்தேன்.

சுய முயற்சி கூடுதலாக இருந்தது அனைத்து பயிற்சி பரீட்சைகளிலும் நல்ல புள்ளிகளைப் பெற்றதினால் '3ஏ' பெறுபேற்றை ஆவலுடன் எதிர்பார்த்தேன். அந்த இலக்கினை அடைந்தேன் என்ற மகிழ்ச்சியுடன் மாவட்ட நிலை ஆறாவது என்றதிலும் பெரும் மகிழ்ச்சியடைந்தேன்.

கல்லூரி அதிபர், மூன்று பாட ஆசிரியர்களும் சிறப்பான முறையில் என்னை வழிப்படுத்தினார்கள். சக நண்பர்களுக்கிடையே எழுந்த போட்டிகளும் மற்றும் எனது குடும்பத்தினரின் ஊக்குவிப்பும் இத்தகைய சிறப்பான பெறுபேற்றுக்கு வழி சமைத்தன.

சாதாரண தரப் பரீட்சையில் எதிர்பார்த்த பெறுபேறு கிடைக்கவில்லையே என்று எந்த மாணவனும் சோர்ந்து விடக் கூடாது. அதனைச் சவாலாக வைத்து உயர்தரப் பரீட்சையில் சாதிக்க வேண்டும்.

### துஷ்யா இராசலிங்கம்

பெறுபேறு: 2ஏபி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

நான் சிறந்த பெறுபேற்றினைப் பெறுவதற்கு அதிபர், ஆசிரியர்கள், சகமாணவிகள் மற்றும் பெற்றோர், தனியார் கல்வி நிறு வன ஆசிரியர்கள் என்போரது ஒத்துழைப்பு உந்து சக்தியாக அமைந் தது. கலைப்பிரிவில் நான் விசேட தகுதியுடைய பாடங்களான தமிழ், வரலாறு, அரசியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்து பயின்றேன். பரீட்சையை எதிர்கொள்ள தயாரான சமயம் மின்வெட்டுப் போன்ற இடர்களை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் போது பெற்றோர் எனது நலன் கருதி பல உதவிகளைச் செய்து தந்தனர்.

நான் ஆரம்பக் கல்வியை நயினாதீவு கணேஷா வித்தியாசாலையில் படித்து 2004ஆம் ஆண்டு யா/ இந்து மகளிர் கல்லூரியில் இணைந்து கொண்டேன். நான் சிறந்த பெறுபேற்றினைப் பெற ஆரம்பக் கல்வியை பயின்ற பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்பும் ஒரு பங்கு வகித்தது.

நான் இரவு நேரங்களில் அதிக நேரம் படிப்பேன். அதிகாலையில் சற்றுத் தாமதமாகவே எழும்பிப் படிப்பேன். பாடசாலையிலும், கல்வி நிலையங்களிலும் பயின்ற பாடங்களை வைத்து எனது மொழிநடைக்கேற்ப மாற்றி அமைத்துப் படித்தேன்.

நான் எனது பெறுபேற்றினை இணையத்தளத்தில் பார்வையிட்டதும் சந்தோஷம் அடைந்தேன். எனினும் மாவட்ட நிலையில் சற்றுத் தொலைவில் நிற்பதனால் பல்கலைக்கழக அனுமதி கிடைக்குமோ என்ற ஏக்கத்துடன் இருக்கிறேன். எனது இந்த மன ஏக்கத்தினை எல்லாம் வல்ல நயினை நாகபூசணி அம்பாள் [illegible] கிறேன். எதிர்காலத்தில் ஒரு நல்ல நிலையில் இருந்து எனது [illegible] நற்சேவைகளை வழங்கக் கூடிய ஒருவராக வர வேண்டும் என்பதே எனது அவா!

### சிறிகாந்தன் சிவதர்சன்

பெறுபேறு: 3ஏ (கொக்குவில் இந்துக் கல்லூரி)

நான் ஆரம்பக் கல்வியை உடுவில் மகளிர் கல்லூரியிலும் உயர் கல்வியினை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் கற்றேன்.

சுய கற்றல் முறையே எனக்குப் பெரிதும் உதவியது. பாடசாலையிலும் தனியார் கல்வி நிலையங்களிலும் கற்றதை விட நானாகப் பல புத்தகங்களை தேடிப் படித்ததே எனக்கு மிகவும் உதவியது. பரீட்சையை எழுதிய பின்பு பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்த போதிலும் மாவட்ட நிலையில் மூன்றாவது நிலையில் முன்னிலை பெறுவேன் என எதிர்பார்க்கவில்லை. பெறுபேற்றை அறிந்ததும் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. என்னை விட எனது பெற்றோரின் மகிழ்வினைப் பார்க்கும் போது எனக்கு ஆனந்தக் கண்ணீரே வந்து விட்டது.

என்னைப் பொறுத்தவரையில் இந்தச் சாதனைக்கு முழு முதற் காரணம் எனது பெற்றோர். அவர்கள் என் மீது வைத்திருந்த நம்பிக்கையுடன் என்னை ஊக்குவித்தனர். எனது பெற்றோர் தமது வறுமையிலும் எனது கல்விக்கு முன்னுரிமை அளித்ததே எனக்கு உதவியது. அத்துடன் எமது கல்லூரியின் அதிபர், பாட ஆசிரியர்கள் சிறந்த வழிகாட்டியாக இருந்துள்ளார்கள்.

விளையாட்டுத் துறைகளில் மிகுந்த ஈடுபாடு இருந்த போதிலும் அத்துறையில் பெரிதாக எதுவும் சாதிக்கவில்லை. ஆங்கில தினப் போட்டிகளிலும் பங்கு பற்றி சான்றிதழ்கள் பல பெற்றுள்ளேன்.

எந்தவொரு மாணவனும் தன்னம்பிக்கையுடனும் கடவுள் பக்தியுடனும் முயற்சி செய்தால் நிச்சயமாக வெற்றி பெற முடியும்.

### தாரணி தர்மதுரை

பெறுபேறு: 3ஏ (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி )

நான் எனது ஆரம்பக் கல்வியை யா/கம்பர்மலை வித்தியாலயத்தில் கற்றேன். எனது தந்தை எனக்கு 10 வயதில் இறந்து விட்டார். எனது அண்ணா சுதன் என்னைத் தொடர்ந்து படிக்க வைத்தார். நான் சாதாரண தரம்வரை படிக்கும் பொழுது பிரச்சினைக்குரிய பாடமாகக் கணிதம் இருந்தது. இதனைத் தீர்க்க உதவிய திருமதி சி.தங்கராணி ஆசிரியைக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் எனது அப்பா இறக்கும்போது அண்ணாவிற்கு வயது 16 தனது படிப்பை நிறுத்தி விட்டு என்னைத் தொடர்ந்து படிப்பித்த அண்ணா சுதனுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

நான் உயர்தரக் கல்வியைக் கற்பதற்காக யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரியில் சேர்ந்தேன். அங்கு தமிழ், அளவையியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களைக் கற்றேன். மூன்று பாடங்களிலும் சிறப்புற்று விளங்குவதற்கு திரு.முரளிதரன், திரு.பிரபாணந்தன், திரு.ஜோதீஸ்வரன் ஆகியோர் காரணிகளாக விளங்கினர். அதுமட்டுமல்ல நான் தமிழ் பாடத்தினை திரு நடராசா, திருவர்ணன் ஆகிய தனியார் கல்வி ஆசிரியர்களிடமும் கற்றுள்ளேன். மாணவர்கள் படிப்பதற்கு எந்தவொரு உதவியையும் எதுவித எதிர்பார்ப்பும் இன்றி முழுமனதுடன் ஆற்றுகின்ற எனது பாடசாலை அதிபர் திரு.தர்மலிங்கம் அவருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். பல்வேறு துன்பங்கள் மத்தியலும் குடும்ப வறுமைச் சூலிலும் எனது அம்மா சோதிமலர் நான் படிப்பதற்கு உந்து சக்தி யாக அமைந்துள்ளார். இவ்விடத்தில் எனது அம்மாவிற்கும் எனது சகோதரர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சந்திப்பும், படங்களும்:
ஒளண்யன், லக்ஷ்மன்
கணேசமூர்த்தி. 18

### சிவகௌரி சண்முகசுந்தரம்

பெறுபேறு: 3 ஏ (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி )



எமது நாட்டு சூழ்நிலை காரணமாக எனது ஆரம்ப, இடைநிலை கல்வியை பல பாடசாலைகளில் கற்க வேண்டியதாயிற்று. இவ்வகையில் யா/கெருடாவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, யா/மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கிளி/ திருவையாறு மகா வித்தியாலயம், மு/யோகபுரம் மகாவித்தியாலயம், யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி என்பவற்றில் கற்றேன். எனது உயர்தரக் கற்கை நெறியை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்றேன்.

உயர்தரத்திற்கான கற்கை நெறியாக கலைத்துறையைத் தேர்வு செய்தேன். கலைத்துறையைப் பொறுத்தவரை பாடத்தெரிவுகள் அவதானமாக தெரிவு செய்யவேண்டும். நியமப்புள்ளி பிரச்சினைகள் கலைத்துறை பாடங்களில் அதிகளவு ஆதிக்கம் செலுத்துவதால் ஆசிரியர்களின் வழிகாட்டலில் எனது பாடத்தெரிவுகளை மேற்கொண்டேன்.

நான் 2006/2007 ஆகிய வருடங்களில் உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருந்தேன். இரு தடவையும் எனது பெறுபேறு ஏ, பி, சி ஆக அமைந்தது. பல்கலைக்கழக தெரிவில் இடம் பெறவில்லை. ஆயினும் நான் முயற்சியை கைவிடவில்லை. 3ஆவது தடவையும் பரீட்சைக்குத் தோற்றினேன். என்னால் குறித்த இலக்கை [3ஏ] அடைய முடிந்தது. கடந்தகால பரீட்சைகள் எனக்கு நல்ல அனுபவத்தைத் தந்தன.

கற்றல் முறையில் மனனம் செய்வதைவிட கிரகித்து வைத்தலிலேயே எனக்கு ஈடுபாடு அதிகம், ஆயினும் தேவையானவற்றை மனனம் செய்தும் வைத்துக்கொண்டேன். எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களின் சிறந்த கற்பித்தல் முறைகளால்தான் என்னால் சித்தியடைய முடிந்தது. மேலும் மாணவர்கள் கற்பதற்கு குடும்பத்தினர் சூழ்நிலைகளை உருவாக்கித் தரவேண்டும். இவை அனைத்தும் எனக்கு கிடைத்தன.

### ஜசிந்தா தர்மலிங்கம்

பெறுபேறு: 3ஏ ( வேலணை மத்திய கல்லூரி )

வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்தில் ஐந்தாம் ஆண்டு வரை ஆரம்பக் கல்வியைப் பெற்றபின் வேலணை மத்திய கல்லூரியில் கல்வியைத் தொடர்ந்தேன். எனது கல்விக்கு எனது பெற்றோர்கள் முக்கியத்துவம் வழங்கி எதிர்காலத்தில் ஒரு நல்ல கல்வியாளராகத் திகழ வேண்டும் என்ற மன உறுதியை ஏற்படுத்தினார் கள். எங்கள் அதிபர் பொ.அருணகிரிநாதனும் ஏனைய ஆசிரியர்களும் குறிப்பாக ஆசிரியர் சந்திரசேகரும் எனக்கு வழங்கிய உற்சாகமும் நண்பர்களின் ஆதரவும் எனது சுயமுயற்சியும் நான் தெரிவு செய்த தமிழ், புவியியல், இந்து நாகரிகம் ஆகிய பாடங்களில் காட்டிய ஆர்வமும்தான் சிறந்த புள்ளிகளைப் பெறக் காரணமாக இருந்தது. எனக்கு புவியியல் ஆசிரியராக வரவேண்டும் என்ற குறிக்கோள் உண்டு. சுனாமி, நிஷா போன்ற அனர்த்தங்கள் ஏற்படக் காரணிகளாக உள்ள புவியியல் நிலைகளை மாணவர்கள் நன்கு தெரிந்துகொள்ள வேண்டும். புவியியல் படிப்பதன் மூலம் இவற்றை ஓரளவாவது உணர முடியும் என்ற என் நம்பிக்கையை மாணவர்களுக்கும் கற்பிக்க வேண்டும் என்பதும் எனது கிராமத்திற்கும் மாணவர்களின் எதிர்காலத்திற்கும் ஆசிரியத் தொழில்மூலம் சேவை செய்ய முடியும் என்பதும் எனது கருத்து.

# யாழ்ப்பாணம் வலயக் கூடைப்பந்தாட்டம்; கிண்ணத்தை வென்றது கன்னியர் மடம்

வலி.வடக்கு,பெப்.16

யாழ்.கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப் பந்தாட்டத்திடலில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்.திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலையும் மோதிக் கொண்டன.

மைதானத்தில் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை போட்டி தொடங்கி முடிவடையும் வரை தனது ஆதிக்கத்தை செலுத்தியது.

முதல் பாதி ஆட்டம் முடிவடையும் வேளையில் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை 38 புள்ளிகளைப் பெற்ற போதிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி 03 புள்ளிகளை மட்டுமே பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் திருக்குடும்பக் கன்னியர்மடம் பாடசாலை மேலும் 24 புள்ளிகளைப் பெற்ற போதும் கொக்குவில் இந்துக் கல்லூரி 05 புள்ளிகளை மட்டும் பெற்றுக் கொண்டது.

ஆட்ட நிறைவில் திருக்குடும்பக் கன்னியர் மடம் பாடசாலை 62:08 என்ற புள்ளிகள் அடிப்படையில் கொக்குவில் இந்துக் கல்லூரியை வென்று யாழ்.கல்வி வலயச் சம்பியனாகியது. (50-86)

## கரப்பந்தாட்டப் போட்டி

வடமராட்சி,பெப்.16

வடமராட்சி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகளில் 15, 17, 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள் 24ஆம், 25ஆம் திகதிகளிலும் 15, 17, 18 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டிகள் இறுதி நாளான 25ஆம் திகதியும் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(202-236)

# சண்டிலிப்பாய் கோட்டத்தில் மானிப்பாய் இந்து சம்பியன்

இந்த வருடத்திற்கான சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனானது.

கடந்த 9ஆம் திகதி நடைபெற்ற இறுதிப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்டன.

நிர்ணயிக்கப்பட்ட 10 ஓவர்களில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி துடுப்பாட்டத்தை தேர்ந்து எடுத்தது. மானிப்பாய் இந்துக் கல்லூரி 9.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 63 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சா.பிரபாகர் 20 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய புனித ஹென்றியரசர் கல்லூரி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 8.1 ஓவர்களில் 29 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதில் மானிப்பாய் இந்து வீரர்களான க.நிஷாந்தன் 3 விக்கெட்டுக்களையும், சு.யாழினியன் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

3ஆம் இடத்துக்கான ஆட்டத்தில் நவாலி மகா வித்தியாலயம் வெற்றி பெற்றது. (50)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே இடம்பெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

இறுதிப் போட்டியில் இணுவில் இந்து விளையாட்டுக் கழகமும் உடுவில் மத்தி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொள்வதைப் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்)

# பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் வி.கவை வென்றது சண்டிலிப்பாய் இந்து

வலி.வடக்கு,பெப்.16

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டியில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

மைதானத்தில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் தனது ஆதிக்கத்தை தொடர்ந்து செலுத்தியமையால் அதனை தடுத்து நிறுத்த முடியாது சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் தடுமாறியது.

ஆட்ட நிறைவில் சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் 18:06 புள்ளிகள் என்ற அடிப்படையில் பண்டத்தரிப்பு சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகத்தை வெற்றிபெற்று சண்டிலிப்பாய் பிரதேச செயலக சம்பியனாகியது.

மூன்றாம் இடத்திற்கான போட்டியில் சண்டிலிப்பாய் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகமும் மாகியப்பிட்டி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஆட்ட இறுதியில் கல்வளை விநாயகர் விளையாட்டுக் கழகம் 07:02 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (50-862)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# பருத்தித்துறைப் பிரதேச கரப்பந்தாட்டம்: ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி

கரவெட்டி,பெப்.16

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

வல்வை றெயின்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மேற்படி கரப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் வல்வை விளையாட்டுக் கழகமும் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் முதல் சுற்றில் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் 30:28 என்ற புள்ளிகள் பெற்று முன்னிலையில் இருந்தது. இடைவேளைக்குப்பின் இரண்டாவது சுற்றில் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் 24:22 புள்ளிகள் அடிப்படையில் முன்னிலை பெற்று வெற்றியீட்டியது.

இறுதிப் போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

இதில் முதல் சுற்றில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இடைவேளையின் பின் இரண்டாவது சுற்றில் 24:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று 2009ஆம் ஆண்டுக்கான சம்பியன் பட்டத்தைத் தனதாக்கிக் கொண்டது.

(50-70)

## கிரிக்கெட் போட்டி

வடமராட்சி,பெப்.16

கரவெட்டி கோட்ட மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான மென்பந்தாட்டக் கிரிக்கெட் போட்டிகள் இன்று திங்கட் கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்திலும், வதிரி டயமண்ட் விளையாட்டு மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

பத்துப் பந்து பரிமாற்றங்களை கொண்ட இக்கிரிக்கட் போட்டியில் 12 பாடசாலை அணிகள் பங்குபற்றுகின்றன. (202-236)

# பெண்களுக்கான எல்லே போட்டி; கொக்குவில் மத்தி வென்றது

யாழ்ப்பாணம்,பெப்.16

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்ற பெண்களுக்கான எல்லே விளையாட்டுப் போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகமும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

முதலில் விளையாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக வீராங்கனைகள் அனைவரும் ஆட்டமிழந்து 02 ஓட்டங்களை மட்டும் பெற்றுக் கொண்டனர்.

பதிலுக்கு 03 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடக் களமிறங்கிய அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக வீராங்கனைகள் அனைவரும் ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தார்கள்.

ஆட்ட நிறைவில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 2:0 என்ற ஓட்டங்களினால் ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை வெற்றி பெற்று சம்பியனாகியது. (50-86)

# தென்மராட்சிக் கல்வி வலய சதுரங்கப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் சதுரங்க அணிகளுக்கிடையில் இடம்பெற்ற சுற்றுப் போட்டிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் நடைபெற்றன.

போட்டிகளில் 15 வயது பிரிவில் மீசாலை விக்னேஸ்வரா ம.வி.யும், 19 வயது ஆண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியும், பெண்கள் பிரிவில் கச்சாய் அ.த.க.பாடசாலையும் முதலிடத்தினைப் பெற்று சம்பியனாகின.

போட்டி முடிவுகள் வருமாறு:

**15வயது பிரிவு ஆண்கள்**

மீசாலை விக்னேஸ்வரா ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் ம.வி.

**15 வயதுப் பெண்கள்**

மீசாலை விக்னேஸ்வரா ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரவு ம.வி., கச்சாய் அ.த.கு.பாடசாலை

**19 வயது பிரிவு ஆண்கள்**

சாவகச்சேரி இந்துக் கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., மீசாலை விக்னேஸ்வரா ம.வி.

**19 வயது பெண்கள்**

கச்சாய் அ.த.க.பாடசாலை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

(50-207)

புங்குடுதீவு மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் மாணவிகளின் உடற்பயிற்சிக் காட்சியை முதலாவது படத்திலும் -

வினோத உடைப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களை இரண்டாவது படத்திலும் -

பாடசாலை அதிபர் க.தர்மகுணசிங்கம், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வேலணை பிரதேச செயலர் மு.நந்தகோபாலன், தீவக விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி வாசுகி தனபாலன், புங்குடுதீவு பங்குத்தந்தை அருட்திரு ஆம்ஸ்றோங், [illegible] வைத்தியகலாநிதி எஸ்.இராசரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்: லக்ஷ்மன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் த.வாமதேவன் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக வணிக பீடத்தலைவர் கலாநிதி க.தேவராசா மற்றும் உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளருடன் ஏனைய விருந்தினர்களும் மாணவர்களின் மேலைத்தேய வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதையும், உடுவில் கல்விக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: நேசன்)*

---

மாசித் திங்களில்...



உருவாய்
19
01
1952

ஒளியாய்
17
01
2009

அமரர்
## கனகரத்தினம் வேலுதாசன்

அதிகாலை .....
வானம் இருண்டிருந்தது.
சூரியனை காணவில்லை.
காற்றும் வீசத் தயங்கியது.
வீதி எங்கும்.
ஆழமான அமைதி.

எல்லாமும் எல்லாமாய்
இருந்த எங்கள்
இறுதிப் பயணம்.
விடையளிக்க முடியா.
விழிகளுடன் நான்.
விருப்பமின்றி நீ.
போக மறுத்த இதயம்.
வெடித்துச் சிதறியது.

ஞானபண்டித வித்தியாசாலை அருகில்,
புதுவீதி, கொக்குவில் மேற்கு.

மனைவி
சுற்றம்

---

## கசிப்பு விற்பனை செய்த இருவருக்கு அபராதம்

வலி.வடக்கு, பெப்.16

கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்கு மல்லாகம் மாவட்ட நீதிமன்றம் 15 ஆயிரம் ரூபாவும் 30 ஆயிரம் ரூபாவும் அபராதமாக விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

சுன்னாகம் பொலிசார் ஊரெழுப் பகுதியில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட இருவர் மாட்டிக் கொண்டார்கள்.

மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது இருவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து இந்த அபராதம் விதிக்கப்பட்டது. (202-86)

## நெடுந்தீவுச் சங்கத்தில் நுகர்வோருக்குப் போதியளவு மண்எண்ணெய் விநியோகம்

யாழ்ப்பாணம், பெப்.16

நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நுகர்வோருக்கு தேவையான அளவு மண்எண்ணெய்யை விநியோகித்து வருகின்றது என்று சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

சங்கத்திற்கு தேவையான அளவு மண்எண்ணெய் வந்து சேர்ந்ததை அடுத்து அண்மையில் மண்எண்ணெய் விநியோகத்தில் இருந்த கட்டுப்பாடு யாவும் நீக்கப்பட்டுள்ளன.

நுகர்வோர் மற்றும் விவசாயிகள் தமக்குத் தேவையான அளவு மண்எண்ணெய்யை சங்கக் கிளை ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (202-224)

---

அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1063 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

தனுசு 20 40 50 52

13-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 500467232 - 500487565

ஜக்பொட் பரிசு ரூபா. 8,891,900/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 220,277 | 20/- | 4,405,540/- |
| 2 இலக்கங்கள் | 20,195 | 40/- | 807,800/- |
| 1 இல. + லக்கினம் | 19,993 | 60/- | 1,199,580/- |
| 2 இல. + லக்கினம் | 1,832 | 200/- | 366,400/- |
| 3 இலக்கங்கள் | 541 | 1000/- | 541,000/- |
| 3 இல. + லக்கினம் | 44 | 10,000/- | 440,000/- |
| 4 இலக்கங்கள் | 2 | 200,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,891,900/- | - |
| மொத்தம் | | | 8,160,320/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 262,889 | | 8,660,320/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 9,383,650/-

தொடர் இலக்கம் 400475600 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 500472741-7-35 |
| களுத்துறை | 500483857-3-33 |
| புத்தளம் | 500483381-7-02 |
| திருகோணமலை | 500474435-8-04 |
| நுவரெலியா | 500469292-0-43 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

பிறந்தாய்
01
08
1946

இறந்தாய்
17
01
2009

## அமரர் கிட்டினர் மகேந்திரம்

திதி: அபரபட்ச சப்தமி

**அப்பா என்னும் பெரு மரத்தின் நிழலில்**
**நிம்மதியாய்ப் பருத்திருந்தோம்!**
**மரமும் சாய்ந்து விட்டதோ? எத்தனை**
**ஆண்டுகள் சென்றாலும் அம்மாவும் பிள்ளைகளும்**
**அப்பாவின் நினைவுகளை நெஞ்சில் சுமந்திருப்போம்.**

*17.01.2009* அன்று அமரத்துவமடைந்த எமது குடும்பத்தலைவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை இன்று *(16.02.2009)* திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அன்றையதினம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

லைடன் பாம், ஒழுங்கை,
இராச வீதி, கோப்பாய் மத்தி.

(82768)

குடும்பத்தினர்.

---

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
12
★
06
★
1951

மறைவு
24
★
02
★
2003

## அமரர் செல்லர் சின்னத்துரை

திதி: 16.02.2009

**புதுமலராய்ப் பூத்து மண்ணில்**
**புன்னகைத்த எங்கள் அன்பு அப்பாவே!**
**இருயுகம் போல் இருக்குதப்பா!**
**நீங்கள் இருந்த இடம் தவிக்குதப்பா!**
**உங்கள் முகம் காணாது தவிக்கின்றோம் அப்பா!**
**ஆலமரமாய் இருந்துவிட்டு**
**அவசரமாய் போனீர்கள் எங்கள் அப்பா!**
**இப்புவியில் நாங்கள் இருக்கும் வரை**
**மறவோம் அப்பாவே!**

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நாச்சிமார் கோவிலடி,
சரவணையாய் வடக்கு,
[illegible]துறை.

(82688)

**குடும்பத்தினர்,**
**சுதாகரன்**
*(மகன்- லண்டன்).*

# குப்புறப்படுக்கும் பழக்கம் பூச்சித் தொற்றின் அறிகுறியா?

**கேள்வி:** எனது மகன் முகம் குப்புறப் படுக்கின்றார். தூங்கும் போது பல்நெருடுகின்றார். அவருக்கு என்ன பூச்சி மருந்து எப்படிக் கொடுக்க வேண்டும். பூச்சி மருந்து முன்னர் கொடுத்த போதும், திரும்பவும் 3 மாதத்தில் பூச்சி ஏற்பட்டது ஏன்?

**பதில் :** உங்கள் குழந்தையின் வயதை நீங்கள் குறிப்பிடவில்லை. குழந்தைகளுக்கு வயிற்றில் WORMS என்கின்ற பூச்சி இருக்கும் என்று மருத்துவர் சந்தேகித்தால் மாத்திரமே, குழந்தையின் நிறைக்கேற்ற அளவான பூச்சி மருந்தை 3 வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு கொடுக்கவேண்டும் என்று சகல 'பூச்சி' மருத்து தயாரிப்பாளர் களும் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அநேகமான பூச்சி மருந்துகள் பூச்சிகளை கொல்வதில்லை. அவை பூச்சிகளின் நரம்பு மண்டலத்தை தாக்கி, அவற்றை (PARALYSE) இயங்காமல் செய்வதால் - பூச்சிகள் உணர்விழந்து மயங்கி - குடல் இயக்கத்தின் மூலம் வெளியே மலத் தோடு வருகின்றன. அல்லது மயக்க மடைந்த பூச்சிகளை குடல் சுரப்பிகளே அழித்துவிடும். மூன்றுவயதுக்கு உட்பட்ட சில குழந்தைகளுக்கு இந்த மருந்துகளின் நரம்புகளை தாக்கும் சக்தி கொஞ்சம் அதிகமானதால், அந்த குழந்தைகளுக்கு பூச்சி மருந்து கொடுத்தால், மூளையில் தற்காலிக நரம்புமண்டல பாதிப்புக்களான - தூக்ககுணம், வலிப்பு நோய் ஏற்படலாம். ஆகவே இயலுமானவரை - பூச்சி தொற்று அதிகமாக இருந்தால் மாத்திரமே - பூச்சி மருந்துகளை மருந்துவர் உபயோகிப்பார். தவிர 3 வயதிற்கு மேல் - அடிக்கடி பூச்சி தொற்று இருப்பதாக அறிந்தால் மாத்திரம் 6 மாதத்திற்கு ஒரு தடவை மருந்து எடுக்கலாம். குழந்தைக்கு பூச்சி தொற்று இருப்பதாக எப்படி அறிவது? முகம் குப்புறப்படுப்பது, நித்திரையில் பற்களை நெருடுவது என்பன பூச்சி தொற்றின் அறிகுறியல்ல.

குழந்தைகளுக்கு அதிகமான அளவில் காணப்படும் பூச்சிகள் - THREAD WORM, PIN WORM எனப்படுபவை. இவை இரவில் - மலவாசல் அருகே வந்து முட்டை இடும். இந்த முட்டைகள் மலவாசலில் அரிப்பை தரும். குழந்தைகள் மலவாசலை சொறிந்து கொண்டிருந்தால் - அவர்களை குப்புற படுக்கவிட்டு மலவாசலை பார்த்தோமானால் - சிறுசிறு வெள்ளை நூல் துண்டுகள் போல இந்த THREAD WORM தெரியும். இப்படித் தெரிந்தால் - குழந்தைக்கு பூச்சித் தொற்று இருக்கின்றது என்பதை அறிந்துகொள்ளலாம். இதேபோல பொதுவாகக் காணப்படும் வேறு பூச்சி தொற்றுகள் - வட்டப்புழு எனப்படும் ROUND WORM, கொக்கிப்புழு எனப்படும் HOOK WORM ஆகியவை. இவைகளை - மலப்பரிசோதனையில் கண்டறியலாம். எனவே பூச்சி தொற்று இருப்பதை தெளிவாக கண்டறிந்த பின்னர் - மருந்து எடுப்பதே பொருத்தமானது. மேலும் இப்பூச்சித் தொற்றுகளில் முக்கியமாக THREAD WORM என்கின்ற தாணப்புழு, ROUND WORM என்கின்ற வட்டப் புழு - என்பவை FAECAL TO MOUTH - வட்டத்தில் அதாவது, மலத்தில் கழியப்படும் முட்டைகள், உணவு, மூலமாக திரும்பவும் தொற்றுவதால் - குடும்பத்தில் ஒருவருக்கு இந்த பூச்சி தொற்று இருப்பதென்று அறியப்பட்டால் - குடும்ப அங்கத்தினர் அனைவருமே பூச்சி மருந்து எடுப்பது அவசியமாகிறது என்பதைக் கவனத்தில் கொள்ளவும். இன்று MEBENDAZOLE, ALBANDAZOLE என்ற பக்கவிளைவுகள் அதிகமற்ற மருந்துகள் இருப்பதால், மருத்துவ ஆலோசனையுடன் இவற்றை பயமின்றி உபயோகிக்கலாம்.

*

**கேள்வி:** ஆண். வயது 19. எனது வலதுகாலில் வலி ஏற்பட்டுள்ளது. ஆரம்பத்தில் எனது வலது தொடையின் பின்புறத்தில் தான் இது ஏற்பட்டது. பின்னர் அந்தக் கால் சிலவேளைகளில் பலம் குறைந்தது போலிருக்கும். கால்விரல்கள் குளிர்மையாக இருக்கம். இப்பொழுது எனது பின்னங்கால் - CALF - தசைகள் ஒரே வலியாக இருக்கின்றன. சமீபத்தில் திடீரென்று பஸ்ஸில் இருந்து குதித்து இறங்கியபோது உடனே வலி இருக்கவில்லை. அடுத்தநாள்தான் வலி ஏற்பட்டது. பரிகாரம் கூறவும்?

**பதில்:** நீங்கள் கூறிய குறிகளைப் பார்க்கும் போது உங்களுக்கு HAMSTRING என்கின்ற தசைகளின் பிடிப்பு - STRAIN - ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கிறேன். பொதுவாக ஆங்கிலத்தில் PULLED MUSCLE என்று இதனைக் கூறுவார்கள். மூன்று கால் தசைகளான - SEMIMEMBRANOUS, SEMITENDINOSUS, BICEPS என்கின்ற மூன்று தசைகளின் கூட்டையே - HAMSTRINGS என்று கூறுவார்கள். இவை தொடையின் பின்புறத்துத் தசைகள். முழங்காலை மடிப்பதற்கு இந்த தசைகள் உதவுகின்றன. இந்த கூட்டு தசைகள் - ஓடும்பொழுது, நீங்கள் சொன்னவாறு திடீரென்று பாயும் போது - 'இழுத்து' (PULLED) கொள்கின்றன. அப்படி இழுபட்டால் வலிஏற்படும். இதற்கு பின்வருமாறு சிகிச்சை செய்யலாம். ஆரம்பத்தில் 3 அல்லது 4 மணித்தியாலயங்களுக்கு ஒருமுறை 20 - 30 நிமிடங்களுக்கு ஐஸ் PACKS வைக்கவேண்டும். இப்படி 2 - 3 நாட்களுக்கு செய்தால் வலி நீங்கிவிடும். படுக்கும் போது அல்லது இருக்கும் போது காலைத்தொங்க விடாமல் உயரத்தில் வைத்துக்கொள்வது நல்லது. TUBIGRIB, அல்லது CREPE BANDAGE போன்ற இழுபடக்கூடிய பந்தணங்களை (BANDAGE) நடக்கும் போது அணியலாம். திடீரென்று இப்படித் தசைப்பிடிப்பு ஏற்படாமல் உடற்பயிற்சிக்கு முன்னர் WARMING UP பயிற்சிகளை செய்யவேண்டும்.

*

**கேள்வி:** எனது குழந்தை வயது 5 மாதம். தடுப்பூசி எடுக்க சென்றிருந்த போது - புதிதாக வந்திருக்கின்ற PNEUMOCOCCAL தடுப்பூசி, ROTAVIRUS தடுப்பூசி என்பவற்றை போடச் சொல்லி அறிவுறுத்தினார்கள். இந்த தடுப்பூசிகளின் விலை ஆயிரக்கணக்கு ரூபாயாக உள்ளது. இவற்றை கட்டாயம் போடவேண்டுமா?

**பதில்:** PNEUMOCOCCAL தடுப்பூசி - சுவாசப்பை அழற்சி எனப்படும். PNEUMONIA - நியூமோனியா நோய்க்கும், அதனால் சில குழந்தைகளுக்கு ஏற்படும் மூளை அழற்சி நோய்க்கும் - MENINGITIS (BRAIN FEVER) தடுப்பாக போடப்படு கிறது. இந்த ஊசி போட்டு கூடியது இரண்டு வருட காலம் தான் இதனது சக்தி இருக்கும். இந்த தொற்றுக்கு அநேகமான குழந்தைகள் - தமது முதல் இரண்டு வருடங்களில் தாமாகவே எதிர்ப்புத்தன்மையை பெற்று விடுவதாக அறியப்படுவதால் அநேக வைத்தியர்கள் இந்த தடுப்பூசியை சிபார்சு பண்ணுவதில்லை. மேலும் இந்த தடுப்பூசி ஆயிரக்கணக்கான ரூபா விலையில் உள்ளதால், குறைந்தது 3 தடவை இந்த ஊசியை எடுக்க வேண்டியிருப்பதால் அநேகமானோருக்கு இது பொருளாதார ரீதியில் கஷ்டமான விஷயம். ஆனால் இந்த ஊசி மருந்து தீங்கற்றது என்பதையும் குறிப்பிடவேண்டும்.

ROTAVIRUS தடுப்பூசி - குழந்தைகளுக்கு ROTAVIRUS என்ற தொற்றால் ஏற்படும் வயிற்றோட்டத்துக்கு தடுப்பாக உபயோகிக்கப்படுகிறது. எமது நாட்டில் குழந்தைகளுக்கு ROTAVIRUS தவிர்ந்த பிற வைரஸ், பக்டீரியாக்களாலும் வயிற்றோட்ட நோய் ஏற்படு கிறது. எனவே இந்தத் தடுப்பூசி - ROTAVIRUS ஒன்றினால் ஏற்படும் வயிற்றோட்டத்துக்கு மட்டும் தான் பாதுகாப்பு தரும். மேலும் இந்த தடுப்பூசியும் முன்னர் குறிப்பிட்டது போல விலை அதிகமானது. ஆனால் ஒரு சில பக்க விளைவுகளைக் கொண்டது. என்னைப் பொறுத்த மட்டில் - உங்கள் பொருளாதாரம் இடம் தரும் என்றால் இந்த புதிய தடுப்பூசிகளை எடுங்கள். ஆனால் அவற்றை எடுக்கவில்லையே எனது குழந்தைக்கு நோய் வந்து விடுமா என்று கவலைப்படாதீர்கள். சுகாதார பழக்கவழக்கங்கள் - தனிமனிதர் சுகாதாரம் - (PERSONAL HYGEINE) என்கின்ற உடல், வாழும் சூழலை சுத்தமாக வைத்துக்கொள்ளல், கைகளை கழுவுதல், சுத்தமான நீர் பருகுதல் போன்ற பழக்கவழக்கங்களால் மேற்கூறிய தடுப்பூசிகள் இல்லாமலே - குழந்தைகள் சுகமாக வளரும் பொதுவாகவே தடுப்பூசிகள் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர்தான் இந்த இருபதாம் நூற்றாண்டில் குழந்தைகளின் உடல் நலம் மேம்படுத்தப்பட்டது. காசநோய்க்கு BCG தடுப்பூசி, கக்குவான் இருமலுக்கு, தொண்டைகரப்பன், TETANUS என்பவற்றிற்கு TRIPLE, DUAL என்கின்ற முத்தடுப்பு ஊசிகள், கால்கை முடக்கு நோய் போலியோவுக்கு (POLIO) சொட்டு மருந்துகள், சின்னம்மைக்கு SMALL POX - தடுப்பூசி என்பவற்றால் மனித வாழ்வு நீடிக்கப்பட்டதும் மேண்படுத்தப்பட்டதும் உண்மைதான். இந்த தடுப்பூசிகளே இன்று போதும் என்று தீவிரமாக நம்புகின்ற மருத்துவர்கள் உண்டு. ஆனால் சில மருந்து தயாரிப்பு நிறுவனங்களும், ஆய்வாளர்களும் இந்த தடுப்பு மருத்துவம் (PREVENTIVE) என்ற போர்வையில் - அவசியமில்லாத நோய்களுக்கெல்லாம், தடுப்பூசிகளை தயாரித்து உலாவவிட்டு பெரும் இலாபம் பெறுகின்றார்கள் என்று நம்புகின்ற வைத்தியர்கள் பலர் உண்டு. எனவே உங்களுக்கு நம்பிக்கையான சிறுவர் மருத்துவ நிபுணரோடு மேலும் கலந்தாலோசித்து, தடுப்பூசிகளை எடுக்கவும்.

**இலவச மருத்துவ ஆலோசனை பெறுங்கள்**

நீங்களும் கேள்விகளை அனுப்பி மருத்துவ ஆலோசனைகளைப் பெறலாம்.
நீண்ட கால அனுபவம் உள்ள பிரபல டாக்டரும் விஞ்ஞானத்துறை எழுத்தாளருமான
**டாக்டர் எஸ்.அருள்ராமலிங்கம்**
பதில் தருகிறார்.

**இலவச மருத்துவ ஆலோசனை**
**உதயன்**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

*

**கேள்வி:** பெண். வயது 40. கடந்த சில நாட்களாக கொஞ்சத் தூரம் நடந்தால் அடிப்பாதத்தில் வலி எடுக்கின்றது. இதற்கு முதல் நான் நன்றாக நடப்பேன். இப்படி வலி ஏற்பட்டால் முழு நாளும் வலி இருக்கும். வீட்டு வேலை கூட செய்ய இயலாது. டாக்டரிடம் ஆலோசனை கேட்டபோது - இது பெண்களுக்கு 40 வயதிற்கு பின்னர் ஏற்படக் கூடிய கோளாறு என்று கூறி வலி நீக்க மாத்திரைகள் தந்தார். மருந்து உபயோகித்தால் வலி குறைக்கின்றது. ஆனால் திரும்பவும் நடந்தால் வலி ஏற்படுகிறது. பரிகாரம் கூறவும்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டுள்ளது PLANTAR FASCITIS என்கின்ற ஒருவித கோளாறு. பாதத்தில் - CALCANEUM என்கின்ற குதி எலும்பிலிருந்து (HEEL BONE) கால் விரல்களுக்கு செல்கின்ற தசைகளை மூடியிருக்கும் FASCIA அழற்சி யுறும் போது இவ்வாறு ஏற்படுகிறது. இது ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்படக் கூடியது. ஆனால் 40 வயதின் பின்னர் பெண்களுக்கு ஏற்படும் ஹோர்மோன் குறைபாடுகள் இந்த கோளாறுக்கு ஒரு அதிக பட்சமான காரணமாக கருதப்படு கிறது. நீண்ட தூரம் நடப்பவர்கள், நின்று கொண்டே பணிபுரிபவர்கள், பொருத்த மில்லாத காலணிகளை உபயோகிப்பவர் கள், குதி உயர்ந்த காலணிகளை உபயோகிப்பவர்கள், நீரழிவு நோயாளிகள் என்போரிடையே இந்தக் கோளாறு அதிகமாக காணப்படுகின்றது. வலி நீக்கும் மாத்திரைகள் தாற்காலிக பலனைத் தரும். ஒரு சிலருக்கு வருடக்கணக்கில் வருத்தும் இந்த வலி - காலப்போக்கில் தானாகவே குறைந்து மறைந்து போய்விடுவதும் உண்டு. ORTHOPAEDIC என்கின்ற எலும்பு நோய் நிபுணர்கள் - பின்வரும் அறிவுரைகளை இந்த கோளாறால் பாதிக்கப்படுபவர்களுக்கு கூறுகின்றார்கள். இந்த நோயாளிகள் - வீட்டிலும், வெளியில் நடக்கும் போதும் மிருதுவான அடிப்பாகம் உள்ள - SOFT SOLE - SHOES றப்பராலான காலணிகளை தொடர்ந்து உபயோகிக்க வேண்டும். பாத தசைகளுக்கு வலுவூட்டும் பயிற்சிகளான நின்றுகொண்டு - கால்விரல்களில் உந்தி - சுவரை தள்ளி பயிற்சி செய்யவேண்டும் (PUSHING WALL ON TIPSOF TOES) உட்கார்ந்து காலை நீட்டி, தடிப்பான துணியை பாதத்தில் சுற்றி இருகைகளாலும் இழுக்கவேண்டும் - PULLING A TOWEL WRAPPED AROUND AFFECTED SOLE IN SITTING POSITION பல நாட்களுக்குத் தொடர்ந்து இந்த பயிற்சிகளை செய்யவேண்டும். இதனால் ஒரளவு சுகம் பெறலாம். இந்த பாதவலி நாளாந்த வேலைகளுக்கு இடையூறாக இருப்பின் குதிக்காலில் தசை பொருந்தியுள்ள இடத்தில் - ANTI INFLAM MATORY வகை ஊசிமருந்து போடலாம். ஆனால் பலருக்கு இந்த சிகிச்சையும் தாற்காலிக நிவாரணத்தையே அளிக்கின்றது என்பதை கவனத்தில் கொள்க.

*

# நிஜத்தின் முகம்.... நிஜத்தின் முகம்....

## "யாழ்ப்பாணத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் அவலங்களைக் காட்டும் உண்மைச் சம்பவங்கள்"

## பாதை மாறிய பயணங்கள்

'பால்நிலை' அபிவிருத்தி என்ற கோட்பாடு சமூகத்தில் தவறான அர்த்தத்தில் விளங்கிக்கொள்ளப்பட்டுள்ளது என்பது உண்மை. இன்றுவரை யாழ்ப்பாணத் தமிழர் சமூகத்தில் ஆணுக்கு முன்னுரிமையும், உயர் அந்தஸ்த்தையும் சகல மட்டங்களிலும் கொடுத்து வருவதன் மூலம் இதனை உணர முடிகின்றது. அதி உயர் கல்வி மட்டத்தினையும் நிர்வாகத்திறமையினையும் கொண்டுள்ள பல பெண்கள் திறமைகளை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமல் ஒடுக்கப்பட்டுள்ளனர். இந்தநிலை தொடர்ந்தும் நீடிப்பதனால் சமூகம் பெண்களை ஒடுக்குவதற்கும் ,ஓரம் கட்டுவதற்கும் வாய்ப்பாக உள்ளது. பெண்கள் வலுவுள்ளவர்கள், திமையுள்ளவர்கள் என்பதை ஏற்க வேண்டும். கல்வி என்ன! நிர்வாகத் திறமை என்ன! யாழ்ப்பாணப் பண்பாட்டு விழுமியங்களுக்கு கட்டுப்பட்ட குடும்ப விளக்காக இருக்க வேண்டும்! இது அறியாமை இல்லையா! கல்வி இருபாலாருக்கும் பொதுவானது. ஆண், பெண் வேறுபாடு இங்கே எதற்கு? ஆண்பிள்ளைகளுக்கு மட்டற்ற சுதந்திரம் கொடுத்து ஏராளமாகப் பணத்தைச் செலவழித்துக் கல்வியைக் கற்பிக்கத் துடிக்கும் சமூகத்தினர் பெண்கள் கல்வி கற்றால் அது ஓர் முதலீடாக இல்லை. பயனற்றுப் போகின்றது என்ற எண்ணத்தை வளர்த்துள்ளனர். "அவன் படிச்சால் உழைத்துத் தருவான்" என்று இன்றும் பெற்றோர் அங்கலாய்க்கின்றனர். தொழில் தெரிவு இடம்பெறும் போது ஆண்களைத் தெரிவு செய்வது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பெண்களைத் தெரிவு செய்தால் பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டும். பிரசவ லீவு, பிள்ளைகளைக் கவனித்தல் இதற்காக அடிக்கடி லீவு எடுத்தல் எனப் பல காரணங்கள் கூறப்படும்.

இதனால் பெண்களுக்குக் கிடைக்கப்பெறும் பல வாய்ப்புக்கள் தவற விடப்படுகின்றன. அபிவிருத்தியில் அவர்கள் பங்காளிகளாக எப்படி மாறமுடியும். அவர்கள் தம்திறமைகளை எப்படி வெளிப்படுத்த முடியும் ?

கல்வி -சிந்தனை என்பன அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் திறவு கோல்கள். ஆனால் பெண்களைப் பொறுத்தவரை திருமணத்தோடு கூடிய "சீதனம்" கல்வியை அவர்கள் தொழிலைச் சரியாக எடைபோடுவதாக இல்லை. எவ்வளவு படித்த பெண்ணானாலும் அவளுக்காக கேட்கப்படும் சீதனம் கூடுமே தவிரக் குறைவதில்லை. திருமணம் ஆனதும் அத்தொழில் மூலம் கிடைக்கும் வருமானம் கூட அவர்களுக்குத்தான். உயர்கல்வி கற்ற பெண்கள்கூடத் திருமண வட்டத்துக்குள் சிக்கித் தமது இன்பங்களைத் துறந்து திண்டாடும் நிலை இங்கு சகல மட்டத்திலும் காணப்படுவதற்கு ஒரு சம்பவம் உதாரணம்:-

வலிகிழக்கில் உள்ள கிராமத்தில் சுகிர்தா என்ற பெண் பெற்றோருக்கு ஆறு வருடங்களின்பின் பிறந்த செல்லப் பிள்ளை. துடிப்பான பெண். ஆர்வமாகப் படித்து க.பொ.த உயர்தரத்தில் படித்துக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் அக்கிராமத்தில் வசிக்கும் அவளுக்கு உறவு வழியான வதனன் என்பவன் அவளைக் காதலிக்கத் தொடங்கினான். அடிக்கடி இருவரும் தனிமையில் சந்தித்த நாள்கள் பல. இவர்கள் காதல் ஊரறிந்த விடயமாயிற்று. சுகிர்தாவும் இக்காதல் திருமணத்தில் முடியும் என்ற துணிவுடன் இறுக்கமாகப் பழகினாள். சுகிர்தாவும் பிரமிக்கத்தக்க அழகி. எல்லோரும் ஒரு கணம் திரும்பிப் பார்க்கும் அழகு. அவ்வழகில் மயங்கிய வதனன் காதலைப் பயன்படுத்தியதோடு மட்டுமன்றி அவளைக் கட்டுப்படுத்தவும் ஆரம்பித்தான். உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் கல்வி கற்பவன் வதனன் என்ற காரணத்தால் தமது மகளுக்கு வதனன் ஏற்றவன் என்று பெற்றோரும் கண்டும் காணாதது போல் விட்டு விட்டனர். வதனனின் காதல் வீடுவரை சென்று விட்டது.

உயர்கல்வி கற்கும் மாணவனாக இருந்தும் சுகிர்தாவில் சந்தேகம் கொண்டான். அவளைச் சந்திக்கும் போதெல்லாம் "நீ கண்டபடி திரியக் கூடாது. ஆண்களோடு கதைக்கக் கூடாது" என பல கட்டுப்பாடுகள். சந்திக்கச் செல்லாவிட்டால் போனில் "ஏனடி வரவில்லை? எங்கையடி போனாய்?" என்று மிரட்டல்கள் வேறு. சுதந்திரமாகத் திரிந்த சுகிர்தா கூண்டுக்குள் அடைபட்ட கிளியாகத் தவித்தாள். அவளின் சிரித்த முகம் மாறியது. காலங்கள் நகர்ந்தன. சுகிர்தா பல்கலைக்கழக நுழைவுப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானாள். மட்டற்ற மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்த சுகிர்தாவுக்கு எண்ணற்ற கற்பனைகள், ஆசைகளோடு பல்கலைக்கழகத்திற்குள் நுழைந்தாள். அதேநேரம் வதனனின் கல்வி முடிவடைந்து பிரதேச செயலகத்தில் அரசாங்க உத்தியோகமும் அவனுக்குக் கிடைத்தது. வதனன் சுகிர்தாவைச் சந்திக்கும் போதெல்லாம் "நீ ஏன் படிக்கிறாய்? வேலைக்கு விட்டால்தானே? கம்பஸ் போய் யாரைப் பார்க்கப் போறாய். பேசாமல் வீட்டில் இரு" என்று வசைபாடத் தொடங்கினான். "நான் எத்தனையோ கஷ்ரப்பட்டு எத்தனை எதிர்பார்ப்புக்களுடன் இந்தக் கம்பஸில் நுழைந்தேன். ஆனால் இப்படி ஒரு நிலை வரும் என எதிர்பார்க்கவேயில்லை" என சுகிர்தா கலங்கினாள்.

ஆயினும் அவளின் கல்வி தொடர்ந்தது. மூன்றாம் வருட இறுதியில் திருமணத்தை முடித்து வைக்க விரும்பிய பெற்றோர் வதனனின் வீட்டிற்கு திருமணப் பேச்சை ஆரம்பிக்கச் சென்றனர். ஆனால் அவர்களைத் திடுக்கிட வைத்தது அவனின் சீதனக்கேள்வி. 15 லட்சம் கொடுத்தால்தான் திருமணம். காதல் எல்லாம் சீதனத்தின்முன் எம்மாத்திரம். பெற்றோர் என்ன செய்வதென்று அறியாது திகைத்தனர். "ஏனடி இவனைக் காதலிச்சனீ? உன்னைப் படிக்கவும் வைத்து இப்ப சீதனத்துக்கு எங்கே போவது" கோபம் அடைந்த சுகிர்தாவின் தந்தை கன்னத்தில் பளார் பளார் என அடித்தார். கன்னத்தில் கோடுகள் பதிந்தன. சுகிர்தா என்ன செய்வாள்? இத்தனை சுமைகளோடு மூன்றாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றினாள். சுகிர்தாவின் தந்தை ஒரு மாதிரியாகச் சேர்த்த 10 லட்சத்துடன் வதனனைச் சமாதானப்படுத்தி மீதி 5 லட்சம் பின்பு தருவதாகக் கூறி திருமணத்தை இனிதே நடத்தி வைத்தார். திருமணம் முடிந்ததும் வதனன் சுகிர்தாவை எப்படியாவது படிக்கவிடாது நிறுத்த வேண்டும் என்ற நிலையில் "நீ படிச்சுக் கிழிக்கப் போறியா? யாருக்கு உழைக்கப் போறாய்?" என்று பிடரித்தலைமுடியைப் பிடித்து உலுப்பி "நீ சமைச்சுப்போடு என்ரை உடுப்பை தோய். படிப்பும் வேண்டாம். பதவியும் வேண்டாம்" என்று அவளைச் சுவரோடு தள்ளி விட்டான். வயிற்றில் வளரும் கருவுக்கு என்ன ஆகுமோ என்று நினைத்த சுகிர்தா மறுபேச்சின்றி தன் படிப்பிற்கு முற்றுப்புள்ளி வைத்தாள். சுகிர்தா படிப்பை விட்டு, தன் ஆசைகளைத் துறந்து, தன் பெண் பிள்ளையை வளர்ப்பது, வீட்டுவேலைகள் போன்றவற்றை களைப்பு, சோர்வின்றிச் செய்கின்றாள். அவளின் வாழ்வு வீட்டிற்குள்ளேயே முடங்கிவிட்டது.

வதனனோ மீதி 5 லட்சத்தினை எப்படி வாங்குவது என்பதில் கண்ணும் கருத் துமாக இருந்தான். ஒரு நாள் நான் உழைக்கிறது என்னத்துக்குக் காணும் என்று தொடங்க சுகிர்தா "என்னைப் படிக்க விட்டிருந்தால் நானும் இப்போ உழைப்பேனே" என்றாள். "என்னடி கதைக்கிறாய்" என்ற வதனன் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து போ, போ மீதி 5 லட்சத்தினை வாங்கி வா. அல்லது இங்கு காலடி எடுத்து வைக்கக் கூடாது என இரவு அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். ஊரடங்கு நேரம் தன்னை மறந்து தனியாகக் குழந்தையுடன் தாய் வீடு நோக்கி நடந்தாள் சுகிர்தா.

**துதிகா**

**மகளிர் அபிவிருத்தி நிலையம், யாழ்ப்பாணம்.** (சி/557001)

# ராசி பலன்

16-02-2009 முதல்
22-02-2009 வரை

**பொ.சந்திரலிங்கம்**

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

கார்த்திகை 2, 3, 4. ரோகிணி, மிருகசீரிடம் 1, 2

காரிய சித்தியுண்டு. பிரயாணவாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர், உதவியை எதிர்பார்ப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை நட்பாகலாம். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

மிருகசீரிடம் 3, 4. திருவாதிரை,புனர்பூசம் 1, 2, 3

காரியத் தடையுண்டு. பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணம் இருக்கும். உறவினர்,அயலவர் விலகி இருக்க விரும்புவர்.தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திரு மண வாய்ப்பு தாமதமாகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறா. மனஅமைதி இருக்காது.

புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவுவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார்.. உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

மகம், பூரம், உத்தரம் 1

காரியசித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு.தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.மனஅமைதி இருக்கும்.

உத்தரம் 2, 3, 4. அத்தம், சித்திரை 1, 2

காரியசித்தியுண்டு. பணப்பற்றாக் குறை நிலவும். உறவினர், அயலவர் விலகி இருக்க விரும்புவர். தாய்நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம்.அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

சித்திரை 3, 4. சுவாதி, விசாகம் 1, 2, 3.

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலமில்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகைவிலகும். திருமண வாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

விசாகம் 4, அனுசம், கேட்டை

காரியசித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மனஅமைதி இருக்காது.

மூலம், பூராடம், உத்தராடம் 1.

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர் அயலவர் விலகி இருக்க விரும்புவர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.

உத்தராடம் 2 ,3, 4. திருவோணம், அவிட்டம் 1, 2

காரியத்தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு தாமதமாகலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக்கூடும். பெற் றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வி யில் ஆர்வம் காட்டுவர். உடல்நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லையுண்டு. திருமணவாய்ப்பு தாமதமாகலாம். முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிர்ஷ்டம் இருக்காது. தெய்வீகநாட்டம் குறையலாம். தொழில்துறை முன்னேறும். மன அமைதி இருக்காது.

அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1, 2, 3

காரிய சித்தியுண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விலகி இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல்நலமுண்டு. பகை விலகும். திருமண வாய்ப்பு உண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில்துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்ப்பார்ப்புகள் நிறைவேறா. நண்பர்களால் தொல்லையுண்டு. மன அமைதி இருக்கும்.

பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு . புதிய முதலீடுகள் அமையலாம். அதிர்ஷ்டம் உண்டு. தெய்வீகநாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. எதிர் பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்கும்.



நேற்று முன்தினம் புதுமாத்தளன் மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் முதியோர் இல்லத்தில் தங்கியிருந்த முதியோர்கள் கொல்லப்பட்டுக் கிடப்பதை முதலாவது படத்திலும், புதுமாத்தளன் வைத்தியசாலையில் காயமடைந்தோர் சிகிச்சை பெறுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# பேரழிவைத் தரும் நீர்மூழ்கிகளை உருவாக்கும் இளைஞர்கள் உருவாக இடமளிக்கக்கூடாது

## ஜனாதிபதி மஹிந்த ஆணித்தரம்

கொழும்பு, பெப். 16

பயங்கரவாதமற்ற நாடொன்றை உருவாக்க வழிவகுத்துள்ள அதேவேளை, தாய் நாட்டைப் பேரழிவுக்குள்ளாக்கக் கூடிய நீர்மூழ்கிக் கப்பல்களை உருவாக்கும்இளைய தலைமுறையொன்று மீண்டும் உருவாக இடமளிக்கக் கூடாது.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

சமுத்திரவியல் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா கடந்த வியாழக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் உரை நிகழ்த்தும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தமதுரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நாட்டை சீரழித்து மனிதப் படுகொலைகளில் ஈடுபடுத்தவென வடக்கு,கிழக்கு இளைஞர்கள் கரும்புலி படைகளுக்குச் சேர்க்கப்படுகின்ற நிலை மாற்றம் பெறவேண்டும். அத்தகைய இளைஞர்களை நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்யும் பொறுப்புடையவர்களாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என்பது எமது நோக்கமாகும்.

பயங்கரவாதமற்ற இலங்கையை உருவாக்குதவற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நம்மிடமிருந்து கை நழுவிய நாட்டின் மூன்று மடங்கு கடற்பிரதேசத்தை மீண்டும் நாம் பெற முடிந்தமை பெருவெற்றியாகும்.

சமுத்திரவியல் பல்கலைக்கழகம் பாரியதொரு நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதொன்று. இதனை ஆரம்பித்ததில் எந்த வித குறுகிய நோக்கமும் இருந்ததில்லை. எமது புதிய பரம்பரை கடல்வளங்கள் பற்றி தெரிந்து கொள்ள வேண்டிய பல விடயங்கள் உள்ளன. அதற்கான காலம் தற்போது உருவாகியுள்ளது.மீன் பிடிப்பது மட்டும் கடற்றொழில் அல்ல. கடலில் பல்வேறு வளங்கள் உள்ளன. அதேவேளை கடல் பிரதேசம் சம்பந்தமாக உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறும் வகையில் சர்வதேசத்துடன் இணைந்ததான செயற்றிட்டங்கள் பற்றி சிந்திக்க வேண்டிய காலம் எழுந்துள்ளது.

**வடக்கு-கிழக்கு பிரதேசம் இப்போது நமது கையில்!**

வடக்கு, கிழக்கு முழுவதிலுமுள்ள கடற் பிரதேசத்தின் உரிமைகள் நமது கையை விட்டு நழுவிப் போயிருந்தன. திருகோணமலைத் துறைமுகத்துக்குக் கூட நாம் சுதந்திரமாக போய்வரக்கூடிய சூழ்நிலை அற்றுப்போயிருந்தது. இன்று அந்த நிலை மாற்றப்பட்டு சகல கடற்பிராந்தியமும் எமது உரிமைச் சொத்தாகியுள்ளன.

கடல்பற்றிய அறிவில் நாம் சர்வதேச சமுத்திரவியல் பல்கலைக்கழகங்களுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டிய பல விடயங்கள் உள்ளன. கடந்த காலங்களில் எம்மால் முடியாமற் போனதை சர்வதேச அறிவுடன் மீளப்பெற்றுக் கொள்வது அவசியமாகிறது.

சமுத்திரவியல் பல்கலைக்கழகம் சகல இன, மத பிரதேசத்தினருக்கும் உரித்துடையது. வடக்கு, கிழக்கு இளைஞர்களுக்கும் சமுத்திரவியல் சம்பந்தமான கல்வியை வழங்கும் பொறுப்பு சமுத்திரவியல் பல்கலைக்கழகத்திற்கு உள்ளது.

இந்த நாட்டில் சகல இன, மத மக்களும் நாற்திசையிலுமிருந்து சரிசமனாகக் கற்கக் கூடியதான உரிமையை சமுத்திரவியல் பல்கலைக்கழகம் வழங்கவேண்டும். வடக்கு, கிழக்கு இளைஞர்களும் இங்கு பட்டதாரிகளாக உருவாக வேண்டும். அவர்களும் தாய்நாட்டுக்குச் சேவை செய்யும் நிலை வரவேண்டும் நான் கடற்றொழில் அமைச்சராக இருந்த காலத்தில் சமுத்திரவியல் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்தேன். இன்று இப்பல்கலைக்கழக பட்டதாரிகளுக்குப் பட்டமளிக்கும் பாக்கியத்தை பெற்றதில் மகிழ்ச்சியடைகின்றேன் - என்றார். (சி)

# மெய்வன்மைப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.16

அனலைதீவு சதாசிவ மகா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 18 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் வீ.ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், தீவகக் கல்வி முகாமைத்துவ பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஐ.புவனேந்திரன் பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.பாஸ்கரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (204)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.16

வீமன்காமம் மகா வித்தியாலயம், காங்கேசன்துறை மகாவித்தியாலயம், வர்த்தலை விளான் அ.மி.த.க. பாடசாலை ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் மருதனார் மடம் இராமநாதன் மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

அதிபர் தி.கங்காதரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் மயிலிட்டி றோ.க.த.பாடசாலையின் முன்னாள் அதிபர் திருமதி எஸ்.அன்ரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (9)

* * *

யாழ்ப்பாணம்,பெப்.16

புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தீவக வலயக் கல்வி அபி விருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ.ஸ்ரனிஸ்லாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (9)

# அருளுரையாளர்களுக்கு இறையியல் பயிற்சி

யாழ்ப்பாணம்,பெப்.16

யாழ்.மாவட்டத்திலுள்ள மெதடிஸ்த திருச்சபை சேகரப் பிரிவுகளில் பணிபுரிந்துவரும் அருளுரையாளர்களுக்கு இறையியல் தொடர்பாக மூன்றுமாத காலப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சியை வழங்குவதற்காக முகாமைத்துவ இறையியல் கல்லூரியைச் சேர்ந்த கலாநிதி அருட்திரு டபிள்யூ.ஏ.ஜெபநேசன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

நாளை செவ்[illegible]கிழமை முதல் யாழ்ப்பாணம் செ[illegible]றர் தேவாலயத்தில் இப்பயிற்சி ஆரம்பமாகும் எனத் தெரிவிக்கப்பட்டது (202-236)

# கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,பெப்.16

சுவாமி விவேகானந்தரின் ஜெயந்தியை முன்னிட்டு ஆளுமை பற்றிய முழுநேரக் கருத்தரங்கு உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் அதிபர் ஆ.விக்னேஸ்வரன் தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை மு.ப 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார். (202-236)

# போதகர்கள் நியமனம்

கட்டைவேலி,பெப்.16

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபை தேவாலயத்தின் புதிய போதகராக அருட்திருமதி டி.தேவகுமாரும், நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் தேவாலயத்தின் புதிய போதகராக அருட்திரு எஸ்.என். தேவகுமாரும் இலங்கை மெதடிஸ்த திருச்சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர். (202-275)

# தென்மராட்சிப் பாடசாலை அதிபர்கள் கவனத்துக்கு

மண்டுவில்,பெப்.16

ஜி.சீ.ஈ.சாதாரணதர மாணவர்களது கணித வளத்தை மேம்படுத்தும் முகமாக தென்மராட்சி கணிதவள நிலையத்தால் வெளியிடப்பட்ட கணித சுயகற்றல் கையேடு ஆசிரியர்களுக்கு வழங்கப்படவுள்ளது

சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை உடன் தொடர்பு கொள்ளும்படி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (202-59)

# திட்டச் செயலமர்வுகள்

வடமராட்சி,பெப்.16

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் 6ஆம், 7ஆம், 8 ஆம் தரங்களில் வாழ்க்கைத் தேர்ச்சியும், குடியுரிமையும் பாடம் போதிக்கும் ஆசிரியர்களுக்கான இவ்வாண்டுக்குரிய திட்டச் செயலமர்வு எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

குறிப்பிட்ட ஆசிரியர்கள் இச் செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார். (202-236)

நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் 'நிக்கொட்' நிறுவனத்தால் அமைக்கப்பட்ட மாடிக் கட்டடத்தின் திறப்புவிழா நிகழ்வில் எடுக்கப்பட்ட படங்கள்.

விருந்தினர்களான யாழ்.அரச அதிபர் கே.கணேஸ், நிகொட் பிரதித்திட்டப் பணிப்பாளர் ஆர்.சிவரூபன், கல்லூரி அதிபர் இ.குணநாதன் ஆகியோர் பாண்ட் வாத்தியம் சகிதம் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்தில் காணலாம்.

வலி.கிழக்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ் மங்கள விளக்கேற்றுவதையும், யாழ்.அரச அதிபர் நாடாவெட்டி பிரதான நுழை வாயிலைத் திறந்து வைப்பதையும் இரண் டாவது, மூன்றாவது படங்களிலும்- யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வகுப்பறையை நாடாவெட்டித் திறந்து வைப்பதை நான்காவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: சரவணன்)

# மொரட்டுவ பல்கலைக்கழக அனுமதி; 4 பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், பெப்.16

மெராட்டுவப் பல்கலைக்கழகத்தின் 2008/2009 கல்வியாண்டில் 4 கற்கை நெறிகளை மேற்கொள்வதற்குத் தகுதி காண் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

கட்டட சூழல் வடிவமைப்பு (கட்டட கலைப் பீடம்), பெஷன் டிசைன் மற்றும் உற்பத்தி அபிவிருத்தி (பொறியியல் பீடம்), தகவல் தொழில்நுட்பம் (தகவல், தொழில்நுட்பப் பீடம்) ஆகிய பட்டப்படிப்புகளை மேற்கொள்வதற்கே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகவல் தொழில்நுட்பம், பெஷன் வடிவமைப்பு மற்றும் உற்பத்தி அபிவிருத்தி பாடநெறிகளுக்கான தகுதிகாண் பரீட்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 4ஆம் திகதியும்-

கட்டட சுற்றாடல் வடிவமைப்புக்கான தகுதிகாண் பரீட்சை ஏப்ரல் 5ஆம் திகதியும் நடைபெற வுள்ளன.

விண்ணப்பங்களை அடுத்தமாதம் 6ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலம் 'சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ பரீட்சைகள், மொரட்டுவ பல்கலைக் கழகம், மொரட்டுவ' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவத்தை www.mrt.ac.lk என்ற இணையத்தளத்திலும் பார்வையிடலாம். (202)

# திருநெல்வேலியில் சூட்டுக்கு இலக்கானவர் நயினாதீவு வாலிபர்

யாழ்ப்பாணம்,பெப்.16

திருநெல்வேலி, ஆடியபாதம் வீதியில், திருநெல்வேலிச் சந்தைக்கு பின்புறம் செல்லும் வீதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற சம்பவத்தில் உயிரிழந்த இரு இளைஞர்களில் ஒருவர் அடையாளம் காணப்பட்டார்.

நயினாதீவு, 4ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மகேந்திரன் நவநீதன் (வயது 24) என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவர் என அவரது உறவினர்களால் அடையாளம் காட்டப் பட்டது.

சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (1-207-111)

# இளைஞர் விருதுவழங்கல் கலாசாரப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.16

தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், இளைஞர் விருது வழங்கல் கலாசாரப் போட்டிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

15-29 வயதுக்கிடைப்பட்டவர்கள் இப்போட்டிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சிறுகதை, நாவல், கவிதை, கட்டுரை, பாடல் இயற்றுதல், சாஸ்திரிய சங்கீதம், மேலைத்தேய வாத்தியம், கிராமியப் பாடல்கள், சித்திரம், சிற்பம், புகைப்படம், அபிநய நடிப்பு, அறிவிப்பாளர், இளம் பாடகர், பரதநாட்டியம், மக்கள் நடனம், புதிய நடனம், கீழைத்தேய வாத்தியம் (புல்லாங்குழல், வயலின், மிருதங்கம், தவில்) நாடகம் ஆகிய போட்டிகளே நடத்தப்படவுள்ளன.

விண்ணப்பங்களை எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பீ வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 021 222 2526 என்ற தொலைபேசி இலக்கம் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

(202)

# பருத்தித்துறைப் பிரதேச சபை எல்லைக்குள் ஆதனவரி அறவிடுவதற்கு நடவடிக்கை

வடமராட்சி, பெப்.16

பருத்தித்துறைப் பிரதேச சபை இவ்வாண்டு முதல் ஆதன வரியை அறவிட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் நாட்டில் ஏற்பட்ட யுத்தச் சூழ்நிலை காரணமாக ஆதன வரி எதுவும் அறவிடப்படவில்லை. பொதுமக்கள் பலரும் இதனைத் தாமாக முன்வந்து செலுத்தவும் இல்லை.

இதனைத் தொடர்ந்து சில ஆண்டு காலத்திற்கான ஆதனவரியைச் செலுத்தாமல் இருப்பதற்கு மாகாண சபையினால் விலக்கு அளிக்கப்பட்டிருந்தது.

பின்னர் சில ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 2000ஆம் ஆண்டு முதல் மீண்டும் ஆதனவரியை அறவிட வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும் இதனைச் செலுத்துவதில் பொதுமக்கள் ஆர்வம் காட்டவில்லை.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை பிரதேசசபைப் பகுதியில் ஆதன வரி அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆதனவரியை வீடுவீடாகச் சென்று அறவிடும் பொருட்டு சபையினரால் நடுக்கட்டல் உத்தியோகத்தர் ஒருவர் தரகு அடிப்படையில் நியமிக்கப்பட்டு ஆதனவரி அறவிடும் நடவடிக்கை ஆரம்பமாகியுள் ளது.

சபைக்கு போதிய நிதி வசதி இன்மையால் பிரதேச எல்லைக்குள் அபிவிருத்தித் திட்டப்பணிகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. ஆதனவரி அறவீடு மூலம் கிடைக்கும் நிதியைக் கொண்டு சிறிய அபிவிருத்தி வேலைகளை முன்னெடுக்க முடியும் என்பதைக் கருத்தில் கொண்டே ஆதனவரி அறவிடும் பணி ஆரம்பமாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆதனவரி அறவீட்டுக்கு வரியிறுப்பாளர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(202-236)

# சாவகச்சேரி நகர அபிவிருத்திக் கூட்டம்

மண்டுவில், பெப்.16

சாவகச்சேரி நகரசபையின் நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபையின் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் முற்பகல் 10 மணிக்கு நகரசபை உத்தியோகத்தர்களுக்கான உள்ளூராட்சி மறு சீரமைப்பு நடவடிக்கைகள் சம்பந்தமான கலந்துரையாடலும் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் தொழிற்சாலைகள் பாதுகாப்பு பொறியியலாளர் எஸ்.மகேந்திரன் ''தொழிற்சாலைகள் பாதுகாப்பும் சுகாதார சேவைகள் கட்டளைச் சட்டமும்'' என்ற தலைப்பில் கருத்துரை நிகழ்த்துவார்.

(202-59)

# அல்வாயில் கைதான பெண்ணுக்கு அபராதம்

மந்திகை, பெப்.16

கசிப்பு விற்பனை செய்து வந்ததாகக் கூறப்படும் பெண் ஒருவருக்குபருத்தித்துறை நீதிமன்றம் இரண்டேகால் இலட்சம் ரூபா தண்டம் விதித்ததுடன், தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறின் மூன்றரை வருட கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்துள்ளது.

அல்வா யைச் சேர்ந்த பெண் ஒருவர் கசிப்பு விற்பனை செய்து கொண்டிருந்த போது பருத்தித்துறைப் பொலிசாரிடம் கையும் மெய்யுமாகச் சிக்கிக் கொண்டார். அவரிடமிருந்து கசிப்பு உற்பத்தி உபகரணங்கள், கசிப்பு என்பனவற்றையும் பொலிசார் மீட்டனர்.

இப்பெண் பொலிசாரினால் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

நீதிமன்றம் கசிப்பு வைத்திருந்த குற்றத்துக்கு ஒன்றேகால் இலட்சம் ரூபா தண்டமும், தண்டப்பணத்தைச் செலுத்தத் தவறின் இரண்டரை வருட கடூழியச் சிறைத் தண்டனையும், கசிப்பு உற்பத்தி உபகரணங்களை வைத்திருந்ததற்கு ஒரு இலட்சம் ரூபா தண்டமும், தண்டப் பணத்தைச் செலுத்தத் தவறின் ஒன்றரை வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. சான்றுப் பொருள்களும் அழிக்கப்பட்டன.

(1-218)

# கல்விச் சாலைக் காட்சிகள்

இடைக்காடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற தரம்-1 கால்கோள் விழாவில் மாணவர்கள் ஊர்வலமாக அழைத்து வரப்படுகின்றனர். கல்லூரி அதிபர் ஏ.அருந்தவநேசன், பிரம்மஸ்ரீ ஜெயராம் குருக்கள், யாழ்.கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.இராமநாதன், மக்கள் வங்கி உத்தியோகத்தர் எஸ்.சுகந்தன் ஆகியோரும் வித்தியாலய ஆசிரியர்களும் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: அச்சுவேலிச் செய்தியாளர்)

புத்தகலட்டி ஸ்ரீ விஸ்ணு வித்தியாலயத்தின் புதியகட்டடத் திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.கல்வி வலயப் பொறியியலாளர் எஸ்.சிவபாலன் மங்கல விளக்கேற்றுவதையும் வித்தியாலய அதிபர் கு.ரவிச்சந்திரன் மற்றும் விழாவில் கலந்துகொண்ட விருந்தினர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம் (படம்: ஆதவன்)

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற தரம் ஒன்று மாணவர்களின் கால்கோள் விழாவின்போது விழா மண்டபத்தில் மாணவர்கள் பூச் செண்டுடன் நிற்பதைக் காணலாம். (படம்: அருணன்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் தரம்-6 வகுப்பில் அனுமதி பெற்ற மாணவர்களுக்கான வரவேற்பு விழாவின் போது கல்லூரியில் அனுமதி பெற்ற மாணவிகள் அதிபர் திருமதி வி.சுகுமார் மற்றும் பிரதி அதிபர், ஆசிரியர்களுடன் அமர்ந்திருக்கின்றனர்.

உரும்பிராய் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற கால்கோள் விழாவில் அதிபர் செல்வி பா.செல்வரத்தினம் உட்பட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் கூடியிருப்பதைப் படத்தில் காணலாம். (படம்: கலைஞன்)

# ஐ.நா.வே, இணைத் தலைமைகளே! என்ன செய்கிறீர்கள்?

# தமிழின அழிப்புக்கு நீங்களும் உடந்தைதான்..!!

**வன்னியில் அவலப்படும் ஈழத் தமிழர்களுக்காக ஜெனீவா நகரில் உள்ள ஐ.நா. சபையின் முன்றலில் தீக்குளித்து தன்னுயிரைத் தியாகம் செய்தவர் முருகதாசன் (வயது - 27) இதன்போது அவர் எழுதிவைத்திருந்த மரண சாசனம் இங்கு பிரசுரமாகின்றது.**

*உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்*

*என் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்தத் தவறிய உலகமே, உங்களின் மனசாட்சியைத் தட்டியெழுப்ப என்னுடைய இனிய உயிரை வழங்குகின்றேன்.*

*எனது பெயர்: முருகதாசன்*
*பிறந்த திகதி 02.12.1982*

*இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து லண்டன் நாட்டின் முகவரியில் வசிக்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன்.*

## முருகதாசனின் மனக்குமுறல்கள் இவை!!!

இலங்கையில் வாழும் தமிழ் இனம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அரசால் நசுக்கப்பட்டு, வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதனை நீங்கள் தடுத்து நிறுத்தவில்லை. பார்த்துக் கொண்டும் ஊக்கம் கொடுத்துக் கொண்டும் இருக்கின்றீர்கள்.

போர் தொடர்பான நடைமுறைகள், ஜெனீவாப் பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இன அழிப்பு, அதற்கான சட்டங்கள், நடைமுறைகள் எல்லாவற்றையும் ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கள் என்பன வைத்திருக்கின்றன. தனது உறுப்பு நாடுகள் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றெல்லாம் சட்டம் வைத்துள்ளீர்கள். ஆனால் இவற்றையெல்லாம் மீறி எனது தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமான இலங்கைத் தீவில் ஸ்ரீலங்கா அரசு படுகொலை செய்து கொண்டிருக்கின்றது.

இன்று வன்னியில் எனது நான்கரை லட்சம் தமிழ் உறவுகள் எப்படிக் கொடூரமாக வதைக்கப்படுகின்றார்கள் என்பதை உலகின் பிரதி நிதிகளான ஐ.நா. அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் அங்கிருந்து வெளியிடும் அறிக்கைகளில் இருந்தே தெரிந்து கொண்டிருப்பீர்கள்.

வன்னியில் என் இனத்தின் நான்கரை லட்சம் பேர் ஒரு குறுகிய பகுதிக்குள் முடக்கப் பட்டு ஸ்ரீலங்கா அரச படைகளால் நாள் தோறும் எறிகணைத் தாக்குதல்கள் மூலமும் வான் குண்டுத் தாக்குதல்கள் மூலமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான என் உறவுகளின் பிணங்கள் வீதிகள் எங்கும் கிடப்பதை அறிந்தபோது எனக்கு தாங்க முடியாத துயரமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. நாள் தோறும் எமக்கு கிடைக்கும் செய்திகளில் வீதி வீதியாகக் கொல்லப்பட்டுக் கிடக்கும் என் இனத்துப் பாலகர்கள், பால்குடிக் குழந்தைகள் கர்ப்பிணிப் பெண்கள், நோயாளர்கள் பற்றித் தான் தகவல்கள் வருகின்றன.

மருத்துவமனைகள் அங்கு பாதுகாப்பானவையாக இல்லை. மருத்துவமனைகள் கூட குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. மருத்துவமனைகளைத் தாக்குவதை ஸ்ரீலங்கா அரசே நியாயப்படுத்துகின்றது. அவர்கள் தொடர் தாக்குதல்களை நடத்தி மக்களைக் கொல்கின்றார்கள். வன்னியில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள். அதனால் தாக்குவோம் என்கிறார்கள்.

உங்களின் மொழியில் கேட்கிறேன் பிறந்த குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள், சிறார்கள் கொல்லப்படுகின்றார்கள், வயிற்றில் இருக்கும் சிசுக்கள் கூடக் கொல்லப்படுகின்றனர் அவர்களும் பயங்கரவாதிகளா?

மக்களைக் கொல்வது பயங்கரவாதம் என்கி றீர்கள். அங்கு தமிழ் மக்கள் அரசால் நாள் தோறும் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அவர்கள் இடம்பெயர்ந்து ஒரு இடத்தில் தரித்து நிற்கின்ற போதும், மருத்துவமனைகளுக்கு செல்கின்ற போதும், வீதிகளில் நடமாடுகின்றபோதும் என்று எங்கும் அவர்கள் கொல்லப்படுகின்றனர். கொத்துக் கொத்தாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கிடக்கிறார்கள்.

### நேரில் பார்த்த உறவினர்கள் சொன்னது…

முல்லைத்தீவு சுதந்திரபுரச் சந்தித் திடலில் ஐ.நா.வின் உலக உணவுத்திட்ட அதிகாரிகள் கொடியை ஏற்றி நிலைகொண்டு நிவாரணத்தை வழங்கிக் கொண்டிருந்த போதும் அந்த திடல் மீது 26.01.2009 அன்று பகல் இரவாக எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது. அப்பகுதியில் இருந்த செஞ்சிலுவைக்குழு அலுவலகமும் தாக்கப்பட்டது. அன்று மட்டும் 302 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1199 பேர் படுகாயமடைந்தனர். அன்று அதிகளவில் உடையார்கட்டு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளெங்கும் பிணக்காடாக இருந்ததை எனது உறவினர் நேரில் பார்த்து தொலைபேசியில் சொல்லிய போது நான் அதிர்ந்து விட்டேன். யார் இருக்கிறார்கள்? யார் மடிந்தார்கள் என்பதை அறியாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினர். அவலங்களின் சாட்சியாக நின்ற ஐ.நா.அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளும் சிறிய பதுங்கு குழிகளுக்குள் பாதுகாப்பு தேடி இருந்து விட்டு அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறினர்.

இவ் விடயம் அன்றைய நாள் மறக்க முடியாதளவுக்கு எனக்கு பெரும் மன அழுத்தத்தை ஏற்படுத்தி யது. இது பற்றி ஐ.நா.பிரதிநிதிகள், செஞ்சிலு வைக்குழுப் பிரதிநிதிகள் அறிக்கை வெளியிட் டனர். அப் பகுதி பாதுகாப்பு வலயம் என்று ஸ்ரீலங்காவால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும். இவ்வாறு தானே பாதுகாப்பு வலயம் என அறிவித்து அதில் பன்னாட்டுப் பிரதிநிதிகள் சாட்சியாக இருக்க, ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களை படுகொலை செய்து வருகிறது. நாள் தோறும் இத்தகைய தாக்குதல்கள் நடக்கின்றன. இது அரச பயங்கரவாதம் இல்லையா? அரசே நடாத்தும் இனப்படு கொலை இல்லையா?

இவ்வாறே போரின் போது மருத்து வமனைகள் இலக்கு வைக்கப் படக் கூடாது என்ற மரபையும் புறந்தள்ளி ஐ.நா. அதிகாரிகளும்பன்னாட்டு செஞ்சிலுவைக் குழுப் பிரதிநிதிகளும் நின்றவேளையில் ஸ்ரீலங்கா அரசுப்படைகள் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்கி வந்த புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது 02.02.2009 தொடக் கம் 04.02.2009 திகதி வரை குண்டுகளை வீசி நோயாளர்களைக் கொன்றதற்கு உங்களவர்களே சாட்சி.

4ஆம் திகதி ஸ்ரீ லங்காவின் சுதந்திரநாள் கொண்டாட்டம். அன்றுதான் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முற்றாக அழித்துச் செயலிழக்கச் செய்யப்பட்ட நாளாகவும் அமைந்தது.

புதுக்குடியிருப்பு மருத்துவமனை தொடர் விமானக் குண்டுவீச்சுகளாலும் ஆட்லறி கொத்துக் குண்டுகளாலும் தாக்கப்பட்ட போது அங்கு அப்பாவி மக்கள் 500 பேர் சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி உறுதிப்படுத்தி தகவல் வெளியிட்டிருந்தார்.

## நீங்கள் ஏமாற்றியதை உணர்கிறோம்; அதனால் மனம் வெதும்பியே உயிர் கொடுக்கிறேன்

### மருத்துவமனை மீதான தாக்குதல் நியாயப்படுத்தல்

இதேவேளை இதற்கு ஒரு கிழமைக்கு முன் 26.01.2009இல் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கப்பட்டு மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பி.பி.சி. நிறுவனத்திற்குப் பேட்டியளித்த ஸ்ரீலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும் போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்கு போக வேண்டும்? எனக் கேட்டு உடையார்கட்டு மருத்துவமனை மீதான தாக்குதலை நியாயப்படுத் தியிருந்தார். உடையார்கட்டு பகுதியை சில தினங்களுக்கு முன்னர்தான் பாதுகாப்புவலய மென குறிப்பிட்டு அங்கு மக்களை ஒன்றுகூடுமாறு சிறிலங்கா அரசு அறிவித்திருந்த நிலையிலும்கூட அந்த மருத்துவமனை தாக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக் கொண்டு நியாயப்படுத்தியுமிருந்தார்.

ஸ்ரீலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார [illegible] புதுக்குடியிருப்பு மருத்துவமனையே சில தினங்கள் கழித்து தாக்கப் பட்டது. 02.02.2009 தொடக்கம் 04.09.2009 வரை குண்டுவீசி நோயாளர்கள் கொன்றொழிக்கப் பட்டார்கள். ஐ.நா. மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கி நின்ற நிலையிலேயே ஸ்ரீலங்கா அரசபடை கள் மேற்படி மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டன.

பிரித்தானிய ஸ்கை ஒளிபரப்பு நிறுவனத்திற்கு 03.02.2009 அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலைகளும் இல்லை அதனால் புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இலக்கு என்று வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப்படுத்தி ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருத்துவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி சிறிலங்கா அரசின் இராணுவப் பேச்சாளர் உதயநாணயக்காரவும் ஜனாதிபதியின் சகோதரரும் பாது காப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ஷ ஆகியோர் உத்தியோகபூர்வமாகவே உலக செய்தி நிறுவனங்களில் கருத்துக்களை வெளியிடுகின்றனர். சர்வதேசச் செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை அவர்க ளால் கூற முடிகின்றது என்றால், மருத்துவ மனைகள் தாக்கப்படுவது உலக நாடுகள் கொடுத்துள்ள அங்கீகாரம் என்று தானே பொருள்படும்.

முள்ளியவளையில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொது மருத்துவமனை உடையார்கட்டில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கிய மல்லாவி மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை என்பன மருத்துவமனைகள் என்பதற்காகவே தாக்கப்பட்டுள்ளன.

இரு தரப்புக்களையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்களை மதிக்கும்படி கோரும் இந்நாடுகளுக்கு, வைத்தியசாலைகளைத் தாக்குவதன் மூலம் வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு வைக்கும் ஸ்ரீலங்கா அரசு அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

ஸ்ரீலங்கா அரசினால் முன்னெடுக்கப் படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித இனத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாகும். இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் ஸ்ரீலங்கா அரசின் போக்கால் சென்ற மாதம் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும், காயமடையவும் நேர்ந்துள்ளது.

எனது தமிழ்மக்கள் இலங்கைத் தீவில் படும் துயரத்தின்பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக எனது உயிரைக் கொடுக்கின்றேன். இந்த முடிவை எடுத்து நடைமுறைப் படுத்தும் இடைக்காலத்தில் கூட தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைத் தீவெங்கும் வீதி வீதியாக கொல்லப்படுகின்றார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணமே உள்ளது.

இந்த மனிதத் துன்பியல் கொடூரம் மனிதாபி மான உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிட்டுவதைத் தடை செய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் தாமதமாகியுள்ளது.

அனைத்துலக சமூகம் இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ள போதிலும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களை பின்பற்றுமாறு ஸ்ரீலங்கா அரசிற்கு கடும் அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து ஸ்ரீலங்கா அரசிற்கு படை மற்றும் பொருண்மீக உதவிகளை வழங்கி வருகின்றமை பெரும் துர்ப்பாக்கியமாகும்.

தமிழ் தேசம், சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழிடமே இலங்கைத்தீவு என்பது, தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும். இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில் தான் இரு தேசங்களினதும் உண்மையான பிரதிநிதிகள் அதாவது இரண்டு தேசங்களினதும் எதிர்காலம், பாதுகாப்பு, பரஸ்பர நலன் போன்றவற்றிற்காக இரண்டு தேசங்களும். கூடிச் செயற்பட்டு, தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு நீதியான நீடித்து நிற்கக் கூடிய தீர்வை எவ்வாறு காணலாம் என்பது குறித்த பேச்சுக்களில் ஈடுபடவேண்டும்.

இலங்கைத் தீவு முழுவதும் சிங்கள இனத்தவருக்கு உரித்தானது என்ற கொள்கை நிலைப்பாட்டினால்தான், சிங்களவர்களோடு சமத்துவமாக வாழும் ஓர் அரசியல் ஏற்பாட்டை பேச்சு மூலம் காண்பதற்கு தமிழினம் எடுத்த அனைத்து முயற்சிகளும் தோற்றும் போயின சமத்துவமான தமிழ் தேசம் உள்ளது என்ற இந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த பௌத்த சிங்கள இன ரீதியிலான தேசியவாதமே இன அழிப்பு நோக்கிலான போர் வழித் தீர்விற்கு ஸ்ரீலங்கா அரசைத் தள்ளியுள்ளது.

நான்கு நூற்றாண்டுகளாக அந்தத் தீவில் தமிழ் இனத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும் பிரிட்டன் அந்தத் தீவின் பெரும்பான்மை இனமான சிங்களத்திடம் ஆட்சியை விட்டுச்சென்ற வரலாறும் தெரியும். இந்த உரிமைகளுக்காக அறவழியில் தமிழினம் போராடியபோது அதை சிங்கள அரசு வன்முறை கொண்டு அடக்கியதனாலேயே தமிழினம் அடிக்கு அடி கொடுக்க வேண்டிய ஆயுதப் போராட் டத்துக்கு தள்ளப்பட்டது.

அதாவது தமிழ் மக்களுக்கு எதிரான ஸ்ரீலங்கா அரசின் படை மற்றும் பௌதீக ரீதியிலான அடக்குமுறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும் அதுவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்பும் போராட்டத்தைத் தூண்டியது என்பதையும் உலகம் கவனிக்க வேண்டும்.

### இனத்தலைமை விடுத்த அறிக்கை தமிழர் மனங்களை ஆழக் காயப்படுத்தியது

தமிழ்த்தேசம் என்ற உண்மை இருப்பு நிலையை தனது இனவழிப்பு செயற்பாடு மூலம் சிதைத்து அழிப்பது தான், சிறிலங்கா அரசு தொடுத்துள்ள போரின் நோக்கமாகும். இதை அங்கீகரிப்பது போல 03.02.2009 இல் நோர்வே, யப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் [அல்லது இணைத் தலைமை நாடுகள்] விடுத்த கூட்டறிக்கை அனைத்து தமிழர்களின் மனதையும் ஆழக் காயப்படுத்தியுள்ளது.

அதாவது தமிழ் மக்களது உரிமைப் போரினதும் சிங்கள இனவாதத்தினதும் அடிப்படைகளைத் தெரிந்துகொண்டுமே இணைத்தலைமை நாடுகள் ஸ்ரீலங்கா அரசிற்குச் சார்பாகவும் தமிழ்மக்கள் தமது உரிமைப்போரைக் கைவிட வேண்டும் என்றும் கூறி அறிக்கை வெளியிட்டமையும் கூட எனக்கு ஏமாற்றம் ஏற்படுத்தியது.

ஒரு இனம் தனது உரிமைகளைக் கேட்பது தவறு என்று உலகம் 'கருதுகின்றதா? குறிப்பாக ஐ.நா. அவ்வாறு தான் கருதுகின்றதா? உலகத்தில் ஏன் தமிழ் இனத்துக்கு மட்டும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அல்லது உரிமை மறுப்புக்கு உலகம் ஆதரவு கொடுக்கின்றது. அந்த மறுப்புக்கு ஏன் உலகம் துணைபோகின்றது? நாம் ஏன் அடிமைகளாக இருக்க வேண்டும் என உலகம் நினைக்கின்றது.

### உங்கள் நடுநிலை என்பது இதுதானா?

இன்று ஒரு அரசு பிரகடனப்படுத்தி ஒரு இனத்தை அழித்துக் கொண்டிருப்பது தெரிந்தும் உலகமே அதனைத் தடுக்கவில்லை. அறிக்கைகளை மட்டும் வெளியட்டு விட்டு அமைதியாகி விடுகின்றன. ஆனால் அந்த அமைதியை நீங்கள் அந்த அரசின் இன அழிப்பிற்கு கொடுத்த அனுமதியாக கருதியே ஸ்ரீலங்கா அரசு இன அழிப்பை தீவிரப்படுத்தியுள்ளது. இன அழிப்பைச் செய்யும் அந்த நாட்டுக்கு நீங்கள் ஏன் அழுத்தம் கொடுக்கிறீர்கள் இல்லை? இதுதான் உங்கள் நடுநிலையா?

1958 முதல் இன்று வரை தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக கைசாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் ஸ்ரீலங்கா அரசால் பல தடவைகள் குறிப்பாக கடைசி நோர்வே போர்நிறுத்த உடன்பாடு வரை கிழித்தெறியப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களின்போது இணையத்தலைமை நாடுகள் ஸ்ரீலங்காவுக்கு சார்பாகவே செயற்பட்டன. இந்த பேச்சுக் காலத்தில் ஸ்ரீலங்கா படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன்படுத்தியது என்பதும் தெரிவாகத் தெரிந்தது. பேச்சுக்களின் காலங்களை தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தியது.

மக்களை சுதந்திரமாக நடமாட விடவேண்டும் என்று சொல்கின்றீர்கள். சிங்கள ஸ்ரீலங்கா அரசு எமது மக்களை ஆட்சிபுரிய அனுமதிக்க வேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர்கள்.

### அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அநியாயங்கள்

ஒருபுறம் ஸ்ரீலங்கா அரசின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எனது மக்கள் கடத்தப்பட்டு கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்டு

[15 ஆம் பக்கம் பார்க்க]

# இலங்கைத் தூதரகத்தை மூடாவிடின் மிகப்பெரிய போராட்டம் வெடிக்கும்!!

## விஜயகாந்த் எச்சரிக்கை; நெடுமாறனுக்கு பாராட்டு மழை

இராமநாதபுரம், பெப்.16

இலங்கையில் தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கும்போது இந்தியாவில் அந்த நாட்டு தூதரகம் இருக்க வேண்டுமா?. அந்தத் தூதரகத்தை மூடாவிட்டால் அடுத்த மாதம் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் - என்று தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் ஆவேசமாக கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் பிரதிபலன் எதிர்பாராமல் அன்றிலிருந்து பாடுபடுபவர் நெடுமாறன் ஒருவர்தான். அவரை நான் பாராட்டுகிறேன். மதிக்கிறேன். மற்றவர்கள் எல்லாம் மக்களை ஏமாற்றவே இலங்கைப் பிரச்சினையைக் கையில் எடுத்திருக்கிறார்கள் என்றும் விஜயகாந்த் கூறினார்.

இலங்கை தூதரகத்தை மூடாவிட்டால் அடுத்த மாதம் மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்று அவர் கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கைத் தமிழர்களுக்காக பல்வேறு கட்சிகளும் போராட்டங்களை நடத்தி வருகின்றன. நான் 1983 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கைத் தமிழர்களுக்காக பல போராட்டங்களை நடத்தியிருக்கிறேன். எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்த போது நடிகர்கள் உண்ணாவிரதத்தை நடத்தினேன்.

இலங்கைத் தமிழர்களுக்காக எம்.ஜி.ஆர். கறுப்புச்சட்டை அணியச் சொன்னபோது, கருணாநிதி கறுப்புச்சட்டை அணிந்தாரா? இன்று எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று கூறுகிறார். அப்போது அவர் ஏன் அந்த ஒற்றுமையைக் காட்டவில்லை.

இலங்கையில் தமிழர்கள் செத்துக் கொண்டிருக்கும்போது மத்திய அரசும், சிதம்பரமும், பிரணாப் முகர்ஜியும் புலிகள் ஆயுதங்களை கைவிட வேண்டும் என்று பேசுகிறார்கள். இலங்கை அரசு கத்தி வைத்துள்ளது. புலிகளிடம் கேடயம் தான் உள்ளது. அதை வைத்து இலங்கையின் போரை புலிகள் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலில் கேடயத்தை போடு என்று சொன்னால் கத்தி வைத்திருப்பவன் சும்மா இருப்பானா?

இலங்கை தமிழர்கள் பிரச்சினையில் ஒட்டுமொத்த உணர்வையும் காட்ட மிகப் பெரிய போராட்டம் தேவை. இதில் ஐ.நா. சபையும், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் தலையிட வேண்டும். அவர்களுக்கு தமிழர்கள் அனைவரும் தந்திகளும், குறுஞ்செய்தியும் அனுப்ப வேண்டும். இரண்டு நாளில் நான் அதற்கான முகவரியை தருவேன்.

வரும் 21ஆம் திகதி இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் ஒபாமா தலையிட வேண்டும் என்று கோரி அமெரிக்க தூதரகத்தில் மனு கொடுக்க இருக்கிறேன். அப்போது இளைஞர்களும், மாணவர்களும் பெருமளவில் கலந்து கொள்ள வேண்டும்.

தமிழர்கள் செத்துக்கொண்டிருக்கும் இங்கே இலங்கை தூதரகம் எதற்கு? இருநாடுகளுக்கிடையே சுமுக உறவு வேண்டும் என்பதற்காகத் தான் தூதரகம் வேண்டும். தமிழினம் அழியும் போது இங்கு சிங்களவன் ஏசி அறையில் சொகுசாக இருப்பது தேவையா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். மார்ச் மாதத்திற்குள் இலங்கை தூதரகத்தை மூடாவிட்டால் பெரும் போராட்டம் வெடிக்கும்.

பதவியைத் துறந்தால் தனிஈழம் கிடைக்குமா என்று முதலமைச்சர் கேட்கிறார். இதிலிருந்தே தனிஈழம் கிடைக்காது என்று அவர் எண்ணுகிறார் போலும். 2 மாதத்தில் முடிய போகின்ற மத்திய அரசிலில் இருந்து நாங்கள் பதவி விலகினால் என்ன ஆகப்போகிறது என்று கேட்கிறார்கள் - என்றார்.

ஈழத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் நடத்தி வரும் தாக்குதலை தடுத்து நிறுத்தக் கோரி சென்னையில் நேற்றுமுன்தினம், மெழுகுவர்த்தி ஏந்தி அமைதி ஊர்வலம் நடத்திய திபெத்திய மாணவர்கள்.....

# மத்திய அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் தவறானவை!

## இளங்கோவன் கூறுகிறார்

இலங்கைப் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகள் முற்றிலும் தவறானவை - என்று மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் கூறியுள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசு அலட்சியம் காட்டுகிறது எனக் கூறப்படுவது முற்றிலும் தவறு. இலங்கைத் தமிழர்கள் நல்ல முறையில் வாழவேண்டும்; அவர்கள் அந்த நாட்டின் முதல்தர மக்களாக வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து கிடையாது. இந்தியக் கடற்படையினர் தமிழக மீனவர்களைத் தாக்குகின்றனர் எனக் கூறப்படும் முறைப்பாடும் தவறானது - என்றும் கூறினார்.

# போரை நிறுத்துமாறு இலங்கைக்கு இந்திய அரசு கட்டளையிட வேண்டும்

## ராமதாஸ் வலியுறுத்து

திண்டிவனம், பெப். 16

இலங்கையை போர் நிறுத்தம் செய்ய இந்திய அரசு வலியுறுத்தினால் மட்டும் போதாது. போரை உடன் நிறுத்தவேண்டும் எனக் கட்டளையிட வேண்டும் - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

தைலாபுரத் தில் செய்தியாளர்களிடம் பேட்டியளித்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

இந்தியாவின் பகை நாடு பாகிஸ்தான். சீனா நமக்கு நட்பு நாடல்ல. இந்த இரு நாடுகளும் இலங்கைப் பிரச்சினையில் ஆதிக்கம் செலுத்த தொடங்கி இருக்கின்றன.

அண்மையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இஸ்லாமிய இளைஞர்கள் பாகிஸ்தானில் பயிற்சி அளிக்கப்பட்டு திரும்பியுள்ளனர்.

இந்தியாவை ஒரு பகை நாடு என்று ஜே.வி.பி. போன்ற கட்சிகள் பிரகடனம் செய்யும் அளவுக்கு துணிந்திருக்கின்றன. இத்தகைய சூழ்நிலையில் இலங்கையில் தமிழர்களுக்கென்று தனி நாடு உருவானால், அது இந்தியாவின் நட்பு நாடாக விளங்கும்.

இந்தியா உடனடியாகத் தலையிட்டு இலங்கையில் போரை நிறுத்தாவிட்டால், மிகப்பெரிய மனிதப் பேரழிவு ஏற்படும் என்று அஞ்சப்படுகிறது. 3 லட்சத்துக்கும் அதிகமான தமிழர்கள் மிக குறுகியப் பகுதியில் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் வரவழைத்து இலங்கை இராணுவத்தினரால் கொல்லப்படுகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களும் முல்லைத்தீவு பகுதியிலிருந்து வெளியேறிவிட வேண்டும் என்று இலங்கை அரசு கெடு விதித்து எச்சரித்திருக்கிறது எனச் சொல்லப்படுகிறது.

இதுகுறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துக்கு தமிழ் நாட்டில் உள்ள அனைத்து சட்டத்தரணிகளும் உடனே பல்லாயிரக்கணக்கான தந்திகளை அனுப்ப வேண்டும். இலங் கையை போர் நிறுத்தம் செய்ய இந்தியா வலியுறுத்தினால் மட்டும் போதாது, போரை நிறுத்து என்று கட்டளையிட வேண்டும். ஊடுருவலைத் தடுக்க சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக அலுவலகத்தையும் எழும்பூரில் உள்ள புத்தமதக் கோயிலையும் காவல்துறை தொடர்ந்து கண்காணித்து வரவேண்டும்

இப்போது ஓர் இனம் அழிக்கப்படுகிறது என்ற வேதனையில் 7 இளைஞர்கள் தீயில் கருகி உயிரிழந்திருக்கிறார்கள்.

வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் கட்சி பாகுபாடின்றி இலங்கைப் பிரச்சினையை விவாதித்துள்ளனர்.

தமிழகக் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்றத் தலைவர் சுதர்சனன், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் தங்கபாலு ஆகியோருக்கு இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்துமாறு கடிதம் எழுத உள்ளேன்.

எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே.அத்வானியும் இலங்கைத் தமிழர்களைக் காக்க இந்திய அரசு தவறிவிட்டது என்று குற்றம் சாட்டியிருக்கிறார் - என்று கூறினார்.

# நாளைய மனிதச்சங்கிலிப் போராட்டத்தை எதுவித இடையூறுமின்றி நடத்தவேண்டும்

## பழ. நெடுமாறன் வேண்டுகோள்

சென்னை, பெப். 16

ஈழத் தமிழர் படுகொலையைக் கண்டித்தும் போர்நிறுத்தம் கோரியும் நாளை நடத்தப்படும் மனிதச்சங்கிலிப் போராட்டம் போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் நடத்த வேண்டும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து சனிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் (நாளை) 17ஆம் திகதி மாலை மனிதச் சங்கிலிப் போராட்டம் நடைபெற உள்ளது.

அதில் பங்கேற்பவர்கள் போக்குவரத்துக்கோ, பொதுமக்களுக்கோ இடையூறு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். வீதியின் ஒருபுறமாகக் கைகோத்து நிற்க வேண்டும்.

தமிழகத்தின் வடக்கே தாம்பரத்தில் தொடங்கி செங்கல்பட்டு, திண்டிவனம், விழுப்புரம், உளுந்தூர்பேட்டை, திருச்சி, திண்டுக்கல், வாடிப்பட்டி, மதுரை, விருது நகர், கோவில்பட்டி, நெல்லை, வள்ளியூர், நாகர்கோவில், கன்னியாகுமரி வரையிலும் -

மேற்கே கோவையில் தொடங்கி திருப்பூர், ஈரோடு, நாமக்கல், கரூர், குளித்தலை, திருச்சி, தஞ்சை, நீடாமங்கலம், நாகை வரையிலும் -

கிழக்கு கடற்கரையோரமாக புதுவையில் தொடங்கி கடலூர், சிதம்பரம், சீர்காழி, மயிலாடுதுறை, தரங்கம் பாடி, காரைக்கால், நாகை, திருத்துறைப்பூண்டி, பட்டுக் கோட்டை, பரமக்குடி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், கடலாடி, தூத்துக்குடி வரையிலும் மனிதச்சங்கிலிப் போராட்டம் நடைபெறும். இந்த 3 பாதைகளிலும் இடம்பெறாத ஊர்களைச் சேர்ந்தவர்கள் அவரவர் ஊர்களில் மனிதச் சங்கிலி போராட்டம் நடத்தலாம் - என்றுள்ளது.

# போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி பிரதமரைச் சந்தித்துப் பேசுவோம்

## இலங்கைத் தமிழர் பேரவைத் துணைக்குழு தெரிவிப்பு

சென்னை, பெப். 16

இலங்கையில் போரை நிறுத்துவது தொடர்பான இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் வேண்டுகோள் அறிக்கையை, குடியரசுத் தலைவர், பிரதமரிடம் நேரில் அளிப்போம் - என்று அப் பேரவையின் துணைக்குழு தெரிவித்துள்ளது

இக்குழுவின் இரண்டாவது கூட்டம், சென்னையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத் துக்குப் பின், அதன் ஒருங்கிணைப்பாளரும், அமைச்சருமான துரைமுருகன் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கையில் போரை நிறுத்த வேண்டும் என்று குடியரசுத் தலைவரின் உரையில் தெரிவிக் கப்பட்டுள்ளது. இதற்காக அவருக்கு நன்றி கூறுகிறோம். இந்த அறிவிப்பு செயல் வடிவம் பெற வேண்டும்.

இலங்கையில் போரை நிறுத்த, ஐக்கிய நாடுகளின் சபையின் பொது மற்றும் பாதுகாப்புக் குழுவை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும்.

போரை நிறுத்தி, அங்கு அமைதியையும், மனித உரிமையையும் காப்பதற்கு சர்வதேச அமைதிப் படையை அனுப்ப வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சம உரிமையும், மனித உரிமையும் கிடைக்க வேண்டும். இந்தப் பிரச்சினையில் காமன்வெல்த் மற்றும் 'சார்க்' நாடுகள் தலையிட வேண்டும்.

இலங்கையில் போரை நிறுத்துவது தொடர்பாக, இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவையின் துணைக் குழு அறிக்கை தயாரித்துள்ளது. இந்த அறிக்கையை, ஐ.நா. சபைக்கோ, வேறு நாடுகளில் உள்ள மனித உரிமை ஆணையங்களுக்கோ நேரடியாக அனுப்ப இயலாது. மத்திய அரசு மூலமாகத்தான் செய்யமுடியும்.

இதற்காக, குடியரசுத் தலைவர், பிரதமர், வெளியுறவுத் துறை அமைச்சர் ஆகியோரை இந்த வாரத்திலேயே நேரில் சந்திக்க உள்ளோம். டில்லியில் உள்ள வெளிநாடுகளைச் சேர்ந்த தூதர்களையும் சந்தித்து அவர்களிடமும் அறிக்கையை அளிப்போம் - என்றார்.

# 'இன அழித்தலுக்கு எதிரான இந்தியர்கள்' ஈழத்தமிழருக்காக புதிய அமைப்பு உதயம்

ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுப்பதற்கு இந்தியாவிலுள்ள அனைத்து மக்களையும் ஒன்று திரட்ட சென்னையில் அனைத்து மதப் பிரமுகர்களும் இணைந்து "இன அழித்தலுக்கு எதிரான இந்தியர்கள்" என்ற அமைப்பை உருவாக்கியுள்ளனர்.

இப்புதிய அமைப்புக்கு கிறிஸ்தவப் பாதிரியார்கள், குன்றக்குடி பொன்னம்பல அடிகள், வள்ளலார் பக்தர்கள் உட்பட பலரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இந்தப் புதிய அமைப்பின் அறிமுகக் கூட்டம் நேற்றுமுன்தினம் சென்னையில் நடந்தது. இவ்வமைப்பின் பொறுப்பாளர்களில் ஒருவரான தமிழ்மையம் அருட்தந்தை ஜெகத்கஸ்பர் இக்கூட்டத்தில் ஈழ நிலைவரம் குறித்து தெளிவாக உரையாற்றினார்.

அவரது உரையில், ஒவ்வொரு நாளும் 200 ஈழத்தமிழர்கள் கொன்று குவிக்கப்படுகிறார்கள். வன்னிப்பகுதியில் குண்டுகளால் செத்துமடியும் மக்களை விடவும் பட்டினியால் செத்து மடியும் ஈழத்தமிழர்கள் அதிகம். வன்னிப்பகுதியில் இன்னும் 3,4 நாள்களுக்குத்தான் உணவு இருக்கும் என்று கூறப்படுகிறது. இந்த இக்கட்டான நிலையில் அவர்களுக்காக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் உரக்கக் குரல் கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

தமிழகத்தில் பல்வேறு கட்சியினரும் ஈழத் தமிழருக்கு ஆதரவாக குரல் கொடுத்து வருகிறார்கள். எனினும் அனைத்துத் தமிழர்களும் ஒன்றுபட்டு குரல் எழுப்புதற்காகத்தான் இந்த புதிய அமைப்பை உருவாக்கியிருக்கிறோம். இந்த அமைப்பின் முதற்கட்டப் போராட்டமாக வரும் 22 ஆம் திகதி சென்னையில் (அனைத்துத் தரப்பினரும்) 1 லட்சம் பேர் பங்கேற்கும் அமைதிப்பேரணி நடைபயணம் செய்யவிருக்கிறோம் என்று தெரிவித்தார்.

# மாணவருக்குப் பாலியல் கல்வி அவசியம்

## சென்னை பல்கலை. துணைவேந்தர் பேச்சு

மாணவர்களுக்கு பாலியல் கல்வி அவசியம் தேவை. இதன் மூலம் அவர்கள் தவறான வழிக்குச் செல்வதைத் தடுக்க முடியும் - என்று சென்னை பல்கலைத் துணை வேந்தர் ராமச்சந்திரன் கூறியுள்ளார். சென்னையில் இதுகுறித்த சர்வதேச கருத்தரங்கு நேற்றுமுன்தினம் நடந்தது. இதில் பேசுகையிலேயே அவர் இதனைக் கூறினார்.

குழந்தைப் பருவத்தில் இருந்தே பெற்றோரும் ஆசிரியரும் பாலியல் கல்வியை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் அவர்கள் தவறான வழிக்குச் செல்வதைத் தடுக்க முடியும். இளம் [illegible] மாணவர்களுக்கு பெற்றோர், பாலியல் குறித்து கற்றுக் கொடுப்பது மிக முக்கியம் - என்று மேலும் கூறினார்.

# இராமேஸ்வரம் மீனவர் தொடர்ந்து நடத்திவரும் போராட்டத்தால் 30 ஆயிரம் பேர் வேலையிழப்பு!

இராமேஸ்வரம், பெப்.16

இலங்கைக் கடற்படையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் நடத்திவரும் தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தால் 30 ஆயிரம் பேர் வேலையிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இராமேஸ்வரம், பாம்பன் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றமையைக் கண்டித்து, கடந்த [illegible] திகதி முதல் இராமேஸ்வரம், [illegible] பாம்பன் பகுதியைச் சேர்ந்த 15,00 நாட்டுப்படகு மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் பாம்பனில் நாட்டுப்படகு மீனவர்கள் கையில் கறுப்புக் கொடியேந்தி ஆர்ப்பாட்டம் செய்தனர்.

வேலைநிறுத்தம் காரணமாக 30 ஆயிரம் பேர் வேலை இழந்துள்ளனர். இராமேஸ்வரம் பகுதியில் நாட்டுப் படகுகளின் மூலம் சீலா, விளைமீன், ஊடகம், பாறை, கட்லா உள்ளிட்ட மீன்கள் நாளொன்றுக்கு 150 தொன் வரை பிடிபடும். தற்போது வேலைநிறுத்தத்தால், மீன்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி, ஜெகதாபட்டினம், தொண்டி, பகுதிகளில் பிடிபடும் மீன்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றன.

மீனவர்சங்கத் தலைவர் ராயப்பன்கூறுகையில் -

மீனவர்களுக்கு நீதி கிடைக்கும் வரை போராட்டம் தொடரும் - என்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய நாடுகளுடன் நல்லுறவு பேண அமெரிக்க அரசு மிகுந்த ஆர்வம்

### ஹிலாரி கிளின்டன் கூறுகிறார்

கொழும்பு, பெப். 16

''ஆசிய நாடுகளுடன் நல்லுறவை வளர்ப்பதற்கு அமெரிக்கா ஆர்வம் கொண்டுள்ளது.''

- இவ்வாறு அமெரிக்காவின் வெளிவிவகார அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரம் ஆசியப் பிராந்திய நாடுகள் சிலவற்றுக்கு ஹிலாரி கிளிண்டன் விஜயம் மேற்கொள்ளவுள்ள நிலையிலேயே இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

ஜப்பான், சீனா, தென்கொரியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளுக்கே அவர் விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது வட கொரியாவின் அணுவாயுதத் திட்டம், பொருளாதார வீழ்ச்சி தொடர்பான பிரச்சினை, புவி வெப்பமடைதல் ஆகியவை தொடர்பாக கலந்துரையாடவுள்ளார் எனக் கூறப்படு கிறது.

இவரின் பயணமானது ஆசிய அமெரிக்க உறவுகளின் பிரதிபலிப்பாக அமையும் என்று பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்திருந்தார்.

அமெரிக்கா சீனாவுடன் சிறந்த உறவுகளை பேணி வருகிறது. கடந்த காலங்களில் பொருளாதார உறவுகளை சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றன. தொடர்ந்து அந்த உறவுகள் முன்னெடுக்கப்படுமென்றும் கூறினார்.

1960 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமெரிக்க வெளிவிவகார அமைச்சராகப் பதவியேற்ற ஒருவர் ஆசிய பிராந்தியத்திற்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல் தடவை என பி.பி.ஸி. மேலும் தெரிவிக்கிறது. வடகொரியா மனப்பூர்வமாகத் தனது அணுவாயுதத் திட்டத்தை கைவிடுமானால், ஒபாமாவின் நிர்வாகம் தனது இராஜதந்திர உறவுகளை மேம்படுத்தும் என்றும் அறியப்படுகிறது.

தனது முதலாவது வெளிநாட்டுக் கொள்கை பற்றிய பேட்டியின்போது நடைபெறப் போகும் பேச்சுகளுக்கு முன்பு இடையூறு நடக்கும் விதத்தில் எத்தகைய சம்பவங்களும் இடம்பெறக் கூடாதீ என்று ஹிலாரி கிளின்டன் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் ஹிலாரியின் பயணத்தின்போது, வடகொரியா நீண்டதூர ஏவுகணையை பரீட்சிக்க இருக்கிறது என செய்திகள் வெளியாகியுள்ளன. அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடும் பட்சத்தில் அமெரிக்கா இராஜதந்திர சலுகைகளையும், பொருளாதார உதவிகளையும் வழங்குவதற்கு கொரியா உத்தரவாதம் வற்புறுத்தப்படுமெனவும் தெரியப்படுகிறது. கொரிய விவகாரம் சம்பந்தமாக 6 நாடுகளுடனான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான், தென் கொரியா, வட கொரியா பேச்சுகள் கடந்த பல மாதங்களாக கிடப்பில் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஹமாஸின் யுத்த நிறுத்தத்திற்கு இஸ்ரேல் நிபந்தனை விதிப்பு

ஹமாஸ் இயக்கத்தினரால் விடுக்கப்பட்ட யுத்த நிறுத்த அறிவிப்புக்கு இஸ்ரேல் நிபந்தனைகளை விதித்துள்ளது.

பலஸ்தீனர்களால் கடந்த 2006 ஆம் ஆண்டு பிடிக்கப்பட்ட இஸ்ரேலிய இராணுவ சிப்பாய் கிலாட் சாலிஸ் விடுவிக்கப்படவேண்டும். அப்படி விடுவிக்கப்பட்டால் மட்டுமே இஸ்ரேல் யுத்த நிறுத்தத்திற்கு உடன்படும். - இவ்வாறு அந்நாட்டு பிரதமர் ஈகுட் ஒல்வார் தெரிவித்துள்ளார்.

ஹமாஸ் இயக்கத்திற்கும் இஸ்ரேலுக்குமிடையிலான யுத்த நிறுத்தத்திற்கு எகிப்து முன்நின்று செயற்பட்டு வருகிறது.

கடந்த வியாழக்கிழமை ஹமாஸ் இயக்கம் இஸ்ரேலுடனான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஒபாமாவின் பொருளாதாரத் திட்டத்திற்கு முதல் வெற்றி; நாடாளுமன்றம் அங்கீகாரம்

வாஷிங்டன், பெப். 16

சரிந்த பொருளாதாரத்தை நிமிர்த்த சில ஆண்டுகள் ஆகலாம் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்கப் பொருளாதாரத்தைச் சீர் செய்வதற்காக 79 ஆயிரம் கோடி டொலர் கடனுதவி அளிப்பதற்கான பிரேரணைக்கு அந்நாட்டு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்தது.

அதற்கு சில மணி நேரத்துக்கு முன், அமெரிக்காவின் முன்னணித் தொழிலதிபர்கள் பங்கேற்ற கூட்டத்தில் ஒபாமா பேசியவை வருமாறு:-

இத்தகைய கடனுதவித் திட்டத்துக்கு அனுமதி அளிப்பது என்பது கடுமையான முடிவு. நசிந்து போயுள்ள நமது பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு நாம் மேற்கொள்ள வேண்டிய பயணத்தின் தொடக்கம் தான் இது என்பதை நீங்கள் (தொழிலதிபர்கள்) உணருவீர்கள் என நம்புகிறேன்.

குடும்பங்கள் மற்றும் தொழிலதிபர்களுக்கு மீண்டும் கடன் கிடைப்பதற்கு நமது நிதித்துறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டியுள்ளது.

இது போன்றதொரு நெருக்கடி எதிர்காலத்தில் ஏற்படாமலிருக்க ஒருங்கிணைந்த பொருளாதார சீர்திருத்தம் குறித்து நாம் சிந்திக்கவேண்டியுள்ளது. நமது பொருளாதார சிக்கல்களிலிருந்து உடனடியாக விடுபட, குறுகிய கால முதலீடுகள் எவ்வளவு முக்கியமோ அதுபோலவே நீண்ட கால முதலீடுகள் குறித்தும் சிந்திக்க வேண்டியது மிகவும் அவசியம்.

இந்த நெருக்கடியிலிருந்து மீள்வது அவ்வளவு சுலபமானதல்ல. ஒரு சில மாதங்களில் தீரக்கூடியது அல்ல. இப்பிரச்சினை தீர சில ஆண்டுகள் ஆகலாம். அரசு, தொழிலதிபர்கள், தொழிலாளர்கள், மக்கள் என எல்லோருக்கும் இப்பிரச்சினையைத் தீர்ப்பதில் பொறுப்பு உள்ளது என்றார் ஒபாமா.

# பாகிஸ்தானைக் கைப்பற்ற தலிபான் முயற்சி!

### ஜனாதிபதி சர்தாரி கூறுகிறார்

நியூயோர்க், பெப். 16

''தலிபான் தீவிரவாதிகள் பாகிஸ்தானை கைப்பற்ற முயற்சிக்கிறார்கள். அவர்களிடமிருந்து எங்களை காப்பாற்றிக் கொள்ள கடுமையாகப் போராடி வருகிறோம்.''

-இவ்வாறு பாகிஸ்தான் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரி தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கடந்த வாரம் பாகிஸ்தான் பற்றிக் கூறும்போது, ''பாகிஸ்தான் பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதி தீவிரவாதிகளின் சொர்க்க பூமியாகத் திகழ்கிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனவே, தீவிரவாதத்தை எதிர்த்து பாகிஸ்தான் கடுமையாகப் போராடவேண்டும்'' - என்றார்.

அல்-குவைதா, தலிபான் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகளுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகின்றமை குறித்து, கடந்த புதன்கிழமை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் பாகிஸ்தான் ஜனாதிபதி அசிப் அலி சர்தாரியும் தொலைபேசியில் உரையாடினர் என பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் தெரிவித்தது.

''பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் பெரும் எண்ணிக்கையில் இருக்கிறார்கள் என்பது உண்மை. இதற்குக் காரணம் எங்களது படைப் பலம் பெருக்கப்படாததுதான். இந்தப் பலவீனத்தை தீவிரவாதிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார்கள்'' என பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி, அமெரிக்காவின் சி.பி.எஸ். செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த போது மேற்கண்டவாறு கூறினார்.

பாகிஸ்தான் இராணுவத்தின் ஆதரவு உங்களுக்கு இல்லை என்று கூறப்படுகிறதே எனக் கேட்டபோது ''இது தவறு. இராணுவமும், புலனாய்வு அமைப்புகளும் எனக்கு முழு ஆதரவை அளித்து வருகின்றன. அவர்கள் தங்கள் கடமையைச் செய்யவில்லையென்றால், எப்போதோ பாகிஸ்தானில் அரசு கவிழந்திருக்கும்'' - எனவும் தெரிவித்தார்.

# ஐ.நா.வே, இணைத் தலைமைகளே!.....

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு மாறாக அப்பகுதிகளில் மக்கள் சுதந்திரமாக நடமாடலாம் என்கிறீர்கள்.

ஈராக்கிற்கு அடுத்த படியாக உலகளவில் மக்கள் காணமல் போகின்றனர் என்பதை உலக மனித உரிமைகள் அமைப்புக்கள் அடையா ளப்படுத்தியும் நீங்கள் எவரும் அவற்றிக்கு பரிகாரம் காணாது அப் பகுதிகளினுள் மக்களை போகும்படி கூறுகிறீர்கள்.

சிங்கள ஸ்ரீலங்கா அரசின் ஆளுகையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது தமிழ் மக்கள் கடத்தப்பட்டும் காணமற்போயும் உள்ளமை உங்களுக்குத் தெரியாதா? நூற்றுக்கணக்கில் அல்லாமல் ஆயிரக்கணக்கில் நடைபெற்று முடிந்த இவ்வாறு காணமற் போவதற்கு எதிராக உலக நாடுகள் என்ன செய்தன.

இணைத்தலைமை நாடுகளின் பின்புலத்தில் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைக் காலத்திற்கூட நூற்றுக் கணக்கான தமிழ்மக்கள் இலங்கைத் தீவெங்கும் சிங்கள ஸ்ரீலங்கா அரச படைகளால் இரகசியமான முறையில் காணமல் போகச் செய்யப்பட்டு படு கொலை செய்யப்பட்டமைக்கு எதிராக உலக நாடுகள் எதனைச் செய்தன.

**இறையாண்மை என்ற பெயரில் இன அழிப்பு**

இறையாண்மை என்ற பேரில் நடக்கும் இந்த இன அழிப்பை நீங்கள் அனுமதிக்கிறீர்கள். தமிழினத்தின் மீது இன அழிப்பைச் செய்வது சிறிலங்கா அரசு என்றவுடன் நீங்கள் இறையாண்மை பற்றிப் பேசத் தொடங்கு கின்றீர்கள். இறையாண்மை கொண்ட அரசின் உறவைப் பேணுவதற்காக அல்லது பாதுகாப் பதற்காக நீங்கள் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவு அளிப்பதாகவே நாங்கள் எல்லோரும் கருதுகின்றோம். ஓர் இனத்தை நசுக்க அல்லது அழிக்க நீங்கள் எல்லோருமே ஆதரவு அளிக்கிறீர்கள். தமிழர் உரிமைக்காகப் போராட்டம் செய்தால் வன்முறை அல்லது பயங்கரவாதம் என்றெல்லாம் சொல்கிறீர்கள். தமிழரை 1958 இல் இருந்து ஓர் அரசு அழித்துக்கொண்டிருப்பதை வன்முறையாக நீங்கள் பார்க்கவில்லையா? தமிழினம் இந்தப் பூமியில் வாழும் இனம் இல்லையா? அவர்கள் உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் இல்லையா? நீங்கள் ஏன் எம்மை மட்டும் நசுக்க ஒத்துழைக்கின்றீர்கள்?

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எமது தமிழ் மக்கள் உங்களுக்கு உங்கள் மொழியில் அறவழியில் எனது இனத்தைக் காப்பாற்றுமாறு குரல்களை எழுப்பினார்கள். ஆனால் எதையும் நீங்கள் காது கொடுத்து கேட்கவில்லை. மிகக் கொடூரமாக வதைக்கப்படும் என் இனத்துக்கு என்னால் இங்கிருந்து எதையும் செய்ய முடியவில்லை. குறைந்தது ஆறுதல் சொல்லக்கூட என்னால் முடியாத கையறு நிலையில் இருப்பது குறித்து நான் வெட்கப்படுகிறேன், வேதனைப் படுகிறேன்.

இந்தச் சூழலில் புலம்பெயர் நிலையில் இருக்கும் எனக்கு அவலப்படும் என் மக்களுக்கு செய்யக்கூடியதாக எதுவும் இல்லை. உங்களுக்கு அழுத்தமாக என் இீனத்தின் சார்பில் எனது வேண்டுகோளை தெரிவித்து என் இனத்தை காக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக எனது உயிரை தீயிற்கு கொடுக்க முடிவெடுத்துள்ளேன்.

**உங்களால் ஏமாற்றப்பட்டு விட்டோம் உலகநாடுகளே!**

குறிப்பாக இலங்கை அரசுடன் கை கோர்த்துள்ள இணைத்தலைமை நாடுகளே!

ஐ.நா. நிறுவனமே!

ஒன்றைப் புரிந்து கொள்ளுங்கள். சிங்கள அரசு எமது தமிழ் மக்களுக்கு செய்துவந்த கொடுமைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அந்த நீண்ட துன்பியல் வரலாற்றின் நிகழ்கால பரிமாணமாகவே, தமிழ் மக்களின் பிரச்சினையில் உலக நாடுகளின் தலையீடும் ஏற்பட்டது. உலக நாடுகள் தலையிட்ட போது தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கு மென தமிழ் மக்கள் நம்பினார்கள். ஏன் நானும் கூட நம்பினேன். ஆனால் நிகழ்காலத்தில் நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்கின்றேன்.

சிங்கள அரசின் கபட நாடகத்திற்கு உலக நாடுகளும் துணைபோவதை கண்டதாலேயே இந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனது தமிழ் மக்கள் தங்களது தாய்நாட்டில் கொடுமைப்படுத்தப்படுவதை கண்டும் உலகம் பாராமுகத்துடன் இருப்பது மட்டுமல்லாமல்ஸ்ரீலங்கா அரசை ஊக்குவித்து வருவது கண்டும் மனம் வெதும்பியே உலகப் பொதுமன்றமாம் ஐ.நா. முன்றிலில் தீயின் சாட்சியாக என்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தேன்.

எனது மக்கள் நிர்க்கதியாக விடப்பட்டதற்கும் சிங்கள அரசுடன் சேர்ந்து இணைத் தலைமை நாடுகள் இன அழிப்பிற்கு துணை போனதற்கும் சாட்சியாக ஐ.நா. மன்றத்தின் முன் இந்த தமிழன் முருகதாசன் தீக்குளித்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நீதி கிடைக்கச் செய்வது ஐ.நா வின் பங்கு எவ்வாறானது என ஆய்வு செய்யப்படும் போது ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் சார்பாக இலங்கைத் தமிழ் இளைஞன் முருகதாசன் தீக்குளித்து உயிர் கொடுத்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

சிங்கள அரசின் இன அழிப்பிற்கு துணை போகும் நாடுகளே! ஐ.நாவே! இன்னொன்றையும் புரிந்து கொள்ளுங்கள். நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தின் சோக வெளிப்பாடாக இந்த முருகதாசன் தீக்குளிக்கின்றான். ஆனால் இன்றைய வரலாறு கடந்தகாலமாகும். எதிர்காலத்தின் கோபம் கொள்ளும் தமிழரை அழித்தொழிக்க ஊக்குவித்து உதவி புரிவோர் மீது எமது வருங்கால சந்ததி கோபங்கொள்ளும்.

உலகத் தமிழினமே உங்களுக்கு ஒன்றைக் கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் மனசாட்சியை விழித்தெழவைக்க உலக சமூகத்தின் மனதையும், அறிவையும் வென்றெடுக்க பாடுபட வேண்டும். எமது சுயத்தை நிலை நிறுத்தி எமது உரிமையை நாமே வென்றெடுப்பதற்கான வாய்ப்பும் இதுவே.

எனது தாயக உறவுகளே, சிங்கள அரசின் போலி முகத்தைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அதன் உண்மை முகம் கோரமானது என்பதை பல தடவை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். உடலால் தொலைவில் இருந்தாலும் உணர்வால் உங்களுடனேயே நானும் இருக்கின்றேன். எம்மைகளைப்படையச் செய்து சோர்வுற வைத்து எமது உரிமைகளை எம்மிடம் இருந்து பறித்து விடலாம் என்று சிங்கள அரசு நினைக்கின்றது. சிங்கள அரசின் இந்த எண்ணத்தை சிதறடித்து உறுதியுடன் இருந்து எமது உரிமைகளை நாமே மீட்போம்.

''கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்'' என்றார் இயேசுபிரான். நாமும் எமது உரிமைகளை கேட்போம்; தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருப்போம். சுதந்திரத்தின் கதவு ஒருநாள் எமக்காகத் திறக்கப்படும். எம் மக்களின் நல்வாழ்வுக்கான கதவு ஒரு நாள் திறக்கப்பட்டேதீரும். நாங்கள் கேட்போம். எமது உரிமைகளை கேட்டுகொண்டே இருப்போம். உலகத்திடம், உலக மனச்சான்றின் முன் தொடர்ந்து கேட்போம்.

தமிழரின் தாகம் தமிழீழ தாயகம்.

உண்மைக்காய் உயிர்தரும் தமிழன் முருகதாசன்.*

## கொழும்பிலும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலி உறுப்பினர்கள் பொதுமக்கள் மற்றும் பிரமுகர்களை இலக்கு வைத்து பாரிய தாக்குதல்களை நடத்தும் நோக்கில் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ளனர் என பாதுகாப்பு தரப்பினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே இந்த திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## காயமுற்றோரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிகிச்சை பெற்று வருகின்றனர்.

எஞ்சியவர்களில் கடும் காயங்களுக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த 175 பேர் பஸ்கள் மூலம் வவுனியா நலன்புரி நிலையத்துக்கு நேற்று அனுப்பப்பட்டனர்.

அதேவேளை-

வன்னியில் இருந்து மூன்றாவது தொகுதியினர் இன்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்து வரப்படவிருக்கின்றனர். (அ-1)

## மத்திய மாகாண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொகுதியில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றில் முறைகேடு இடம்பெற்றமையால் அந்த வாக்களிப்பு ரத்துச் செய்யப்பட்டு மறு வாக்குப் பதிவுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதனால் அந்த மாகாணத்தின் இறுதி முடிவு அறிவிக்கப்படவில்லை.

வடமேல் மாகாணசபையின் இறுதி முடிவு வெளியாகாத போதிலும் இரண்டு மாகாணங்களிலும் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு மாபெரும் வெற்றி பெற்றுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இரு மாகாணங்களிலும் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் சராசரியாக 60 வீத வாக்குகளைப் பெற்றுள்ளது.

மத்திய மாகாணத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 6 லட்சத்து 50 ஆயிரத்து 203 வாக்குகளும் 36 ஆசனங்களும் கிடைத்துள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி 4 லட்சத்து 22 ஆயிரத்து 125 வாக்குகளையும் 22 ஆசனங்களையும் பெற்றுள்ளது.

**ஜே.வி.பிக்கு ஆசனம் எதுவும்இல்லை**

ஜே.வி.பியால் மத்திய மாகாணத்தில் 15 ஆயிரத்து, 416 வாக்குகளை மாத்திரம் பெற முடிந்தது. அக்கட்சிக்கு அங்கு ஒரு ஆசனமும் கிடைக்கவில்லை.

புத்தளம் மாவட்டத்தில் வாக்குச்சாவடியொன்றில் இடம்பெற்ற முறைகேட்டைத் தொடர்ந்து அங்கு மறுவாக்குப் பதிவுக்குத் தேர்தல் ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். அதனால் 50 ஆசனங்களைக் கொண்ட வடமேல் மாகாண சபையின் இறுதி முடிவுகள் வெளியாவது தாமதமாகியுள்ளது.

இலங்கையின் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் சுதந்திரமான, நீதியான விதத்தில் மாகாணசபைத் தேர்தல்கள் இடம்பெற்றன என்று தெரிவித்துள்ளன.

வாக்களிப்பு தினத்தன்று 43 வன்முறைகள் இடம்பெற்ற போதிலும் ஒட்டு மொத்தத்தில் தேர்தல் நேர்மையாகவும் சுதந்திரமாகவும் இடம்பெற்றதாக தேர்தலை கண்காணித்த 'கபே' அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (அ-சி)

ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களால் சடலங்களாகி விட்ட வன்னி மக்கள் இவர்கள்

## விமான, பீரங்கி,.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலை நடத்தப்பட்ட ஆட்லெறி, பல் குழல் மற்றும் பீரங்கிச் ஷெல் தாக்குதல்களில் 6 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளதுடன் 17 பேர் காயமடைந்துள்ளனர்.

இதேபகுதியில் நேற்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணியளவில் நடத்தப்பட்ட ஆட்லெறி, பல்குழல் மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் 12பொது மக்கள் பலியானதுடன் 38 பேர் காயமடைந்துள்ளன.

கொல்லப்பட்டவர்களில் யோ.ஜெக தீபன் (வயது - 16), செல்வராசா செல்வகுமார் (வயது - 32), சி.திருச்செல்வம் (வயது 33), சு.குகாஜினி (வயது - 35), பு.இராசம்மா (வயது 55), சோ.யோகானந்தராசா (வயது - 47), வ.நிசாந்தன் (வயது - 26), சி.காமினி தேவி (வயது - 63), சி.நாகவதனி ஆகி யோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் இரண்டு ஆண்கள் மற்றும் பெண் ஒருவரின சடலங்கள் அடையா ளம் காணப்படவில்லை.

இதேவேளை, முள்ளிவாய்க்கால் பகுதியில் உள்ள மக்கள் வாழ்விடம் மீது நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலில் 2 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், அம்பலவன்பொக்கணை பகுதி மீது நேற்று ஞாயிறு இரவு 7.35 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குத லில் சிறுவன் ஒருவன் உட்பட 5 பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் 21 பேர் காய மடைந்துள்ளனர்.

**சனிக்கிழமைத் தாக்குதல்கள்**

புதுக்குடியிருப்பு பகுதியில் கடந்த சனிக்கிழமை இரவு 10 மணியளவில் நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 3 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 சிறுவர்களும் 4 பெண்களும் அடங்குவர்.

சடலங்கள் அந்த இடத்திலேயே தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் அவர்கள் தற்காப்புக்காக வெட்டியிருந்த திறந்த காப்பகழிகளில் அடக்கம் செய்யப்பட்டன.

அதேபோல், கோம்பாவில் பகுதியில் சனிக்கிழமை இரவு 10.15 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலில் 13 பொதுமக் கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

**இரண்டு குடும்பங்கள் முற்றாக அழிந்தன**

இவர்களில் மகேந்திரன் மற்றும் பத்மநாதன் ஆகியோரின் குடும்பங்கள் முற்றாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளன.

மகேந்திரன் சுபாஜினி (வயது - 14), மகேந்திரன் சஞ்சீவன் (வயது - 20), செல்லையா மகேந்திரன் (வயது - 80), மகேந்திரன் சுலோசனாதேவி (வயது - 51), மகேந்திரன் சோபிதா (வயது - 26), மகேந்திரன் தயாளினி (வயது - 25), செல்லையா இராசம்மா (வயது - 69), வி.பத்மநாதன் (வயது - 38), பத்மநாதன் தமிழனி (வயது - 01), பத்மநாதன் ரேணுசா (வயது - 03), பத்மநாதன் கோகில ராணி (வயது - 06), பத்மநாதன் சோதிஜா (வயது - 09), பத்மநாதன் கேதீஸ்வரி (வயது - 31) ஆகியோரே இதில் கொல்லப் பட்டுள்ளனர்.

முள்ளிவாய்க்கால் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு நடத்தப்பட்ட ஷெல் தாக்குதலில் 4 அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் சடலங்கள் இன்னும் அடையாளம் காணப் படவில்லை -என்றுள்ளது.(அ-சி)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாய்லாந்து ''ஏசியன் ரிபியூன்'' இணையத்தளத்துக்கு அளித்துள்ள பேட்டியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

இதேவேளை தமிழ் அரசியல் கட்சிகளுடனான சந்திப்பு அனேகமாக ஒரு வாரத்தில் நடைபெறலாம் என்றும் தமிழ்தே சியக் கூட்டமைப்பும் அழைக்கப்படும் என்றும் கொழும்பில் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னியில் அரசியல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து நான் அவர்களுடன் ஆராயவுள்ளேன். இது மிக வும் அவசரமானது. வன்னியில் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதை இனியும் தாமதப்படுத்த முடியாது என்றும் ஜனா திபதி குறிப்பிட்டுள்ளார்.

வன்னி மக்களை தேசிய நீரோட்டத் துக்கு கொண்டு வருவதற்கான வழிமுறைகள் குறித்து உடனடியாக ஆராயவேண் டும் எனத் தான் கருதுகிறார் எனவும் ஜனா திபதி தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்த மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் அவர்களுக்காக குரல் கொடுப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்குமான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்காத பட்சத்தில் இராணுவ வெற்றிகள் அர்த்தமற்றதாகிவிடும்.

அரசியல் நடைமுறைகளும், புனர்வாழ்வும் சமாந்தரமாக முன்னெடுக்கப்படுவது நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு அவசியமானது.

வடபகுதிக்கான அபிவிருத்தித் திட் டங்களை முன்வைப்பதற்கான தருணமிது. யுத்த வெற்றியை அந்த மக்களுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும்-

யுத்தம் இறுதிக்கட்டத்தை அடைந்து விட்டது. இதன் காரணமாகவே மக்களின் தேவைகள் குறித்து அரசு கவனம் செலுத்துகின்றது- என்றும் ஜனாதிபதி தமது பேட்டியில் தெரிவித்தார்.

இதேவேளை -

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், தமிழ் மக் கள் விடுதலைப் புலிகள், தமிழ் ஜனநாயக தேசிய முன்னணி, ஈ.பி.ஆர்.எல். எவ். (பத்மநாபா பிரிவு), மலையக மக்கள் முன்னணி, ரெலோ ஆகிய கட்சிகள் அழைக்கப்பட விருக்கின்றன என அரச வட்டாரங்கள் கூறியதாகத் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்புக்கு பிரதி அமைச்சர் சுரேஷ் வடிவேல், நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்தி முரளிதரன், வடிவேல் புத்திரசிகாமணி ஆகியோரும் அழைக்கப்படுவர் என்றும் அந்த வட்டாரங்கள் கூறின. (அ-சி)

## கப்பூதுவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு வழங்கும் பணியில் ஈடுபட்டிருந்த படையினர் மீது இனந் தெரியாத ஆயுததாரிகள் தாக்குதல் நடத் தினர் என்றும்-

படையினர் பதில் தாக்குதல் நடத்தியதில் இருவர் கொல்லப் பட்டனர் என்று படைத்தரப்பில் அச்சுவேலிப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது.

மின்மாற்றியை தகர்க்க இருவர் முற்பட்டனர் என்றும் அவர்கள் மீது தாக் குதல் நடத்தியதாகப் படையினர் தெரிவித் தனர்.

இச் சம்பவத்தை அடுத்து உயிரிழந்த இருவரது சடலங்களையும், இறந்தவர்கள் வைத்திருந்ததாகக் கூறப்படும் ரி56 ரக துப்பாக்கி ஒன்றையும் ஆறு குண்டுகளையும் மற்றும் இதர வெடிபொருள்களையும் தாங்கள் மீட்டனர் என்றும் படைத்தரப்பில் கொழும்பில் கூறப்பட்டது. (அ-1)

## தெல்லிப்பழை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைகளைச் செயற்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் -

- ✱தெல்லிப்பழை வைத்தியசாலையை அதற்குரிய இடத்திலேயே இயக்குவதற்கு முன்னோடியாக வைத்தியர்கள் தமக்குரிய விடுதிகளில் தங்குவதற்கு அனுமதிக்கப் படுவர்.
- ✱ வைத்தியசாலையில் உள்ள ' கதிர் வீச்சு ('எக்ஸ்றே') இயந்திரத்தையும் இயக்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.
- ✱ தெல்லிப்பழை மகாஜனா, யூனியன் கல்லூரி மாணவர்கள் பஸ்களில் நேரடியாக சோதனை நிலையம் வரை செல்வதற்கு அனுமதிக்கப்படுவர்.

சோதனை நிலையத்தில் இருந்து அரை கிலோ மீற்றர் தூரத்துக்கு அப்பால் இருந்து மாணவர்கள் நடந்து செல்லும் நடைமுறை நீக்கப்படும்.

- ✱தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் இரவு காவலாளி ஒருவர் தங்க அனுமதிக்கப்படுவார்.
- ✱ தெல்லிப்பழை சோதனை நிலையத்தில் இருந்து ஆஸ்பத்திரி வரை செல்லும் வீதியின் புனரமைப்பு வேலை உடனடியாக ஆரம்பிக்கப்படும். (அ-1)

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை குமரவிநாயகன்

*(Computer Senior Designer)*

அனலதீவை பிறப்பிடமாகவும்,
அரியாலையில் வசித்து,
கனடாவை வாழ்விடமாகவும் கொண்ட
கணபதிப்பிள்ளை குமரவிநாயகன்
நேற்று அதிகாலை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஓய்வுபெற்ற ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கணபதிப்பிள்ளை – திருபுவனேஸ்வரி தம்பதியினரின் பாசமிகு மூத்த புதல்வரும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை சின்னம்மாவின் அருமை மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், மோகனாம்பிகை, சிவவேலன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், யோகராஜா, காலஞ்சென்ற தியாகராஜா மற்றும் தவமணிகதிரவேலு ஆகியோரின் மைத்துனரும், ஜெயசக்தி ஜெயராம், சத்தியா, தனேஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் புதன் கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரா.புவனேஸ்வரன்.
உடன்பிறவா சகோதரன்.
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை.

392.நாவலர் வீதி.
அரியாலை.

mtex
MP4 Players
MP3 Players
மிகக்குறைந்த விலைகளில்
Computer,DVD Players & TV Compatible
Home Theatre 5.1 Elegant 4000W With Remote
Home Theatre 5.1 Elegant 4800W With Remote
Authorized Distributor
MICRO PC SYSTEMS
யாழ் :175/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 0212225893, 0773126712
நெல்லியடி : கொடிகாமம் வீதி, நெல்லியடி. 0773039536

பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் விற்பனையாகின்றது
பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின்
யாழ்ப்பாண விற்பனை முகவரான
துர்க்கா ஸ்ரேஷனேர்ஸ்,
பஸ்நிலையம், சுன்னாகம்.

THE SCIENCE CORNER
Clock Tower Lane, Jaffna
BIOLOGY- 2011 A/L
புதிய அலகு ஆரம்பம்
ஆரம்பம்:- 17.02.2009 செவ்வாய்:- 4.00-5.30
சு.பொன்திவாகரன்

PC REPAIRS
HOT LINE
021 222 5893
PC stuck
LCD Problems
Virus Problems
Display problems
Memory errors
Windows problems
Power supply/Pack Problems
Capture Card problems
Internet & Email Setup
Net-2-Phone configuration
Printers, Scanners & other Software/Drivers installation
MICRO PC SYSTEMS
Kodikamam Road, Nelliady. Tel: 077 3039536

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.